00

1700

22 MAR 1933
MADRAS

Regd. No. 2569

ஹிபாஜத்துல் இஸ்லாம்

மலர் 4

செந்தமிழ் மாதசஞ்சிகை

இதழ் 3

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரீ 1351 'துல்கஃதாமீ' 1933 மார்ச்சுமீ

உள்ளடக்கம். பக்கம்.

1. ஸூரத்துல் இன்ஷிகாக் ... 81
2. நாயக வாக்கியம் ... 84
2. சங்கங்களின்பயன் ... 85
4. காஷ்மீரில் காதியானிபித்னா ... 86
5. காதியானிக் கொள்கையைவிட்டுத் திரும்பினர் 87
6. வெற்றிபெற்றோரின் வரலாறுகள் ... 89
7. நம்மை அடிமையாக்கி வைத்திருப்பது எது? 94
8. சுகாதாரம்'! ... 97
9. ருஷ்யாதேச முன்னேற்றமுறை ... 99
10. இஸ்லாத்தின் விவேகார்த்தபோதனைகள் 102
11. எம்பிரான் (ஸல்) அவர்களின் வாழ்க்கை 107
12. பாதுஷாவும் பகீராய்விடுகிறார் ... 110
13. காஜா கமாலுத்தீனும், பா. தா. வும் ... 114
14. ஞானதூதனும், பெரியநாயகமும் ... 116
15. நிரூபசாரம் ... 119

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

K. R. SARMA

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3 0 0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு ...	,,	4 0 0
தனிப் பிரதி ...	,,	0 4

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF ... 22 MAR 1933 ... MADRAS

حفاظة الاسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 4	ஹிஜ்ரி 1351 துல்கஃதாமீ 1933 ௵ மார்ச்சு மீ	இதழ் 3

(அளவற்ற) அருளாளனும் (நிகரற்ற) அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு (இதனை ஆரம்பிக்கிறோம்)

ஸூரத்துல் இன்ஷிகாக்.

1. வானம் பிளவுபடும் பொழுது,

2. இன்னும் (அது) தன் நாயனின் கட்டளைக்கு வழிப்படும் (பொழுது), இன்னும் (அது) வழிப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

3. மேலும் பூமியானது பரத்தப்படும் பொழுது,

4. இன்னும் (அது) தன்னுள்ளிருப்பதை வெளியாக்கிவிட்டு, மேலும் அது வெறுமையாய்ப் போய்விடும் (பொழுது),

5. மேலும் (அது) தன் நாயனின் கட்டளைக்கு வழிப்படும் (பொழுது), இன்னும் (அது) வழிப்பட்டு நடக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

6. ஏ மனிதனே! நிச்சயமாக பெரும்பிரயாசையோடு உன்னுடைய நாயனின் முடுதலைப் பெருவதற்குப் பாடுபட்டு அவனைச் சந்திக்கிறவனாக யிருக்கிறாய்.

7. ஆதலின் எவனுடைய வலக்கரத்தில் அவனுடைய பட்டோலை கொடுக்கப்பட்டதோ,

8. அவன் இலேசான கணக்கைக்கொண்டு கணக்குக் கேழ்க்கப் படுவான்;

9. மேலும் அவனைச் சேர்ந்தவர்களிடத்திற்குச் சந்தோஷமாக மீளுவான்.

10. மேலும் எவன் தன் முதுகுக்குப்பின் தன் பட்டோலையைக் கொடுக்கப்பட்டானோ,

11. அவன் மரணத்தை அழைப்பான்

12. மேலும் நரகத்தில் புகுவான்

13. நிச்சயமாக அவன் (அதற்குமுன்) தன் குடும்பத்தார்களுடன் சந்தோஷமாக யிருந்தான்

14. நிச்சயமாக அவன், தான் மீளானென எண்ணிக் கொண்டிருந்தான்

15. (காரியம்) அவ்வாறில்லை! நிச்சயமாக அவனுடைய நாயன் அவனைப் பார்த்துக் கொண்டே யிருக்கிறான்

16. நான் மாலைச்சிவப்பைக்கொண்டு பிரமாணஞ் செய்கிறேன்

17. மேலும் இரவைக்கொண்டும், இன்னும் அது சேகரித்திருந்ததைக் கொண்டும் (பிரமாணஞ் செய்கிறேன்)

18. இன்னும் சந்திரன் பூர்ணமாகும்போது அதைக்கொண்டும் (பிரமாணஞ் செய்கிறேன்)

19. நிச்சயமாக நீங்கள் ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்வீர்கள்

20. ஆதலின் ஈமான் கொள்ளாமலிருப்பதற்கு அவர்களுக்கு என்ன ஏற்பட்டிருக்கிறது?

22. இன்னும் அவர்கள் மீது குர்ஆன் ஓதப்படுமாகில், அவர்கள் ஸஜ்தா செய்வதில்லை

22. என்றாலும் காபிர்கள் பொய்யாக்கி வைக்கிறார்கள்

23. அவர்கள் (மனதில்) மறைத்துவைத்திருப்பதை அல்லாஹ் அறிகிறான்

24. ஆதலின் அவர்களுக்கு கடிசான வேதனையைக் கொண்டு அறிவிப்பீராக

25. ஆனால் (ஈமான்) நன்னம்பிக்கை கொண்டு, நற்கருமங்கள் புரிந்தோர்களுக்கோ மட்டில்லா சன்மானமுண்டு.

[அதாவது, வானம் பிளவுபட்டு அது தன் நாயனின் கட்டளைக்கு வழிப்பட்டு நடக்கும் பொழுது, இன்னும் பூமி பரத்தப்பட்டு அது தன்னுள்ளிருப்பதை வெளிப்படுத்திவிட்டு வெறுமையாய்ப் போய்விடும்பொழுது நீங்கள் எழுப்பப்படுவீர்கள். ஏ மானிடனே! நிச்சயமாக உன்னுடைய நாயனளவில் முடுகுதலாவதைப் பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்கிறவனாகயிருக்கிறாய். எவன் தன் நாயனை சந்திக்கும்பொழுது அவனுடைய செயல்களின் பட்டோலையை வலது கரத்தில் பெற்றுக்கொள்கிறானோ, அவன் இலேசாக்க் கணக்குக் கேள்க்கப்பட்டு சந்தோஷமாகத் தன்னைச் சேர்ந்தவர்களிடம் திரும்புவான்; எவனுக்கு முதுகுக்குப் பின் புறமாக பட்டோலை கொடுக்கப்படுகிறதோ அவன் தான் புரிந்த கெட்டவேலைகளிலிருந்து விடுதலைபெற்றுவிடுவதற்காக எவ்வகையிலும் தனக்கு மரணம் வந்துவிடவேண்டுமென்று ஆதரவுவைப்பான். கடைசியில்அவனது இன்னுட்டம் கைகூடிவராமல் எறிகிற நெருப்பில் நுழைவான். அவன் உலகின்கண் தன்னைச் சேர்ந்தவர்களுடன் சந்தோஷ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தான். அவன் இவ்வாறு சந்தோஷ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்ததற்குக் காரணம், அவனை மறுமைநாளில் மீளவைக்கப்படமாட்டாதென அவன் கருதியிருந்ததேயாகும். காரியம் அவன் எண்ணிக் கொண்டிருந்ததுபோலல்ல. நிச்சயமாக மானிடனுடைய ஆரம்ப முதல் கடைசிவரையிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் அல்லாஹ் தஆலா பார்த்துக் கொண்டேயிருக்கிறான். நிச்சயமாக நீங்கள் இவ்வுலகத்தை விட்டுக் கடந்து சென்றபின் ஒவ்வொரு நிலைமையினின்று வேறு நிலைமைக்குச் செல்வீர்கள் என மாலைச் சிவப்பைக் கொண்டும் இரவைக்கொண்டும் அது சேகரித்து வைத்திருப்பவைகளைக் கொண்டும் இன்னும் சந்திரன் பூர்ணமாகும்போது அதைக் கொண்டும் நான் சத்தியஞ் செய்கிறேன். இவ்வாறான பஹிரங்க அத்தாக்ஷிக்குப் பின் ஈமான் கொள்ளாமலிருப்பதற்கு அவர்களுக்கு என்ன ஏற்பட்டுப் போய்விட்டது மேலும் அவர்களிடம் குர்ஆனின் கட்டளைகளை எடுத்துக் கூறப்பட்டால், அதற்குத் தலை சாய்க்காதிருந்துவிடுகின்றனர் எனவே இம்மை மறுமையின் கஷ்ட சங்கடங்கள் நீங்க வழி காண்பித்த அரும் வேதமாகிய குர்ஆனை அவர்கள்மீது இறக்கி வைத்ததற்காக நன்றி செலுத்துவான்வேண்டி ஸஜ்தா செய்கிறார்களில்லை. இதற்கு மாற்றமாய் அதனைப் பொய்யாக்கிவைக்கிறார்கள். அவர்கள் மனதில் மறைத்துக்கொண்டிருப்பதை அல்லாஹ் தஆலா அறிகிறான். ஆதலின் அவர்களுக்குக் கடிசான வேதனையைக்கொண்டு அச்சமூட்டுவீராக. ஆனால் அவர்களில் ஈமான்கொண்டு நற்கருமங்கள் புரிந்தோருக்கு மட்டில்லா நற்கூலியுண்டு என்பதே]

இத்திரு அத்தியாயம் மக்கியாம். இதன் ஆரம்பத்தில், மறுமை நாளில் ஆண்டவனது கட்டளைப் பிரகாரம் வானங்கள் பிளவுப்பட்டுப் போகும் விஷயம் குறிப்பிடப்பட்டிருப்பதால் இவ் வத்தியாயம் "ஸூரத்துல் இன்ஷிகாக்" பிளவு படுவதின் அத்தியாயமென்னும் திருப்பெயருடன் அழைக்கப்படுகிறது.

இதன் முதல் இரண்டாவது வாக்கியத்தில், "வானம் பிளவுபட்டு அது தன் நாயனின் கட்டளையை நிறைவேற்றுவதற்குத் தயாராகயிருக்குங்கால்" எனக்கூறப்பட்டிருப்பதால், இவ் வாக்கியங்களானது அநேக துர்க்கொள்கைகளையும் வீண் எண்ணங்களையும் அகற்றி விடுகிறது. அதாவது, அநேக மானிடர்கள் தங்களுக்கேற்படும் நலவு கெடுதிகளுக்கு வானத்தையே காரணமாகக் கருதி, அதனாலேயே நலவு இடர்கள் ஏற்படுகிறதென உறுதி கொண்டிருந்தனர். இதனை ஆதாரமாகக் கொண்டு எத்தனையோ புலவர்கள் தங்கள் காரியம் கைகூடிவராத காலத்தில் வானத்தை தூஷித்துக் கொண்டிருந்தார்கள். இது வன்றி அநேகர் வானத்தில் தோன்றும் கிரஹங்களையும் பூஜித்துக் கொண்டிருந்ததுடன் அவைகளிடம் தங்கள் கோரிக்கைகளையும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இக் காலையுங்

கூட சிலவர்க்கத்தார் அவ்வாறு செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறான தப்பெண்ணங்களை எல்லாம் போக்குவான் வேண்டி, ஒரு நாள் வானம்பிளவுபட்டு அதிலுள்ள கிரஹங்களெல்லாம் ஒளிவற்றதாகக் கீழே விழுந்து விடும் ; இவைகளெல்லாம் தன்னால் படைக்கப்பட்டதும், அழிந்து போகக் கூடியதுமாகும்; ஒரு வரையறையான காலம் வரையிலிருந்து பிறகு நாசமாய் விடக்கூடியதாகும். என அல்லாஹ் தஆலா விளக்கி அவர்களின் எண்ணங்கள் தவறானதாகுமென தெரிவிக்கின்றான்.

இதன் 2-வது வாக்கியத்தின் முற்பகுதியை 5-வது வாக்கியத்தில் மடக்கிக் கூறப்பட்டிருக்கிறதென சிலர் தவறாகக் கருதுகின்றனர். விஷயம் அவ்வாறன்று. 2-வது வாக்கியத்தில் வானத்தின் நிலைமையையும், 5-வது வாக்கியத்தில் பூமியின் நிலைமையையும் எடுத்துக் காண்பிப்பதற்காக அவ்வாறு கூறப்பட்டிருக்கிறது என்பது சாதாரண அறிவுடையோருக்கும் எளிதில் புலனாகும்.

ஏ மானிடனே! வெகு பிரயாசையோடு உம்முடைய நாயனின் முடுகுதலைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கிறவனாகயிருக்கிறாய். அல்லாஹ் தஆலா இந்த சக்தியை உனக்களித்திருக்கிறான். ஆனால் வானம் பூமி முதலியவைகளுக்கு அந்த சக்தி கிடையாதாகையால் அவ்வாறு முடுகுதலைத் தேடவேண்டுமென்னும் எண்ணமும் அவைகளில் உண்டாவதில்லை. ஆகவே ஆண்டவனுடைய இதர படைப்புகள் ஆண்டவனுக்கு வழிப்பட்டு நடப்பதைப் பார்க்கிலும் நீ தக்க முறையில் நடந்து கொள்ளவேண்டியது அத்தியா அவசியமாகும். அவ்வாறு செய்யாதிருப்பாயாகில் உம்முடைய நாயனை சந்திக்கும் நேரத்தில் பெரும்வெட்கப்படும்படி நேரிடும். அவ்வாறு உம்முடைய நாயனைச் சந்திக்கும் நேரத்தில் நலவு இடர் முதலியவைகள் எழுதிவைக்கப்பட்ட பட்டோலையை உமது வலது கரத்தில் அளிக்கப்படுமாகில், அது சீதேவித்தனத்திற்குள்ள அடையாளமாகும். அதற்குப் பின் இலேசாகக் கணக்குக் கேள்க்கப்பட்டு சந்தோஷமுடையவனாய் உம்மைச் சேர்ந்தவர்களிடத்திற்குத் திரும்பிச் செல்வாய். பிறகு வேதனையுடைய பயமே உமக்கேற்பட மாட்டாது. உம்மைச்சேர்ந்தவர்களிடம் கூடியிருப்பதின் சந்தோஷமும் வேதனையைவிட்டுத் தப்பித்துக்கொண்ட ஆனந்தமும் ஒன்றுசேர்ந்து உனக்குப் பெரியதோர் மகிழ்ச்சியை உண்டு பண்ணி வைத்துவிடும். இதற்கு மாற்றமாய் உம்முடைய பட்டோலை பின்புறமாகக்கொடுக்கப்படுமாகில், அஃது பெரும் வேதனை உண்டென்பதை அறிவிக்கக் கூடிய அடையாளமாகயிருக்கும். அது பொழுது எவ்விதத்திலாகிலும் மரணம் ஏற்பட்டுவிடுமாகில், வேதனையைவிட்டு விடுதலை அடையலாமென ஆதரவு வைப்பாய். அந்த ஆதரவு எவ்வகையிலும் கை கூடிவராமல் சுடர்விட்டெறியும்படியான நெருப்பில் விழும்படி நேரிடும் என்பது திண்ணம்.

உங்களுடைய மரணத்திற்குப் பின் நன்மையான விஷயங்களுக்கு நற்கூலியும் தீமைக்குத் தெண்டனையும் ஏற்படும் என்னும் விஷயம் உங்கள் அறிவுக்கெட்டாது போனால், நான் சொல்வதையாகிலும் ஒப்புக்கொள்ளுங்கள். பிறகு அதன் மீதும் உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லையாகில் என் அபார சக்திக்குள்ள அடையாளமாகிய மூன்று வஸ்துக்கள் மீது பிரமாணஞ்செய்து கூறுகிறேன். அதாவது, மானிடர்களே! நீங்கள் ஒரு பதவியிலிருந்து மறு பதவிக்குச் செல்ல வேண்டியதிருக்கிறது. ஆரம்பத்தில் தாயின் வயிற்றிலிருக்கும்போது ஒருபதவி ஏற்பட்டிருந்தது பிறகு அதைக்கடந்து வெளியில் வருவதென்னும் பதவிக்கு வந்துவிட்டீர்கள். பிறகு, சிறுபிராயமென்னும் பதவியைக் கடந்து வாலிப தசையை அடைந்தீர்கள். அதற்குப்பின் விர்த்தாபிய தசையை அடைந்து அதைவிட்டுக்கடந்து மரணமடைந்து ஆலமபர்ஜகிலிருந்துவிட்டு அங்கிருந்து கணக்குக் கேள்க்கப்படுவதற்காக மஹ்ஷர் மைதானத்திற்குவந்து அப்பதவியிலிருந்து சுவர்க்கமோ அன்றி நரகமோ போய்ச்சேரும்படி நேரிடுமென அறிவிக்கின்றார்.

இதன் 21-வதுவாக்கியத்தில், அவர்கள்மீது குர்ஆன் ஓதப்படுமாகில் அவர்கள் ஸஜ்தாச் செய்வதில்லை எனக்கூறுகின்றார். அதாவது, மானிடனுக்கு குர்ஆன்ஷரீபானது இம்மை மறுமையின் வழியைக்காண்பிக்கக் கூடியதாகயிருக்கிறது ; அவ்வாறான குர்ஆன் ஷரீபை மாறுபாடுடையவர்கள்மீது ஓதிக் காண்பிக்கப்படுமாகில், அதன்கட்டளைக்குக்கீழ் படியா

மலோ அன்றி இவ்வாறான மேலான வேதத்தை அளித்து இம்மை மறுமை முதலியவைகளில் மானிடனுக்கு ஏற்படும் சகலகஷ்டங்களைப் போக்கிவைக்கும் அரும்பெரும் வேதத்தை அளித்ததற்கு நன்றி செலுத்துவதற் கறிகுறியாக ஸஜ்தாச் செய்யாமலோ ஆண்டவனுக்கு வழிப்படாமலிருக்கின்றார்கள் என்பதே.

இதன் 22-வது வாக்கியத்தில், நன்றி செலுத்துவது எங்கே! அதனைப் பொய்யாக்கியே வைக்கிறார்கள்; அல்லாஹ் அவர்கள் மனதில் மறைத்து வைத்திருக்கும்படியான உலகின் ஆசாபாஷம் மறுமையை மறுப்பது முதலான சகலவிஷயங்களையும் நன்கறிந்திருக்கிறான் எனக்கூறுகின்றான். (வல்லாஹு அஃலம்)

நாயக வாக்கியம்

கியாமத் நாளில் அடியானிடம் (ஆண்டவனை ஒருமைப்படுத்தி வைக்கும் விஷயம்) தவ்ஹீதுக்குப்பின் தொழுகையைப்பற்றித்தான் கேழ்க்கப்படும். ஆகவே, மானிடன் தொழுகையை நிறைவேற்றிவைக்க எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறான் என்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

தொழுகையானது 'தீன்' என்னும் கட்டடத்தின் தூணாகும்; எவன் தொழுகையை விட்டுவிட்டானோ அவன் தீன் என்னும் கட்டடத்தை இடித்தெரிந்தவனாகுமென்று எம்பெருமானார் நபியயகரீம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எந்த வணக்கத்தை எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தீனுடைய தூண் என்றும், அதனை நிறைவேற்றுவது தீனை நிலைநிறுத்திவைப்பதென்றும், அதனை விட்டுவிடுவது தீனை இடித்துவிடுவதற் கொப்பாகுமென்றும் கூறியிருக்கின்றார்களோ, அது எத்துணை தூரம் மேலான காரியமாகும் என்பதை சாமான்யரும் நன்கு தெரிந்துகொள்வர். ஐந்து நேரத்தின் தொழுகையாகிறது, ஒருவனுடைய வாசலில் ஓடும் தண்ணீர்க் கால்வாய்போலிருக்கிறது; அம்மனிதன் அத்தண்ணீரில் தினம் 5 முறை குளிப்பது கொண்டு அவனுடைய திரேகத்தில் ஏற்படும் அழுக்குகளெல்லாம் நீங்கி அவன் சுத்தமாய் விடுவதுபோல, ஐந்து நேரத்துத் தொழுகையை நிறைவேற்றுவது கொண்டு அவனுடைய பாவங்கள் யாவற்றும் மன்னிக்கப்பட்டுப் போய்விடுகிறதென உலகதயாளர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். எவ்வாறான உன்னதமுறையில் தொழுகையின் மேன்மையை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் எடுத்துக் காண்பித்திருக்கிறார்கள் பாருங்கள்! உண்மையாகவே மானிடன் தன்னைப் படைத்துக் காப்பாற்றிவரும் நாயனின் சன்னிதானத்தில் நாளொன்றுக்கு ஐந்துமுறை நிற்பானாகில் அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படாமலிருப்பதற்கு எவ்விதக் காரணமும் கிடையாதென்பது திண்ணம்.

எவன் ஐந்துநேரத் தொழுகையையும் பேணுதலுடன் நிறைவேற்றி வருகிறானோ மறுமையில் அவனுக்கு விடுதலையும் கார்மானமும் ஏற்பட்டு விடுமென சத்தியத் தூதர் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதனால் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தொழுகையை நிறைவேற்றுவதின் அவசியத்தை வற்புறுத்திக் கூறியும், அதனால் ஏற்படும் பிரயோசனங்களைத் தக்க முறையில் எடுத்தறிவித்துமிருப்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம்.

எவன் வேண்டுமென்றே தொழுகையை விட்டுவிடுகிறானோ அவன் நீண்ட காலம் நரகத்தில் வேதனைசெய்யப்படுவான் எனக் கூறி, அதனை விட்டுவிடுவதால் ஏற்படும் தண்டனையை எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் நன்கெடுத்துக் காண்பித்திருக்கிறார்கள்.

இவ்வாறான மேன்மைதங்கிய - மானிடனை உன்னதஸ்திதிக்குக் கொண்டுசேர்க்க வல்ல தொழுகையை நிறைவேற்றும் பாக்கியத்தை ஏகவல்ல நாயன் நம்மெல்லோருக்கும் தந்து மறுமையில் உன்னதஸ்திதியை அடைந்து மேலான பதவியைப் பெற்று விளங்கும்படி கிருபை பாலிப்பானாக.



சங்கங்களின் பயன்

வட நாட்டின் கண் வதியும் நமது முஸ்லிம் சோதிரர்கள், மார்க்கதேச சேவைபுரிவதற்கு சங்கங்கள் இன்றியமையாச்சாதனமென வெகுநாளைக்கு முன்பே கருதியிருந்ததன்பயனாய், அவைகளைத் தக்கமுறையில் அமைத்து அதன்மூலமாய் சமூகமார்க்கத் தொண்டாற்றி அநேக பிரயோசனங்களடைந்துவந்திருக்கிறார்களென்பது வெள்ளிடை. இதனைக் கண்ணுற்ற-சீர்திருத்த அவாமேலிட்ட நம் நாட்டுச் சோதரர்களிற் சிலரும் சமூக மார்க்கத் தொண்டாற்றுவதற்கென்று ஆங்காங்கு பற்பல சங்கங்களை நிறுவியிருப்பதும் பாராட்டத்தக்கதேயாகும். என்றாலும் நம் நாட்டில் தோன்றியுள்ள சங்கங்களில் ஒரு சிலதைத் தவிர இதர சங்கங்களால் மார்க்கத்திற்கும் சமூகத்திற்கும் எத்துணை நற்பயன்கள் ஏற்பட வேண்டுமோ அத்துணை நற்பயன்கள் உண்டாகாமலிருப்பதற்கு நாம் வருந்தாதிருக்க முடியவில்லை. எனவே அச்சங்கங்கள் எந்த நோக்கங்களைக் கொண்டு நிறுவப்பட்டனவோ, அந்நோக்கங்களைக் கிரியாம்சையில் செய்து காட்டுவதில் அவைகள் வெகுதூரம் பிற்போக்கடைந்திருக்கின்றன வென தைரியமாய்க் கூறலாம். தற்கால நமது முஸ்லிம் சமூகத்திற்கும் தேசத்திற்கும் நாம் ஆற்ற வேண்டிய தொண்டை ஒவ்வொரு சங்கமும் மேற்கொண்டு ஊழியம் புரிய முன்வரவேண்டுமென்று நமது தலைவர்கள் ஒன்று கூடிப் போடும் கூக்குரல், நம் தென்னிந்திய முஸ்லிம் சங்கங்களின் விஷயத்தில் செவிடன் காதில் ஊதிய சங்கோசைக் கொப்பாயிருக்கிற தென்னும் செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள நேர்ந்தமைக்காக விசன மடையாதிருக்க முடிய வில்லை.

இது ஒரு பக்கல் கிடக்க, ஒவ்வொரு ஊர்களிலும் நிறுவப்பட்டிருக்கும் சங்கங்கள் அவ்வூர்களைப் பொருத்தமட்டிலாகிலும் அந்தந்த ஊர்வாசிகளுக்குப்போதிய சீர்திருத்தத்தையும் கல்வி ஞானத்தையும் இஸ்லாமிய நாகரீகத்தையும் போதித்து, அங்குகாணப்படும் அனுச்சாரங்களையும் வீண்டாம்பீகச் செலவுகளையும் அர்த்தமற்ற சடங்குகளை நிறைவேற்றுவதையும் தடுத்து சீர்திருத்த முன்வந்ததாகவும் தெரியவில்லை. எனவே (1) முஸ்லிம் சமூகத்தினர் மார்க்க சட்டதிட்ட வரம்புக்குட்பட்டு நடந்து வரும்படி செய்வது, (2) நிகாஹ், கத்னா முதலியசடங்குகளில் வீண்டாம்பீகச்செலவு செய்து விடாமல் பாதுகாப்பது, (3) சன்மார்க்கத்திற் கொவ்வாத ஷிர்க், பித்அத்முதலிய மாபெரும்பாவகரமான காரியாதிகள் நடைபெறாது பார்த்துக்கொள்ளுதல், (4) முஸ்லிம் சிறுவர்சிறுமிகளுக்கு மார்க்காபிமானம் சமூகாபிமானம், பொதுநல ஊக்கம், சமூகச்சேவை முதலிய காரியாதிகளில் ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும்படி செய்வது முதலிய அரும்பெரும் காரியாதிகளை நமது சங்கங்கள் மேற்கொண்டு ஊக்கத்தோடு கிரியாம்சையில் செய்துகாட்டுமாகில், அவைகள் தேசத்திற்கு முன்மாதிரியாய் நின்றிலங்குமென்பது திண்ணம். ஆகவே நமது தென்னிந்தியாவில் நிறுவப்பட்டிருக்கும் சங்கங்கள் இனியாகிலும் மேலேகூறப்பட்டிருக்கும் உத்தமகைங்கரியங்களிலீடுபட்டுழைக்க முற்பட்டு பொதுவாய் சமூகதேசிய மார்க்கத் தொண்டாற்றிவருவதுடன் குறிப்பாய் அந்தந்த ஊர்களுக்குத்தேவையாயுள்ளவைகளைப் பூர்த்தியாக்கி வைப்பதிலும் வீண்டாபீக அனுச்சாரக் காரியாதிகளை ஒழிக்கும் சேவையிலும் யீடுபடவேண்டியது மிக மிக அத்தியா அவசியமாகுமெனக் கருதுகின்றோம். இவ்வாறு பொதுநலச் சேவைகளில் நம் சங்கங்கள் ஈடுபட்டு வேலைசெய்துவருமாகில், கூடிய சீக்

கிரம் அச்சங்கங்களுக்குப் போதுஜன ஆதரவு கிடைத்து முன்னேற்ற மடையுமென்பது நிச்சயம். தவிர, ஆங்காங்குதோன்றும் சங்கங்கள் பொருளாதார விஷயத்தில் வெகுதூரம் க்ஷீண திசை அடைந்திருப்பதற்கு, அச்சங்கங்கள் தமது பொறுப்புகளைத் தக்கமுறையில் உணர்ந்து அவைகளை ஒழுங்கானமுறையில் செய்ய முன்வராத்ததே காரணமாகுமென்பது நமது திடமான நம்பிக்கையாகும். ஆகவே மேலே கூறப்பட்டுள்ள உத்தம கைங்கரியங்களில் ஈடுபட்டுழைக்க ஒவ்வொரு சங்கங்களையும் முன்வரும்படி வேண்டிக் கோள்கிறோம்.

காஷ்மீரில் காதியானிபித்னு

காதியான் கம்பெனியின் ஏஜண்டுகள், காஷ்மீரில் தங்கள்வழிகெட்ட கொள்கைகளைப்பரத்த முயற்சித்து அதற்காகத் தக்கமுறையில் வேலைசெய்ய முற்பட்டிருக்கின்றார்கள். எனவே அவர்கள் காஷ்மீர் முஸ்லிம்களைத் தங்கள் மாயவலையில் சிக்கவைக்கப் பஹீரதப் பிரயத்தனஞ் செய்து பலவாறான தந்திரோபாயமான முறைகளைக் கையாள முற்பட்டிருக்கின்றார்கள். அங்குள்ள சாதாரண முஸ்லிம்களைத் தங்கள் வலையில் சிக்க வைக்க கையாண்டுவரும் முறைகளில், காஷ்மீர் கமிட்டி என்னும் பெயரால் பொது ஜனங்களிடமிருந்து பணந்திரட்டி அவர்களுக்கு உதவிசெய்து வருவதுபோல் பாவனை காட்டி வருவது மொன்றாகும். ஆனால் அங்குள்ள விவேகசாலிகளான மார்க்க பக்தியுள்ள முஸ்லிம்கள், காதியான் ஏஜண்டுகள் புரிந்துவரும் தந்திரமான செயல்களைக் கண்டு வியப்படைகின்றார்கள். பொதுவாக காதியானிகள் புரிந்துவரும் சூக்ஷிகளானது முஸ்லிம் சமூகத்திற்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கும் கெடுதியை விளைவிக்கக் கூடியதாயிருக்கிறதென்பதும், இஸ்லாம் மார்க்கத்திற்கு நஷ்டத்தை விளைவிக்க பஹீரதப்பிரயத்தனஞ் செய்யப்பட்டு வருகிறதென்பதும் யாருக்குத்தான் தெரியாதிருக்கிறது? அந்தரங்கத்தில் செய்யப்படும் கெடுதியானது வெளிரங்கக்கெடுதியைப் பார்க்கினும் மிகமிகபாதகமுடையதாகுமென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமேயாகும். எனவே காதியானிகள் தாங்களும் முஸ்லிம்கள்தானென்று பாவனைகாட்டி நடித்து முஸ்லிம்களை அந்தரங்கத்தில் வழிகெடுக்க முயற்சித்துவருகின்றனர். காதியானி மார்க்கமானது, ஒரு குடும்பத்திலுள்ள பிள்ளையை தகப்பனை விட்டும், தாயைப்பிள்ளைவிட்டும், சகோதரனை தன் சகோதரர்களைவிட்டும், பெண்சாதியைப் புருஷனைவிட்டும் பிரித்துவிடக்கூடியதாயிருக்கிறதென்பது யாருக்குத்தான் தெரியாதிருக்கிறது ?

ஒரு குடும்பத்தில் ஒருவன் காதியானி மார்க்கத்தைத் தழுவிக் கொள்வானாகில், (ஆண்டவன் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்) அவன் கலிமாச் சொல்லிய ஒவ்வொரு முஸ்லிமையும் அவன் தகப்பனாயினும் சகோதிரனாயினும், சட்டபூர்வமாய் காபிரென்றும் இஸ்லாமிய பந்தத்தைவிட்டுப் புறம்பானவனென்றும் அவனுக்குப் பின்னின்று தொழுவது கூடாதென்றும் கருதுகின்றான். தவிர, அவன் மரணமாய் விடுவானாகில் அவனுக்காகத் தொழுது பிழை பொறுக்கத் தேடுவதையும் ஆகாக்கருமமென உறுதிகொள்கிறான். எனவே, காதியானிகளை இஸ்லாத்தின் ஜென்ம விரோதிகள் என அழைப்பதற்கு என்ன தடை ஏற்பட்டிருக்கிறது? அவர்கள் இஸ்லாத்தை அடியோடு கெல்லி எறிவதற்கு முயற்சிப்பதைத் தங்களுக்குள்ள முதற்கடமை எனக்கருதியிருக்கும் நிலைமையில், அவர்கள் சன்மார்க்கத்திற்கு முற்ற முற்ற விரோதஞ் செய்து வருகிறார்களெனக் கூறுவது மிகையாகாதென்பது திண்ணம்.

ஆகவே இஸ்லாத்தின்மீதும் முஸ்லிம்கள் மீதும் உண்மையாகவே பற்றுதலுடையவும், எம்பிரான் (ஸல்.) அவர்கள்மீது முழுமனதோடு பிரீதி கொண்டிருக்கக் கூடியவும், காஷ்மீர் முஸ்லிம்கள்மீது அனுதாபமுடையவுமான முஸ்லிம்கள், காஷ்மீர் முஸ்லிம்கள், காதியான் கம்பெனியாரின் துர்ப்பிர

சார ஏமாற்றவலையில் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வதையும் அதற்காகுமான தந்திரோபாயங்களைத் தேடுவதையும் தங்கள் மார்க்கக்கடமை எனக்கருத வேண்டியது அத்தியா அவசியமாகும். அவ் வேலையைக் கவனிப்பதற்கு இதுதான் தக்க சந்தர்ப்பமாகும். கூடிய சீக்கிரம் அவ் வேலையிலீடுபட்டு வேலை செய்யவேண்டும். அவ்வாறில்லையாகில் நம்முடைய கவனக்குறைவானது, காஷ்மீர் முஸ்லிம்களை வழிகேட்டிலாக்கிவிடுவதற்குள்ள கொடிய நஞ்சாக ஏற்பட்டுவிடும் என்பது திண்ணம். ஆகவே காதியான் ஏஜண்டுகளின் நஞ்சுகலந்த பானத்தைக்கண்டு காஷ்மீர் வாசிகள் ஏமாந்து போவதற்கு முன்பே ஜாக்கிரதையாய் நாம் வேலை செய்யவேண்டும். ஏகத்துவத்தின் பிரகாசமும் சத்தியத்தூதர் (ஸல்.) அவர்களின் பிரீதியும் மனதில் குடிகொண்டிருக்கும் நாம், இஸ்லாமிய ரோஷத்தை வெளியாக்கி சத்திய இஸ்லாத்தின் உண்மைக் கொள்கைகளை காஷ்மீர் முஸ்லிம்களிடையே பரத்த முற்படல்வேண்டும்; இஷாஅத்துல் இஸ்லாம் என்னும் உத்தம கைங்கரியத்தை அதிசீக்கிரம் காஷ்மீரில் ஆரம்பிக்கவேண்டும்.

இக் காரியத்திற்காக ஆரம்பத்தில் இரு பிரசாரர்களை, காஷ்மீருக்கு அனுப்பி, மிர்ஜாயிகளின் வழிகெட்ட கொள்கைகளை பொது ஜனங்களுக்கு எடுத்துக்காட்டி அவர்கள், வழிகேடர்களின் மாயவலைக்குள் சிக்கிக் கொள்ளாதிருக்கும்படி செய்யவேண்டும். இஸ்லாத்தின் பகைவர்கள் சகல முஸ்திப்புகளுடன் வேலைசெய்து வருங்காலை, மார்க்காபிமானங் கொண்டுள்ள முஸ்லிம்கள் இஸ்லாத்தின் பாதுகாப்பு விஷயமாய் தக்க தியாகஞ்செய்ய முற்பட்டுவருதல் அவர்கள் மீதுள்ள முக்கியக் கடமையாகும்.

ஆகவே ஒவ்வொருவர்களும் இவ்வுத்தம காரியத்தில் ஈடுபட்டு காஷ்மீரிலுள்ள நமது சோதிரர்களாகிய சாதாரண பொது முஸ்லிம்கள், வழிகேடர்களின் மாயவலையில் சிக்குண்டுபோகாமலிருக்க தக்கன செய்ய அதிசீக்கிரம் முன் வரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

காதியானிக் கொள்கையைவிட்டுத் திரும்பினர்.

மௌலானா அப்துற்றஹ்மான் சாஹிப் (கோட்டா, ஜாமிஃமஸ்ஜித் இமாம்) வரைவது

"முபாஹலா" பத்திராசிரியர் அவர்கட்கு

அஸ்ஸலாமு அலைக்கும்

ஆண்டவனது கிருபையால், ராவல்பிண்டி ஜில்லாவைச் சார்ந்த கோட்டா என்னுமூரில் மிர்ஜாய் வகுப்பார் பெரும் தோல்வி அடையும்படி நேர்ந்துவிட்டதென்னும் சந்தோஷகரமான செய்தியை ஜமீன்தார் பத்திரிகை மூலம் தாங்களறிந்திருப்பீர்களென நம்புகிறேன். இவ்வூரில் சப் போஸ்டு மாஸ்டர் ஒருவர், மிர்ஜாயிக் கொள்கைகளைப் பரத்திவந்ததின் பயனாய், இரண்டொருவர் மிர்ஜாய்களாய் விட்டதுடன் அவர்கள் மெள்ளமெள்ள வழிகெட்ட அக்கொள்கையை இதரர்களிடையேயும் பரத்த முற்பட்டு அதற்காக மகாநாடுகள் நடத்த ஆரம்பித்தனர்.

ஆரம்பமாக ஒரு மகாநாடு கூடும் விஷயமாய் அறிக்கை வெளியிடப்பட்டது. ஆனால், என் பிரயாசையால்போலீஸார் தானே அதில் குறுக்கிட்டு அக்கூட்டத்தைத் தடுத்துவிடும்படி நேர்ந்துவிட்டது. எனவே காதியானிப் பிரசாரகர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும்படி நேர்ந்துவிட்டது. பிறகு அப் பிரசாரகர்கள் ஜில்லாவின் தலைநகருக்குச் சென்று அங்குள்ள காதியானி உத்தியோகஸ்தரின் ஆதரவு பெற்று போலீஸ் சூப்ரெண்டினிடம் அனுமதிபெற்றுத் திரும்பி வந்து, பிரசங்கஞ் செய்யப்போவதாய் அறிக்கை வெளியிட்டார்கள். ஆனால், "யாரும் வழிகேடர்களின் பிரசங்கத்திற்கு இடங் கொடுக்கலாகாது; அக்கோஷ்டியினர் முஸ்லிம்களுக் கிடையே பிளவை யுண்டுபண்ண முயற்சிக்கின்றனர்; உஷாராக இருக்கவேண்

டும்'' என நான் ஜாமிஃமஸ்ஜிதில் யாவருக்கும் தெரியப்படுத்தியிருந்தேன்.

அக்கோஷ்டியார் ஆரம்பத்தில் ஒரு சத்திரத்தில் பிரசங்கம் நடைபெறப் போகிறதாக அறிக்கை வெளியிட்டிருந்தார்களாயினும் அச் சத்திரத்தின் அதிபர் அதனைத் தடைசெய்துவிட்டார். பிறகு அங்குள்ள சிற்றரசரின் பங்களாவில் பிரசங்கம் நடைபெறுமெனத் தெரிவித்திருந்தனர். முடிவில் அங்குள்ள காவலாளிகள் அதனைத் தடுத்துவிட்டார்கள். பிறகு, பெண் பாடசாலையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த நேரத்தில் அதன் தலைமை உபாத்தினி அப் பாடசாலையைப் பூட்டிவிட்டாள். பிறகு ஒரு சிக் வகுப்பாருக்குச் சொந்தமான இடத்தில் நாற்காலி மேஜை முதலியன போடப்பட்டது. இவ்விஷயம் சிக் தலைவருக்குத் தெரியவே உடனே அவர் அந்த இடத்திற்குச் சென்று மேஜை நாற்காலி முதலியவற்றை அங்கிருந்து அகற்றிவிடும்படி செய்துவிட்டார். பிறகு வேறொரு சிக் முதலாளிக்குச் சொந்தமானதும், போஸ்டுமாஸ்டர் குடியிருக்கக் கூடியதுமாகிய ஒரு இடத்தில் மீட்டிங் கூடுவதாக ஏற்பாடு செய்துவைக்கப்பட்டிருந்தது. இச்செய்தி அவருக்குத்தெரிந்து, அவர் அந்த இடத்திற்கு வந்து மீட்டிங் நடத்தக் கூடாதெனத் தடுத்துவிட்டார். பிறகு கடைத்தெருவிலுள்ள நடு முச்சந்திக்குச் சென்று மீட்டிங் நடத்த முற்பட்டனர். ஆனால், அதற்கு முன்பாகவே முஸ்லிம் வாலிபர்கள் அந்த இடத்தில் மேஜை நாற்காலிகளைப் போட்டு வைத்திருந்ததால், போலீஸார் குறுக்கிட்டு பொது ரஸ்தாவில் வழிப்போக்கர்களின் சௌகரியத்திற்கு இடஞ்சலாய் யாரும் மீட்டிங் நடத்தக்கூடாதெனத் தடை செய்துவிட்டார்கள்.

இதனைக் காதியானிகள் சகியாதவர்களாய், போலீஸ் சப் இனிஸ்பெக்டரை நோக்கி, பன்றி நாய் முதலிய பிராணிகள்கூட தமதிஷ்டப்படி பூமியில் நடந்து செல்வதற்கு சுயேச்சை பெற்றிருக்கின்றன; மானிடர்களாகிய எங்களுக்கு எவ்விதச் சுதந்திரமுமில்லாதிருக்கிறது என முறையிட்டுக்கொண்டார்கள். அதற்கு சப் இனிஸ்பெக்டர், நான் உங்களுடைய கார்மானத்திற்குப் பொருப்பாளியாக இருக்கிறேனேயன்றி மீட்டிங் நடத்துவதற்கு இடவசதி செய்துக்கொடுக்கப் பொறுப்பாளியாக இருக்கவில்லை; நீங்கள் ஒரு இடத்தைத் திட்டப்படுத்திக் கொள்ளாமல் பிரசங்கத்திற்காக எப்படி அறிக்கை வெளியிட்டீர்கள்? எனக்கேட்டார். இந்நிகட்சிகளுக்குப்பின் காதியானிப் பிரசாரர்கள் பிரசங்கம் செய்வதற்காக தங்கள்வீட்டிலாகிலும் தோது செய்து கொடுக்கும்படியோடு சப் இனிஸ்பெக்டரை தாழ்மையோடு கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர், தம் வீட்டுக்கு எதிரிலுள்ள ஒரு காலி இடத்தைக் காண்பித்து அதில் பிரசங்கத்தை நடத்திக் கொள்ளும்படி கூறினர். எல்லோரும் அந்த இடத்திற்குச் வந்துசேரவே, அதற்குடையவர் அங்குவந்து மீட்டிங் நடத்தக்கூடாதென தடைசெய்துவிட்டார். அங்கு ஏராளமான முஸ்லிம்கள் கூடியிருந்தார்களாதலின் யாவரும் "அல்லாஹுஅக்பர்'' என்னும் ஓசையை வானமளாவச் செய்து "ஒரு புதிய நபி தோன்றி யிருக்கிறாராம்'' என பரிகாசஞ் செய்ய முற்பட்டு விட்டனர். இதனைக் கண்ட காதியானிகள் நல்லோரைக்கண்டு "ஷைத்தான்'' விரண்டோடுவதுபோல் விரண்டோடிவிட்டார்கள்.

சப் போஸ்டுமாஸ்டராகிய பாபு அல்லா பக்ஷ் என்பார், காதியானிப் பிரசாரஞ் செய்துகொண்டும் முஸ்லிம்களை வழிகெடுக்க முயற்சித்துக் கொண்டும் வரும்செய்தியை கோட்டா முஸ்லிம்கள், போஸ்டல் சூப்ரெண்டுக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்திக் கொண்டார்கள். இதனை விசாரித்துத் தெரியப்படுத்துவதற்காக ஒரு இனிஸ்பெக்டர் அங்குவந்து விசாரித்துச் சென்றதின் பயனாக "நீர் காதியானிக் கொள்கையை மக்களிடையே பரத்த முற்படுவீராகில் உமக்கு விரோதமாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி நேரிடுமென'' போஸ்டு மாஸ்டருக்கு அதிகாரத்தோரணையில் எச்சரிக்கை செய்யப்பட்டது.

இவைகளின் பயனாய் இவ்விடத்தில் ஆண்டவனது கிருபையால் ஒவ்வொரு முஸ்லிமும் காதியானிக் கொள்கையை மிகவே வெறுத்துக் கொண்டிருக்கின்றனர். மிர்ஸாயி மதத்தைத் தழுவியிருந்த 2, 3 நபர்களும் ஆண்டவனது கிருபையால் காதியானிகளின் ஏமாற்றமான வஞ்சகச் செயல் வெளியானவுடன் (தவ்பாச்செய்து) அதைவிட்டுத் திரும்பி

சுன்னத் ஜமாஅத் கொள்கையைப் பின்பற்ற முற்பட்டுவிட்டனர்.

(1) குலாம் காதர் சிக்னாபட்னி என்பார், காதியானுக்குச் சென்று 'பைஅத்' அறுதிமானஞ் செய்துவந்திருந்தார் அவர், பெரும் திரளான கூட்டத்தினிடையில் எழுந்து அக் கொள்கையை விட்டுத் தவ்பாச் செய்து சுன்னத்வல்ஜமா அத்தைப் பின்பற்றிக் கொண்டார்.

(2) முஹம்மத்கான் என்னும் இளம்பிராய முடைய மாணாக்கரொருவர், ஒரு பிரசங்கக் கூட்டத்தில் மௌலவீ ஜவ்ஹர் அஹ்மத் அவர்களின் முன்னிலையில் காதியானிக் கொள்கையை விட்டுத் தௌபாச் செய்து மிர்ஜாவை பொய்யனென்றும் இக்காலத்தில் தோன்றிய "முஸைலமத்துல் கத்தாப்" என்றும் தாம் எண்ணுவதாக பஹிரங்கமாகக் கூறினார்.

(3) ஷேக் குலாம் நபி என்னும் மிர்ஜாயியும் அதே கூட்டத்தில் தவ்பாச் செய்து மீண்டு விட்டார்.

இதுபொழுது ஆண்டவனது கிருபையால் கோட்டாவில் காதியானிப் பிரசாரத்தின் வாயல் அடைபட்டுப் போயிருக்கிறது. இதுவெல்லாம் உலமாக்களினுடையவும் ஜமீந்தார், முபாஹலா பத்திரிகைகளினுடையவும் பிரசாரத்தினாலேற்பட்ட பயன்களேயாகும். அல்லாஹ்தஆலா உலமாக்களையும் சன்மார்க்கத்திற்காக உழைத்துவரும் பத்திரிகைகளையும் காப்பாற்றி மென்மேலும் சமூகமார்க்கச் சேவையிலீடுபட்டுழைத்து வரும்படி செய்வானாகவும்.

சோதரர்காள்! வடநாட்டில் காதியானிப் பிரசாரத்தின் கதி எந்த நிலைமையிலிருக்கிறதென்பதைப் பார்த்தீர்களா! வழிகெட்ட, மறைமுகமான பிரசாரத்தினாலல்லவா நம் நாட்டிலும் அவ்வியாதி பரவிவருகிறது. இதுவன்றி, வழிகெட்ட அப்பிரசாரத்தின் பயனாய் ஒரு சில இடங்களில் காதியானிக் கொள்கை பரவி அந்தந்த இடங்களில் ஒற்றுமையாகயிருந்த சமுகத்தினருக்கிடையே பிளவுதோன்றி அநேகப் பொதுநல காரியங்களுக்குத் தடை ஏற்பட்டுப் போயிருக்கிறது. இதுவெல்லாம் மறைமுகமான பிரசாரத்தால் விளையும் பயன்களல்லவா? இனியாகிலும் அப்புல்லுருவிகள் சமுக ஒற்றுமை, மார்க்க அபிமானம் முதலிய நலன்களை யுண்ணிப் பார்த்து மறைமுகமான தீயப்பிரசாரத்தை விட்டொழித்து வழிகெட்ட காதியானிக் கொள்கைகளின் கெடுதிகளை பொதுஜனங்கள் பால் எடுத்துக் காண்பித்து அதனைத் தவிழ்ந்து நடக்கும்படி செய்வதற்குள்ள சேவையிலீடுபடுவார்களாக.

வெற்றிப் பெற்றோரின் வரலாறுகள்.

முன்னேற்ற மடைதற்குரிய மார்க்கம் எத்துணை தூரம் கரடுமுரடானதாயும், மனோ சஞ்சலமான கஷ்ட நஷ்டங்களைத் தரத்தக்கனவாயுமிருந்தபோதிலும், நிச்சயமாக நாம் அவ்வழியில் குன்றா ஊக்கமும், குறையாத் தைரியமும் பூண்டு மென்மேலும் உழைத்துவருவோமாகில், நாம் அவசியம் காரியசித்தியும் வெற்றியும் பெற்று முன்னேற்ற மடைவோமென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை என்பது திண்ணம். ஆனால் சோம்பற் சுபாவமும் கோழை மனமுமுடையோர் ஆரம்பவழியின் கரடுமுரடான இக்கட்டுகளைக் கண்ட மாத்திரமே தைரியமிழந்து ஊக்கங்குன்றித் தாழ்வான வீழ்ச்சியே யடைந்து போவார்கள்.

எவர் தாம் எடுத்துக்கொண்ட காரியத்தினை சிறிதும் சோரவிடாமல், அதனால் நேரிடும் ஆரம்ப இடையூறுகளைச் சகித்துக் கொண்டு, அக்காரியத்துக்குரிய திறமையைத் தன் தன்மையில் அமைத்துக் கொள்ளுகின்றாரோ அன்னவரே அத்துறையில் வெற்றியுங் கீர்த்தியும் பெற்று முன்னேற்ற மடையக்கூடியவராவர். தம் இயற்கைச் சுபாவத்திலேயே சுறுசுறுப்பும் தைரியமும் உடையவரது அவயவங்களும் எண்ணங்களும் எப்போதும் சுறுசுறுப்புடையன வாகவே இருக்கும். இதன் பயனாய் அன்னவர் எடுத்த காரியங்களிலெல்லாம் வெற்றியும் முன்னேற்றமும் பெற்றுத்திகழுவார்.

முயற்சியும் உழைப்பும், முதியவர்கட்கு கைக்கோல் போலும், இளைஞர்கட்கு வீர வாள் போலும் உதவுஞ் சாதனங்களாகும். தவிர, அவ்வித முயற்சியும் உழைப்பும், நோயாளிகளை சுகாரோக்கிய சுவாதீனப் படுத்தி வைக்கும் சஞ்சீவியாகவும், கோழை மனத்தினரை தைரிய சிங்கமாக்கும் ஜீவப் பூஷணமாகவும் விளங்கும். இதற்கு நேர் முரணான சோம்பலும், கோழைத்தனமும் மனுஷ்யரின் ஜீவியப்பாங்கைச் சீர்கெடுத்து அவர்களது வாழ்க்கையினை நிராச்சஞ்சல மென்னும் முட்புதரில் போட்டுவிடும் கேடான சாதனங்களாகும். ஆகையால் மானிடர் தமது ஜீவிய காலத்தைச் சந்தோஷத்துக்குரிய பூங்காவனமாகவோ, அல்லது முட்கள் அடர்ந்த காடாகவோ செய்து கொள்ளல் இயலும்.

குன்று ஊக்கமும் ஓயா உழைப்பும் புரிந்து முயற்சித்தோர் எவ்வித வெற்றியுமின்றி தோல்வியுற்ற ஏதேனும் சம்பவம் சரித்திரத்திலே கிடையாது. இத்தாரணியில் வெற்றி சீலர்களாகவும் கோவேந்தர்களாகவும் விளங்கிய முன்னோர்களெல்லாம், தத்தம் ஊக்கத்தாலும் உழைப்பாலுமே உலக வியவகாரங்களில் ஜயக்கொடி நாட்டி கீர்த்தியோங்க வாழ்ந்தார்களென்பது சரித்திரவாயிலாய் ஐயமற விளங்கா நிற்கின்றது. அங்ஙனம் ஊக்கத்தாலும் உழைப்பாலும் தைரியத்தாலும் உலக விவகாரங்களில் வெற்றிப்பெற்று கீர்த்தியோங்க வாழ்ந்துவந்த ஜய சீலர்களில் சிலரின் சுருக்கமான வரலாற்றினை ஈண்டெடுத்தோதுவோமாக :—

வில்லியம் ஸீஸர் என்னும் பண்டை வேந்தன் ஓர் சமயம் தமது சகாக்கள் புடைசூழ உட்கார்ந்து பூர்வ உலக சிரேஷ்டராய் விளங்கிய மகா சிக்கந்தருடைய வெற்றி வரலாறு சரிதையைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அங்ஙனம் ஆராய்ச்சிச் செய்து கொண்டே இருக்கும்போது திடுமென தேம்பித் தேம்பி யழலானான். அதுசமயம் அருகே வீற்றிருந்த சகாக்கள், ஸீஸரை நோக்கி, "எங்கள் வேந்தரே! தாங்கள் இங்ஙனம் இருந்தாற்போல் அழுவதின் காரணம் யாதோ" வென வினவினார்கள்.

அதற்கு வில்லியம் ஸீஸர் கூறிய பதிலாவது:—அந்த மகாசிக்கந்தர் தன் முயற்சியால் உலகத்தில் வெற்றிப்பெற்று கீர்த்திக்குரியராய் விளங்கியபோது, அவர் என் வயதினும் மிக மிகச் சிறுபிராயத்தினராயிருந்துள்ளார். அங்ஙனம் அவர் அக்கால வயதில் என்னினும் மிகச்சிறியராயிருந்துங்கூட ஆண்மையிலும் ஆற்றலிலும் வீரப்பராக்கிரமத்திலும் என்னைக்காட்டிலும் பன்மடங்கு சிரேஷ்டமானவராய் விளங்கியுள்ளார். அங்ஙனம் அவர் தம் பால்யத்திலேயே அடைந்த வெற்றிக் கீர்த்திகளிற் சிலவற்றினைகூட யான் என் முதுமைப் பிராயம் வரையில் கூட அடையப் பெற்றேனில்லையே! எனவே எனது அபஜயத்தையும், கீழான ஸ்திதியையும் நினைத்துத் தான் அழுகின்றேன்" என்பதாகும்.

ஸீஸர் இங்ஙனம் நினைத்து அழுதது, அவரது குன்று ஊக்கத்தையும், பிறரது வெற்றியினை யுணர்ந்து தக்கப்படிப்பினைப் பெறும் வீரப்பான்மையையும் இனிது விளக்குவதாகும். இங்ஙனம் வீரப்பராக்கிரமசாலிகளின் வாழ்க்கை வரலாறுகளை உணருங்கால், அஃதோடு நம்முடைய சுபாவத்தையும் ஈனஸ்திதியையும் ஒத்திட்டுப்பார்த்து புதிய ஊக்கமும், முன்னேற்ற உணர்ச்சியுங் கொள்வதே அறிஞர்களுடைய தன்மையாகும்.

மேனாட்டுக் கவிச்சிரேஷ்டர்களில் கீர்த்திக்குரியவரான 'மில்ட்டன்' என்பார் தமது 21-வது வயதிலேயே இணையில்லாவண்ணம் அதியற்புதமான தத்துவங்கள் ததும்பும் கவிகளை எழுதி இணையிலாவண்ணம் உலகத்தின்கண் கீர்த்திப் பெற்றுவிளங்கினர். எனவே, அவரது நாமத்தை ஒவ்வோர் அறிவாளிகளும் போற்றிப் பிரஸ்தாபிக்கலானார்கள். அங்ஙனமிருந்துமவர், தமது பால்ய காலத்திலேயே அத்தகைய கீர்த்தியைப் பெறாது 21 ஆண்டுகளைக் கழித்துவிட்டமைக்காக அடிக்கடி வருத்தப்படுபவராக யிருந்தார்.

உலகத்தின்கண் அந்தந்த காலத்தின் சிரேஷ்டர்களென்று பெயர் பெற்று விளங்கியவர்களாகிய மிஸ்டர் மில்டன், மிஸ்டர் ஸீஸர் முதலியோரின் வாழ்க்கை வரலாறுகளை ஆழ்ந்து கவனித்துப்பார்த்தால் அவர்கள் அத்தகைய கீர்த்திப் பிரதாபம் பெறுதற்குள்ள முக்கிய காரணமாய் இருந்த அம்சம், அவரவர்களுடைய ஊக்கமும் உழைப்பும் உதார குணங்களுமாகவே காணப்படு

கின்றன. ஒவ்வொரு கீர்த்தியாளரும் தங்கள் பிரயாசையெனும் வியர்வை உலக வாழ்க்கை யெனும் நிலத்தில் விழ பெருமிதமாய் உழைத்த பின்னரே அத்தகைய கீர்த்திப் பிரதாபத்தைப் பெற்று முன்னுக்கு வந்துள்ளார்களென்பதை அன்னோரதுசரித்திரவாயிலாய் ஐயமற அறிந்து கொள்கின்றோம்.

வெற்றி, கீர்த்தி என்பனவெல்லாம், கருமமே கண்ணாய் பரநல நோக்கத்தோடு பாடுபடும் உத்தம மனிதர்க்கு அவர்களுடைய பிரயாசைக்குப் பிரதிபலனாக இறைவனால் அருளப்படும் சன்மான அருளேயாகும். இத்தகைய தெய்வீக அருளைப் பெறுவது சர்வ சாமன்யர்களால் முடிந்துவிடக் கூடிய காரியமல்ல; சோம்பேறிகளாலும், சுயநலப் புருஷர்களாலும் கிடைக்கப் பெறும் காரியமுமல்ல.

வெற்றியுங் கீர்த்தியும், உண்மையான சந்தோஷத்துக்கு அறிகுறியாகும். அவ்வுண்மையான சந்தோஷம் மலையைத் தோண்டி அரும் பிரயாசைகளுக்குப் பின் சுரங்கத்தினின்று எடுக்கப்பெறும் விலைமதிக்கொணு அரும்பெரும் வைரத்துக்கொப்பானதாகும். நவரத்தினங்கள் மலையையும் மண்ணையும் தோண்டி எடுக்கப்படுவதெனின், உண்மைச் சந்துஷ்டியானது பிரயாசையினுலும் ஊக்கத்தினுலும் எடுக்கப்படுவதாகும்.

மனுஷ்ய கோடிகளின் சரீர அமைப்பானது ஓர் அற்புத மெஷினுக்கு ஒப்பானதாயிருக்கின்றது. உலக வழக்கப்படி மெஷினை அனுதினமும் இயங்கச் செய்து அதனுல் பல காரியங்களை நாம் சாதித்துக் கொள்ளாமல் அம்மெஷினை மூலையில் வியர்த்தமாகப் போட்டு விடுவோமானுல், அது துருப்பிடித்து அமைப்புகள் குலைந்து பழுதாகிக்கெட்டுப் போமென்பதில் ஐயமில்லை. அவ்வாறே இயற்கை மெஷினைப் போன்ற மனிதரும் தங்கள் உடல், அறிவு, மூளை ஆகிய அங்கங்களை யோசனையினுலும், ஊக்கத்தினுலும், முயற்சியினுலும் இயங்கச் செய்து உழைப்புக் கொடுத்துப் பயன் பெறல்வேண்டும். வேலையில் இயக்கப்படாத மெஷினனது கெட்டு வியர்த்தமாகி விடுவதைப் போன்றே ஊக்கமும் உழைப்புமில்லாத மாந்தரும் சோம்பலென்னும் துருப்பிடித்து, சீர்கேடென்னும் கஷ்ட நஷ்ட சஞ்சலங்கட்குள்ளாய் ஒழிந்து போகின்றனர்.

“ஹறகத்மே பறகத்ஹோத்தீஹய்” என்பது உர்து முதுமொழி. “உழைப்பினுல் பாக்கியாபி விருத்தியுண்டாம்” என்பது இதன் பொருள். இதுமிகமிக தர்மநியாயமான விஷயமாகும். இறைவனது இயற்கைக் கட்டளையும் இதற்கொப்பவே, மானிடர் எக்காலும் உழைப்பு இல்லாமல் சோம்பிக் கிடத்தல் கூடாதென அறிவிக்கின்றது. மனுஷ்யனானவன் மறதிக்கு உறைவிடமாய் இருப்பதால், ஆண்டவனின் கட்டளையையும் அவன் சிலசமயங்களில் மறந்தொழுகும்படி நேரிட்டுவிடுகிறது. ஒரு சாரார்க்கு இறைவன் நுண்ணறிவையும் தேகசக்தியையும், ஆரோக்கியத்தையும், செல்வ பாக்கியத்தையும், குறைவர அருள்புரிந்திருந்துங் கூட அன்னோர் அப்பாக்கியங்களைப் பிரயோஜன முள்ளதாகச் செய்துகொள்ளாமல் சோம்பேறிகளாகவும், கோழைகளாகவும், நஷ்டவாளிகளாகவுமாய் விடுகின்றனர். இத்தன்மையானது கண்ணிருந்து பார்த்துக்கொண்டே கிணற்றில் வீழ்வதற் கொப்பாகும். இதுவன்றி ஒரு சிலர்க்கு இறைவன் செல்வபாக்கியமும், தேகதிடகாத்திரமும் அருள்புரிந்தில்லாதிருப்பினுங் கூட அன்னோர் தங்கள் அறிவாற்றல்களைக் கூர்மையாக்கிக்கொண்டு, அதனுல் ஊக்கமும் தைரியமுங் கொண்டு, நன்ருய் உழைத்து அளவற்ற பிரயோஜனங்களை அடைகின்ருர்கள். உதாரணமாய் செவிடர், குருடர், ஊமையர் முதலானோர் தங்கள் அறிவாற்றலை பயன்படுத்திக் கொண்டு கவலையற்றகால க்ஷேபம் புரிவதோடு தம் மனைவி மக்கள் உற்ருர் முதலியோரையும் தம் உழைப்பின் பயனாய் காப்பற்றி வருவதைக் காண்கின்றோம். அதற்கு நேரிடையாக, பிதுர்ராஜித செல்வமும், தேகாரோக்கியத்திடமும், கல்வியறிவும் பெற்றுள்ள தனவந்தர் வீட்டு இளைஞர்களிற் எத்தனையோ பேர்கள் ஊக்கமாயும் உற்சாகமாயும், உழைக்க வகையின்றி சோம்பற்கொண்டு ஒரு தம்பிடியும் சம்பாதிக்க வகையற்று இருப்பதையும், வீண் விரயஞ் செய்துகொண்டு நடைப்பிணங்களாய்த் திரிவதையுங் காண்கின்றோம்.

இங்ஙனம் ஒருசாரார் பிரயோஜனங்களடைந்து நாளுக்குநாள் மேன்மையும் முன்

னேற்றமு மடைவதும், மற்றொருசாரார் சோம்பித்திரிந்து சீர்கெட்டொழிவதும் அவரவர்களது ஊக்கம், உழைப்பு, இவைகளால் ஏற்படுகிறதென்பதிலெய்யமில்லை. ஊக்கத்துடன் உழைத்து ஒரு பிரயோஜனமு மில்லாமல் முழுதும் கெட்டுப்போனவர்கள் இத்தரணியில் எவருங் கிடையாது. உதாரணமாய், பண்டைய காலத்தில் மேனாட்டில் நெப்போலியன் போனபார்ட் என்னும் வெற்றிவேந்தன் ஒருவன் இருந்தானென்பதை பள்ளிச்சிறார் முதல் அறிவுடையோரனைவரும் உணர்வர். இந்த நெப்போலியன் ஆதியில் எந்தஸ்திதியில் இருந்தானெனின், அவனோர் அர்ப்ப சிப்பாயாகவே இருந்து பிறகு அவன் தன் குன்றா ஊக்கத்தினாலும் ஓயாஉழைப்பினாலுமே உத்தியோகத்தில் மேன்மேலும் உழைத்து சீரும் சிறப்பும் பெற்று உலகையாளும் மன்னனாய்விளங்கி வந்து, இன்றும் உலகமக்களால் வீரவேந்தனென போற்றப் படுகிறான். அப்படிப்பட்ட நெப்போலியன் கூறியிருப்பதாவது:—

"என்னுடைய எதிரிகள் தோல்வியுற்றுப் போவதற்குக் காரணம் அவர்கள், ஊக்கத்துடன் உழைப்பதனாலான பிரயோஜன இரகசியத்தை உணராததேயாம். தவிர அன்னோர், காலத்தை அருமையென மதித்து பயன் படுத்திக்கொள்வதை உதாசினஞ் செய்து விடுவதும், சொற்ப அவகாசத்தை அர்ப்பமெனத் தள்ளிவிடுவதும் அன்னோரது வீழ்ச்சிக்குக் காரணமாகும். காலத்தை அருமையெனமதித்து ஊக்கத்துடனுழைத்துப்பயன் பெறாத காரணத்தினால் தான் அன்னோர் என்மீது சிறிதும் ஐயங் கொள்ளாதிருந்து விட்டனர்" என்பதாகும்.

நேயர்காள்! நெப்போலியனது அருமைக் கருத்தில்திகழும் முதுமொழியின் உட்கருத்தினை ஊன்றி கவனித்துப் பாருங்கள். ஒரு சிறு நேரம் அவகாசமாய்க் கிடைப்பினும் அதனை வியர்த்தமாகப் போக்கிவிடாமல் பிரயோஜனமான ஏதேனுமோர் காரியத்தைச் சாதித்து நன்மைப் பெறுதல் வேண்டுமென்பதே அவரது அருங்கருத்தாகும். நிற்க,

ஓவிய நிபுணனான மேனாட்டு வாலிபனொருவன் ஓர் அழகிய இராணியின் சித்திர உருவத்தைத் தீட்டுவதற்காக விரும்பி, அவ்வரசியின் சமூகத்தில் வேண்டிக்கொண்டனன். ஆரம்பத்தில் அவ்வரசி தன் உருவத்தினை ஓவியஞ்செய்து கொள்ள அச்சித்திரக் காரனுக்கு அனுமதிக் கொடுத்துவிடவில்லையாயினும், அதிகமான வேண்டுதலுக்கும், சிரமத்துக்கும் பிறகே அதற்கு சம்மதிக்கலானாள். எனவே "இன்ன தேதியில் இத்தனை மணிக்குச் சரியாக இன்னகுறிப்பிட்ட இடத்துக்கு வந்தால் ஓவியம் எழுத சந்தர்ப்பம் அளிப்பேன்" என நிபந்தனையிட்டாள். அவ்வோவியக்காரன் சற்று அசிரத்தையான சுபாவமும், சமயசந்தர்ப்பத்தைக் கை நழுவவிடக் கூடியவனாகவு மிருந்தமையால், இராணி குறிப்பிட்டுக்கூறிய நேரத்துக்கு வராமல் ஒரு சிலமணிநேரம் தாமதித்து வந்தான். ஆனால், இராணியோ காலங்கடத்தா காரிகையாயிருந்தமையால்குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்டகாரியத்துக்கு வாக்களித்த வண்ணம் வந்து காத்துக்கிடந்தும், அவ்வோவியக்காரன் வராமையால் திரும்பித் தன் காரியங்களை கவனிக்கப் போய்விட்டாள். காலங் கடந்துவந்த ஓவியக்காரன், அரசி வந்துகாத்திருந்துப் போய்விட்ட செய்தியையுணர்ந்து வருந்தினான். அழகிய இராணியின் அழகிய படம் எழுதுதற்குறிய அரிய சந்தர்ப்பத்தைத் தவற விட்டதானது அவனுக்குப் பெரிய வருத்தமாகவும், மாபெரும் நஷ்டமாகவும் முடிந்தது. ஏனெனில் அவ்வோவிய நிபுணன் அழகிற் சிறந்த அவ்வரசிளங்குமரியின் படத்தைத் தக்க சந்தர்ப்பத்தில் எழுதிக் கொண்டிருந்திருப்பானாகில், அதன் பயனாய் அவன் அநேக பரிசுகள் கிடைக்கப் பெறுவதோடு, ஆயிரக்கணக்கான ரூபாயும் சம்பாதித்திருப்பான். ஆனால் சொற்ப நேர அசிரத்தையாலும் அஜாக்கிரதையாலும் அத்துணைப்பெரிய செல்வத்தையும் கீர்த்தியையும் இழந்து விட்டான்.

இச்சம்பவம் உண்மையில் அக்காலை நடந்ததேயாம். இச்செய்தியால் நாம் உணரவல்ல படிப்பினை யாதெனின், அனுகூலமான சந்தர்ப்பம் கிடைப்பதாயின் எக்காரணத்தை முன்னிட்டும் அதனைக் கைநழுவவிட்டுவிடக் கூடாதென்பதேயாம். அரியகாலத்தைக் கைவிடுவது அரியதனத்தை இழப்பதற்கே ஒப்பாம். கிடைக்குஞ் சந்தர்ப்பம் அற்ப சொற்பமாயிருப்பினும் அதிலும் ஒரு சிறிய காரியத்தையேனும் சாதித்து அனுகூலம் பெறுவதே அறிவுடைமையாகும்.

இவ்வாறே, நம் ஆயுளின் எந்த வயதையும் வீணிலும் விளையாட்டிலும் வியர்த்தமாக்கி விடாமல் அந்தந்த காலத்துக்கேற்ற காரியாதிகளை ஊக்கம், உற்சாகம் முதலியன பூண்டு நன்குழைத்து ஜயபேரிகையுடன் செய்துமுடித்து கீர்த்தியும் நன்மையும் பெறுதல் வேண்டும். இங்ஙனம் தம் காலத்தையும், ஆற்றலையும், வீணிற்போக்காமல், கண்ணுங் கருத்துமாய் மாபெருங் காரியங்களைச் சாதித்துஇத்தாரணியின் கண் பேரும்புகழும் பெற்றுச்சென்ற மேனாட்டு அறிவாளிகள் பல்லோர் இருக்கின்றார்கள். அத்தகைய அறிவுவல்லார்களின் காரிய சாதனைகளைப்பற்றிய சிறுசிறுகுறிப்புகளை கீழே திரட்டிப் பொறிக்கின்றனம். நேயர்கள் அவ்வெற்றி சிலர்களின் தன்மையினின்று தக்க படிப்பினைப் பெற்று மேலோங்குவார்களாக:—

இன்ஜீலோ என்பார்தமது பதினேழாவது வயதிலேயே மிகச்சிறந்த முறையில் துரிதமாக எழுதக்கூடிய ஓவிய நிபுணராகயிருந்தார். இவர் அச்சிறு பிராயத்தில் அநேகவித சித்திரங்களைத் தயாரிப்பதில் கீர்த்தி பெற்று விளங்கினர்.

சார்லஸ் ஸிபர்ஜன் என்பர் தமது பதினெட்டாவது வயதிலேயே, வாக்குவன்மையும் சபையோரை வசீகரணஞ் செய்து விடுந் திறனும் படைத்த மதப்பிரசங்கியாக கீர்த்திப் பெற்று விளங்கினர்.

ஜார்ஜ் வாஷிங்டன் என்பார் தமது 19-ம் பிராயத்திலேயே உலகம்போற்றும் மனிதராய் விளங்கினர். எனவே அன்னவர் 'ஸ்டேபின்ஸ்' என்னும் பெயருடைய 'ஸ்டீம் எஞ்சின்' ஒன்றைக்கண்டு பிடித்து உலகோபகாரம் புரிந்தார்.

ராபர்ட் ஹால் என்பார் தமது 20-வது பிராயத்திலேயே அக்கால மக்களுக்குப் பெரியதோர் சமூகத்தலைவராய் விளங்கினர்.

வாஷிங்டன் எர்விக் என்பாரும் தம் 20-ம் பிராயத்திலேயே பிரபல நூலாசிரியராகவும் தத்துவ ஞானியாகவும் விளங்கினர்.

பெத்தூவன் என்பார் தமது21-ம் வயதிலேயே மிகக் கீர்த்தியும் ஜனபிமானமும் வாய்ந்த வித்வானுக விளங்கினர்.

வெல்பர் போர்ஸ் என்பாரும் அதே பிராயத்தில் அக்கால (பார்லிமெண்ட்) இராஜாங்க சபையின் சிறந்த அங்கத்தினராக விளங்கினர்.

மேஸினீ என்பார்அதே பிராயத்தில், இராஜீய, இலௌகிக விஷயங்களை நன்கறிந்து பத்திரிகைகட்கு, அவைசம்பந்தமாய் சிறந்த அபிப்பிராயங்களை எழுதுபவராய் விளங்கினர்.

மகா அல் பரேட் என்பார் தமது 22-வது வயதிலேயே பொதுஜனங்கட்டு பேரூழியம் புரியும் ஆற்றலராகிவிட்டார்.

மிஸ்டர் ஷேல்லிர் என்பார் அதேபிராயத்தில்தான், உலகப்பிரசித்தி பெற்றிருக்கும் 'தீபாபர்' என்னும் பெரியதோர் கிரந்தம் எழுதிமுடித்தார்.

ஸீஸர் என்பார் தமது 23-வது வயதில் ஒரு பெரும் தேசத்துக்கே ஏக சக்ரவர்த்தியாய் விளங்கினர்.

அதேபிராயத்தில் புரோனிங்க் என்பார் தம்முடைய அரும்பெருங் கவிக்கோர்வையின் கிரந்தத்தை வெளியிட்டு உலகுக்கு அறிவோபகாரம் புரிந்தார்.

வில்லியம் பாட் என்பார் சின்னஞ்சிறு பாலப்பருவமாகிய 14-ம் வயதிலேயே அல்மியா என்னும் பெரியதோர் ஆராய்ச்சி நூல் எழுதிமுடித்து உலகத்துக்கு அறிவோபகாரம் புரிந்துள்ளார்.

ஷேல்லர் என்பாரும், போப் என்பாருங் கூட ஏறக்குறைய அதே இளமைப்பிராயத்தில் சித்திர நிபுணர்களாவதற்கு பிரயத்தினமெடுத்துக் கொண்டார்கள்.

கிரோடஸ் என்பார் தமது பதினைந்தாம் பிராயத்திற்றனே உலகப் பிரக்யாதி பெற்ற 'என்ஸைக்ளோ பீடியா'' என்னும் சர்வப் பொருளாராய்ச்சி கிரந்தத்தை, ஆராய்ந் தெழுதலானர்.

விக்டா ஹேயூகோ என்பாரும், தம் உலகப் பிரசித்தி பெற்ற கவிக்காவியத்தை தமது 15-ம் வயதிலேயே பூர்த்திச் செய்து மகா பெரும்சபையின் கண் அரங்கேற்றி வைத்தார்.

பேக்கன் என்னும் பேரறிஞர் தமது பதினறுவது வயதிலேயே, மாபெரும் பண்டை தத்துவ சாஸ்திரியான ஹக்கீம் அரஸ்தாதாலீஸின் தத்துவாராய்ச்சியில் குற்றங் கண்டு அதை அம்பலப்படுத்தினர்.

மகா ஸிக்கந்தர் என்பாரும் தமது பதி னுருவது வயதிலேயே தமது பிதாவாகிய அரசருடைய சேனைக்குத் தளபதியாக இருந்து படை நடத்தினர்.

டான்டே என்பார் தமது 24-ம் பிராயத்திலேயே மகாதீரவீர வாள்வீச்சுக்காரராய் விளங்கியதோடு, சிறந்த கிரந்தகர்த்தாவாகவும் விளங்கினர்.

பிரபல கவிவாணரான ரஸ்கின் என்பார் 'தற்காலத்துச் சித்திரம்' என்னும் பிரபல தத்துவகாவியத்தை இயற்றிமுடித்தார்.

அதேவயதில் நியூட்டன் என்பார் ஆகர்ஷண பூகர்ஷண சக்தி ஆராய்ச்சியாளராயிருந்தார்.

ஜான் கிட்ஸ் என்பார் உலக தத்துவக் கவிவாணர்களிலெல்லோரினும் ஜயசீலரான தத்துவப்புலவராய் விளங்கினர். 'மானுமிகளின் கதைகள்' என்பது இவர் இயற்றிய நூலேயாகும். மேலும் இவர் இயற்றிய மற்றோர் கிரந்தம் எட்டுப்பெரும் வால்யங்களாக வெளிவந்திருக்கிறது.

நேயர்காள்! மேற்கூறப்பட்ட கீர்த்திசாலிகளெல்லாம் எங்ஙனம் இத்துணை வெற்றியும் மேன்பதவியும் பெற்ருர்கள் என்று கருதுகின்றீர்கள்? யாவும் தன்னறிவை உபயோகப்படுத்தி ஊக்கமும் உற்சாகமும் பூண்டு, காலத்தை வீணுக்காது, சிரத்தையாய் உழைத்தலேயாம். ஆகையால் நாமும் முயற்சிப்புரிந்து பார்ப்போமானல் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்னும் மொழியை உண்மை என அறிவோம்.

நம்மை அடிமையாக்கி வைத்திருப்பது எது?

ஜனுப் ஹாபிஸ் அப்துல்கவி சாஹிப் வரைவது

"சுமார் $1\frac{1}{2}$ அல்லது 2 இலக்ஷ ஐரோப்பியர்கள், 32 கோடி மக்களை எவ்வாறு தங்களுக்கு அடிமைகளாக ஆக்கிவைத்துக் கொண்டிருக்கிருர்கள்" என இந்தியாவின் நடப்புகளை நன்கு தெரிந்துகொள்ளாத அநேகர் கேழ்க்கின்றனர். இதற்கு கீழே குறிப்பிடப்படும் சில விஷயங்கள், ஐரோப்பியர்கள் எஜமானர்களாகவும் இந்தியர்கள் ஊழியர்களாகவும் இருக்கும்படி செய்துவருகிறதென தைரியமாய் விடை அளிப்பது பொருந்தும்.

(1) இந்தியர்களுக்குள் ஒற்றுமை கிடையாது; ஒருவன் மேற்குத் திசையை நோக்கிச் செல்வானுகில், மற்றவன் அதற்கு மாற்றமாய் நேர் கிழக்கே செல்ல பிரயத்தனப்படுகிருன். ஒவ்வொருவனும் தன் மனதில் தோன்றியபடி தனித்தனியே நடக்கமுயற்சிக்கின்ருன்; பொருமை கெட்ட எண்ணம் இவைகள் ஒவ்வொருவனுடைய மனதையும் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது; ஒவ்வொருவனும் மற்ற இதரர்களின் நலவை நாடுகிறதே கிடையாது; ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டுமென்பதை எவனும் விரும்புகிறதே இல்லை; ஏழையாகவுள்ளவன் தனவந்தனுடைய ஐசுவரியங்களை அபகரித்துத்கொள்ள பஹீரதப்பிரயத்தனமெடுத்துக்கொள்கிருன்; அக்காரியம் கைகூடிவராவிடின் தனவந்தனின் ஐசுவரியம் அவனைவிட்டு நீங்கிப்போய் விடுவதற்காகிலும் பஹிரதப் பிரயத்தனமெடுக்கின்ருன். இப்பொருமை சாதாரணமாக ஐசுவரிய விஷயத்தில் மட்டும் ஏற்படுகிறதாகக் கருதிவிடலாகாது. இதரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மரியாதை, பெரும்பதவி முதலிய விஷயங்களைப்போக்குவதிலும் உண்டாய் விடுகிறது. இவ்வியாதியில் தனிப்பட்ட மக்கள் மாத்திரம் சிக்குண்டு போவதாகக் கருதி விடலாகாது. ஒரு சமுகத்தினர் இதர வகுப்பாரின் முன்னேற்றத்திற்குத் தடைகல்லாகவும் நின்று போராட முற்படுகின்றனர். உதாஹரணமாக, ஹிந்துக்களின் முன்னேற்றத்தைக் கண்டு முஸ்லிம்கள் கூக்குரலிடுகின்றனர்; அவ்வாறே முஸ்லிம்களின் ஒற்றுமையைக் கெடுக்க ஹிந்துக்கள் யாவரும் ஒன்றுகூடி சூக்ஷி புரிகின்றனர்; பத்திரிகைகளின் அநேகப் பத்திகள் இதற்காகவென்றே "ரிஸர்வ்" செய்து வைக்கப்பட்

டிருக்கின்றது; இந்த நோக்கத்தை அஸ்திவாரமாகக்கொண்டே அநேகப் பிரசங்கங்கள் தன் ஜொலிப்பைப் பரத்திவருவதின் பயனாய் சமூகச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. இது ஒரு பக்கல் கிடக்க, மற்றொரு புறம் ஒரு சமூகத்திலுள்ள பற்பல பிரிவார்களுக் கிடையே சச்சரவுகள் ஏற்பட்டு பற்பல விபரீதங்கள் தோன்றி விடுகின்றன. உதாஹரணமாக, நமது நாட்டில் தோன்றியுள்ள பிராமணர், பிராமணரல்லாதார், வங்காளி, பிஹாரி, பிராமணர் ரஜபுத்திரர் முதலானோர்களுக் கிடையே ஏற்படும் சச்சரவுகளைக் குறிப்பிடலாம். இதனைத் தவிர்த்து இராஜீய விஷயத்தைக் கவனிப்போமாகில், சுயராஜியப் பார்ட்டியார் ஜஸ்டிஸ் கக்ஷியாரின் ஜென்ம விரோதிகளாகயிருக்கின்றார்கள்; தொழிலாளிகள், முதலாளிகளின் அடிவேரைக் களைந்துவிடுவதைத் தங்கள் கடமை எனக் கருதுகின்றவர்களாயிருக்கின்றார்கள். இதன் பயனாய், சில இடங்களில் அடிதடி ஏற்பட்டு விடுவதற்குள்ள சந்தர்ப்பமு முண்டாய்விடுகிறது. இவ்வாறான குறைப்பாடுகள் நம்மிலிருப்பதால்தான் பல்லாயிர மைல்களுக்கப்பா லுள்ளவர்கள் நம்மை ஆண்டு வருகின்றார்கள்; நமக்கு சுயராஜியம் கிடைப்பதற்கு ஹேதுவில்லாதிருக்கிறது; நாம் உலகின் கண்வதியும் மானிட வகுப்பார்களில் தாழ்மையாக மதிக்கப்பட்டு வருகிறோம்; மிருகங்களைப்போல் அடிமைகளாக உட்கார்ந்திருக்கிறோம். நமக்கு எப்பொழுதுதான் நல்லறிவு ஏற்படப்போகிறதென்பதுதான் தெரியவில்லை? நம்மை ஆள்வோர்கள் பிரித்தாளும் தந்திரமுறையைக் கைக்கொண்டு சிலகால் ஹிந்துக்களுக்கு உதவிபுரிந்து அவர்களுடைய நட்பை எதிர்பார்க்கின்றனர்; சிலக்கால் முஸ்லிம்களுடன் சேர்ந்து அவர்களுக்கு உபகாரஞ்செய்யும் தோரணையில் தங்கள் காரியாதிகளைப் பூர்த்திசெய்து கொள்கின்றனர். எனவே அவர்களின் சூக்ஷியானது எரிகிறநெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோலாய் விடுகிறது.

(2) நாம் ஐரோப்பியர்களைப் பின்பற்றி நடந்துவருவதன் காரணத்தால், இந்தியர் என்பதைக் கூட மறந்து விடுகிறோம்; நமது தேச உடையை மறந்து கோட்பெண்ட்லம் அணிய ஆரம்பித்து விடுகிறோம்; ஈதுப்பெருநாளைக் கொண்டாடுவதற்கு பதிலாக கிறிஸ்மஸ்வின் கேக்கைப் புசிக்கிறோம்; கீழ்நாட்டின் நாகரீகத்தை வெறுத்து மேனாட்டாரின் நடை உடை பாவனை முதலியனவற்றை நேசிக்கின்றோம்; புதிய நாகரீகத்தின்பேரால் மார்க்க சம்பந்தமான கட்டளைகளைப் பரிகசிக்க முற்பட்டு விடுகிறோம்; ஐரோப்பிய நாகரீகத்தைப் பின்பற்றுவதையே கெவர்தையாகக் காண்கின்றோம்; பள்ளிவாசல் பொதுஸ்தலம் முதலியவைகளில் இரவு விழித்து வணங்குவதற்கு பதிலாய் நம்முடைய இரவுகள் சினிமாக்கொட்டகைகளிலும் கூத்தாட்டமுள்ள இடங்களிலும் கழிந்து போகின்றன; அரப்தேசத்திற்கு யாத்திரை செல்வதை விடுத்து ஐரோப்பா தேசத்தின் சுற்றுப் பிரயாணத்தை முக்கியக்கடமையாக மதிக்கின்றோம்; நாம் ஐரோப்பிய நாகரீகத்தைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றி நடக்க முற்படுவதன் காரணமாய் நம்முடைய வருவாய்கள் நம் செலவுக்குப்போதாது வகையற்று கடன் வாங்கும்படி நேரிடுகிறது. முடிவில் கடன் பளுவு தாங்கமுடியாது உரோஷவான்கள் தற்கொலை புரிந்து கொள்கின்றனர் அல்லது ஜைல் வீட்டின்காற்றை சுவாசிக் கின்றனர். தவிர, ஐரோப்பியர்கள் நம்முடைய ஏதாகிலுமொரு செயலைப் பின்பற்றுகிறார்களா? என்பது கூட நம்மனோருக்கு தெரிகிறதில்லை. அவர்கள் நமது செயலைப் பின்பற்றுவதற்கு பதிலாய் நம்முடைய ஒவ்வொரு காரியாதிகளையுங் கண்டு பரிகசிக்கிறவர்களாகவே யிருக்கின்றார்கள். இதற்கு மாற்றமாய் நாம் அவர்களுடைய ஒவ்வொரு கெடுதிகளையும் நல்லதென்றும் ஒவ்வொறு துர்ச் செய்கைகளையும் அழகானதென்றுங் கண்டு அதனைப் பின்பற்றி நடக்க முற்படுகிறோம். இவைகளின் காரணத்தினால் தான் நாம் ஆழ்ந்த வழி கேட்டிலாகி அடிமையென்னும் சங்கிலியைக் கழுத்திலணிந்து உட்கார்ந்திருக்கிறோம் என்பது திண்ணம்.

(3) நாம் எக்காரியத்திலும் ஒரு சட்டதிட்டத்தையோ, நேரத்தின் ஒழுங்கையோ கவனிக்கிறோமில்லை. எனவே நம்முடைய வாழ்க்கையானது ஒருவரையறைக் குட்பட்டதாகவோ அன்றி ஒரு சட்டதிட்டத்திற்குக் கட்டுப்பட்டதாகவோ யிருப்பதில்லை; நம்முடைய எந்தக் காரியமும் ஒரு முன்யோசனையின்படி நடப்பது கிடையாது; தூங்குவதற்கு நாடுவோமாகில் பகல் முழுதையும் தூக்கத்தில் கழித்துவிடுகிறோம்; சினேகிதர்களுடன்

வார்த்தையாட உட்கார்வோமாகில், இரவு முழுதையும் அதிலேயே போக்கி விடுகிறோம்; சாப்பிடுவதற்கோ, ஆராய்ச்சிசெய்வதற்கோ, மற்றும் முக்கியக் கடமைகளை நிறைவேற்று வதற்கோ யாதொரு நேரத்தையும் குறிப் பிட்டுக் கொள்வதில்லை. ஏதாகிலுமொரு கார்யம் நான்குமணிக்கு நடைபெறுமெனக் குறிப்பிடப் பட்டிருந்தால், நாம் கூடிய பிர யாசையோடு ஐந்து மணிக்கு அந்த இடத் திற்குப் போய்ச் சேர்ந்து விடுகிறோம். 10 மணிக்குரயில் புறப்படுவதாயிருந்தால் பத்து மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுகிறோம்; ஒருவீட்டில் இரவு 9 மணிக்கு தஅவத்நடை பெறுவதாகக் குறிப்பிடப் பட்டிருந்தால், 11 மணிக்கு அங்குசென்று விருந்து கொடுப்பவருக்குத் தொந்தரவு விளை வித்துவைக்கிறோம். ஆகவே நாம் நேரத்தின் ஒழுங்கு முறையை கவனித்து நடக்காதவர்க ளென உலகில் பெயர்பெற்று விட் டோம். இத்துர் அதிர்ஷ்ட வசனமான குறைவு நம்மில் காணப்படுவதால், நம்மு முடைய சகலகாரியங்களும் கைகூடிவருவது கிடையாது; நம்முடைய சங்கங்களும் சபை களும் முன்னேற்றமடைந்து செல்வதற்கு முடியாதிருக்கிறது; நம்முடைய வியாபார மும் அபிவிர்த்தி அடைவதற்கு ஹேதுவில் லாதிருக்கிறது; முடிவில் நாம் சுகஜீவியாக வாழ்வதற்குங்கூட அது தடைகல்லாகயிருக் கிறதென தைரியமாய்க் கூறலாம். ஐரோப்பி யர்களோ, ஒவ்வொரு காரியத்தையும் அவ் வக்காலங்களில் குறிப்பிட்ட பிரகாரமே செய்து முடித்துவிடுகின்றார்கள். அவர்கள் சங்கடங்கள் நேர்ந்த காலங்களிலுங்கூட எந் தக் காரியத்தையும் சட்டவிரோதமாகச் செய்யத் துணிபுகொள்வதில்லை.

(4) நம்மில் வீணில் பொழுது போக்குவ தென்னும் வியாதி குடிகொண்டிருக்கிறது. எனவே நம்மிலனேகர் கைகட்டிக்கொண்டு உட்கார்ந்த வண்ணமேயிருந்து இரணம் தானாகவே கிடைக்குமென எதிர்பார்த்துக் கொண்டிருக் கின்றனர். உதாஹரணமாக, பத்து நபர்களுள்ள ஒருவீட்டில் ஒருவன் சம் பாத்தியசாலியாக யிருப்பானாகில், மீத முள்ள 9 நபர்களும் அவனுடைய வருவாயை எதிர் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக் கின்றார்கள்; இவர்களுக்குத் தேவையானவை களைத் தேடிக்கொடுக்கும் பளுவு அந்த ஒரு மனிதனையே பொருத்திருக்கிறது; அவன் உரோஷத்தின் காரணமாக பலவாறான கஷ்ட சங்கடங்களையும் சகித்துக்கொண்டு குடும்பத்தை நடத்திவருவதன் காரணமாக கடைசியில் அவன் பெரும் துன்பத்துக்கா ளாக நேர்ந்துவிடுகிறது. இதற்குமாற்றமாய் ஐரோப்பியர்களில் தகப்பன்ஒரு இடத்திலும் புத்திரன் ஒருவகையிலும்சம்பாத்தியஞ் செய் கின்றார்கள். எனவே, அவர்கள் தங்கள் பிர யாசையின் காரணமாகவே இவ்வகண்டபூபா கத்தில் இராஜாங்கம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். இக்காலை ஐரோப்பியர்கள் நம் மைப்போன்று வீணில்பொழுது போக்கும் வேலையிலீடுபடுவார்களாகில், கூடிய சீக்கிரம் தங்கள் அதிகாரத்தை இழந்து உட்கார்ந்து விடுவார்கள் என்பது நிச்சயம்.

(5) நம்மில் அசுத்தம் குடிகொண்டிருக்கி றது. எனவே நம்முடைய உடை வியாபார சாமான் பிள்ளைகள் இருப்பிடம் முதலியயா வும் அசுத்தமுடையவைகளாவே யிருக்கின் றது; வீட்டிலுள்ள சமையலிடத்தில் ஆயிரக் கணக்கான ஈக்களும் நூற்றுக்கணக்கான பூச்சிகளும் குடி கொண்டிருக்கின்றன; நமது கடையிலுள்ள சகல சாமான்களிலும் தூசி நிறம்பியிருக்கின்றது; நம்முடைய உடைகளி லிருந்து துர்கந்தம் வீசுவதால், நமக்குச் சமீ பத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் அதனைக் கண்டுமனம் சகியாதவர்களாய்விடுகின்றனர். இவ்வாறு துர்கந்தம் அசுத்தம் இவைகளில் நாம் அகப்பட்டுழல்வதின்காரணமாய்நம்மில் பலவாறான பின்னங்கள் ஏற்பட்டு நம்மவரில் பெரும்பாலோர் வியாதியஸ்தர்களாக இருக் கும்படி நேரிடுகிறது. அதனால் தான் இரா ஜாங்கம் நம்மை வியாதிகள் குடியிருக்குமிட மெனக் கருதி யிருக்கின்றது. இதுவன்றி நம் முடைய வியாபாரங்களில் அபரிமிதமான இலாபத்தை எதிர்பார்ப்பதற்கு முடியாம லிருக்கிறது; நம்மிடமிருக்கும் சரக்குகள் எவ் வளவு நல்லதாகயிருந்து விலைசரசமாகக் கொடுத்தபோதிலும் பார்வைக்குப் பங்க முடையதாய்க் காணப்படுவதால் வாங்கு பவர்கள் அதே சாமானை ஓர் ஐரோப்பிய வியாபாரியிடம் பத்து மடங்கு அதிகமாய் விலை கொடுத்து வாங்கிவிடுகிறார்கள்; அந்த சாமான் சுத்தமுடையதாக யிருப்பதைப் பார்த்து விலை அதிகமாகக் கொடுத்து விடுவதையும் கவனிக்கிறார்களில்லை. ஐரோப்

பியர்களின் வியாபாரமானது சுத்தத்திலும், பகட்டிலுமே நடைபெற்று வருகிறது. அவர்களின் இராஜங்கமானது வியாபாரத்தின் மீதே அஸ்த்திவாரமிடப் பட்டிருக்கின்றது என்னும் உண்மையாவருமறிந்ததே.

(6) நம்மை வீண்செலவு செய்வதென்னும் வியாதி பற்றிப் பூண்டு கொண்டிருக்கிறது. உதாஹரணமாக ஒரு பிள்ளை பிறக்குமாகில், அதன் சந்தோஷத்திற்காக எத்தனையோ ரூபாய்களைச் செலவு செய்து அநேக சடங்குகளை நிறைவேற்றுவதற்கான வேலையி லீடு பட்டுப் பையைத்திறந்து வைத்து விடுகிறோம். பிறகு அப்பிள்ளைக்காக அர்த்த மில்லாச் சடங்குகளை நிறைவேற்று வதற்காக எத்துனேயோ ரூபாய்கள் செலவாய் விடுகின்றன. அப்பால் கத்ன முதலிய சடங்குகளுக்காக எவ்வளவோ ரூபாய்கள் பறக்கின்றன. பிறகு விவாகத்திலேற்படும் செலவுகளைப் பற்றியோ கேழ்க்கவேண்டியதில்லை. இதற்கிடையில் கையிலிருந்த ரூபாய்களும் செலவாகி அநேக ஸ்தாவரச் சொத்துக்களும் விற்று முதலாய் விடுவதுடன் கடனின் பளுவும் தலைமேல் ஏறி விடுகிறது. இதே நிலைமையில் பிற்காலத்தில் பெரும் கஷ்ட சங்கடம் அடையும்படி நேரிடுகிறது.

நாம் செய்யும் வியாபாரத்தில் ஏதாகினும் இலாபம் கிடைக்குமாகில் அதனை உடனே செலவழித்து விடுகிறோம்; செலவினங்களை எழுதி வைப்பதைப் பழிப்பாகக் காண்கின்றோம். இதனால்நாம் வியாபாரத்தில் நாளுக்கு நாள் க்ஷீணதிசை அடைந்தவர்களாகவும் வீண்செலவு செய்து வருவதால் நாம், ஒவ்வொருநாளும் அழிவின் பக்கல் விறைந்து செல்பவர்களாகவும் இருக்கிறோம். இது தவிர, ஏதாகினும் சங்கம், அஞ்சுமன் கலாசாலை முதலிவற்றை ஏற்படுத்த முயற்சிப்போமாகில் அதுவும் வீண் விரயம் என்னும் சுழல் காற்றி லகப்பட்டு பரிதாப நிலைமைக்கு வந்து விடுகிறது. அவைகளை ஸ்தாப்பிப்பதற்கு முன்பே ஒன்று இரண்டு இலக்ஷரூபாய்கள் செலவுசெய்து கட்டம் கட்டி விடுகிறோம்; பிறகு ஜனங்களின் சந்தாவை எதிர்ப்பார்த்து அக்காரியங்கள் நடை பெறவேண்டியிருப்பதால் சிலநாளைக்குப் பின் அந்த சந்தா சிறுகச் சிறுகக் குறைந்து வந்து முடிவில் அக்காரியம் நடைபெறாது தடையாய்ப் போய் விடுவதைக் காண்கின்றோம்.

சோதரர்காள்! மேலே கூறப்பெற்றுள்ள குணங்கள் நம்மில் குடிகொண்டிருப்பதால் தான் அவைகள் நம்மை முன்னேறச் செய்ய விடாது அடிமைச்சங்கிலியைக் கழுத்திலணிந்து தழுமைத் தனமுடையவர்களாய் உட்கார்ந்திருக்கும்படி செய்து வைத்திருக்கிறது. நாம்விடுதலை பெற்று விளங்கும் காலம் எக்காலமோ?

சுகாதாரம்

தவறுதலான ஆகாரம்

தவறுதலான ஆகாரமென்பது, ஜீவஸத்துப் பொருள்கள் முதலிய ஜீவியத்திற்கு முக்கியமான பதார்த்தங்கள் குறைவாயிருக்கும் ஆகாரம், பானம் இவைகளை எடுத்துக் கொள்ளுதல், (இயந்திரத்தில் குத்தித் தீட்டுவதாலும், சாஸ்திர முறைக்கு விரோதமாக சமைப்பதாலும் இக்குறை ஏற்படுகிறது) அல்லது தேகாரோக்கித்திற்குக் கெடுதலான ஆகாரங்களையாவது பானங்களையாவது உண்ணுதல் முதலியனவாகும்.

தவறுதலான ஆகாரங்கள் அல்லதுபானங்கள் அநேகமுள. அவற்றுள்முக்கியமானவை பின் வருவனவாகும்:—வெளேரென்று தீட்டப்பட்ட அரிசி, வெள்ளைக் கோதுமை மா, கீரை முதலிய காய்கறிகளை ஜலத்தில் வெகு நேரம் சமைக்கவைத்து அதன் ஸத்தெல்லாம் போகும்படி அந்த ஜலத்தைக் கீழே கொட்டி விட்டு அதனைமட்டும் உபயோகித்தல், தேயிலைப்பானம், காப்பி, சாராயம் முதலியன வாகும்.

நமது ஜன சமூகத்திலுள்ள மத்திய வகுப்பினர், உயர்ந்த வகுப்பினர் இவர்களுடைய தினசரி அகாரத்தைக் கவனிப்போமாகில், அவற்றுள் முக்கியமாய் இருக்கக்கூடியவை பின் வருவனவாகும். (1) தீட்டின அரிசி,

(2) வெள்ளைக் கோதுமை மா, (3) ஜலத்தில் அதிகாய்ச் சமைத்துக் கூழாக்கி வைக்கப்பட்ட காய்கறிகள் (4) உப்பு, மிளகாய் ஊறுகாய் தினுசுகள் முதலியனவாம். மலச்சிக்கலையும் விஷத்தன்மையையும் உண்டாக்கும் இம்மாதிரியான ஆகாரத்தால், தேகத்தில் கணக்கில்லா வியாதிகள் உற்பத்தியாகும் என்பதில் ஏதாகிலும் ஆச்சரியமுண்டா? இம்மாதிரியான சத்தில்லாததும், இயற்கைக்கு விரோதமானதுமாகிய ஆகாரத்தை உண்டு தேகம் கெட்டுப்போயிருப்பது போதாமல், போஜனசுகத்தில் ஈடுபடுகிறார்கள். எனவே தற்போது விடியற்காலை தன்னை எழுப்புவதற்காக ஒரு டோஸ் விஷமுள்ள காப்பியோ அல்லது தேயிலைப்பானமோ தினம் குடிக்க ஆரம்பிக்கிறான். அப்பால் காலைப்போஜனம் சாப்பிட்டான பிறகு, தனது இரைப்பைக்கு அமைதி உண்டாகும் பொருட்டும், தனது நரம்புகளுக்கு ஒய்வு இருக்கும் பொருட்டும், ஒரு ஸிகார் பிடிக்க ஆரம்பிக்கிறான். பிறகு தனது பகல் போஜனத்தின் மயக்கத்தைப் போக்க பிற்பகலில் ஒரு கோப்பை தேயிலைப் பானமருந்துகிறான். முடிவில் இவன் பகலில் ஆரோக்கிய விதிகளுக்கு மாறாக நடந்தமையால், இரவில் தூங்குவதற்கு மயக்க மருந்து வேண்டியிருக்கிறது; காலையில் குடலை சுத்தஞ் செய்துகொள்ள பேதிமருந்து தேவையாயிருக்கின்றது. ஆகாரத்தை உண்ணுமுன் அதைப் பாழாக்கி உண்ணும் ஜெந்து மனிதன் தான். தேகத்தினுள்ளே விஷத்தை உற்பத்தி செய்து வேண்டுமென்றே தன்னை தற்கொலை செய்துகொள்ளுகிறவன் மனிதன் ஒருவனே.

தேகத்தினுள்ளேயே விஷம் உண்டாதல்.

தேகத்தினுள்ளே விஷம் உண்டாகுவதென்றால், தேகத்தில் சில விஷ வஸ்துக்கள் உற்பத்தியாகி, அவை தேகத்தில் பரவுதல் அல்லது தேகம் அம்மாதிரி விஷத்தன்மையடையும் படியான நிலைமைக்கு வந்துவிடுதல் என்றர்த்தம்.

இந்த விஷத்திற்கு (1) தவறுதலான ஆகாரம், (2) அதிகமாக உண்ணுதல், (3) விஷத்தன்மையுற்ற அல்லது அசுத்தமான காற்றை உட்கொள்ளுதல் காரணங்களாகும்.

(2) அதிகமாக உண்ணுதல்

இப்போது அதிகமாக உண்ணுதல் அதாவது பசியில்லாமல் உண்ணுதலை எடுத்துக் கொள்வோம். இது விஷயமாக 1932ஞு ஜூலை மாதத்திய 'பிஸிகல் கல்டர்' என்னும் பத்திரிகையில் பர்னார் மாக்பிடின் என்பவர் கூறியிருப்பதை இங்கே குறிப்பிடுவோம். அதாவது,

அதிகமாக உண்ணுதலானது மரணத்திற்குப் பாதையாகும்; வியாதிக்கும் அகால மரணத்திற்கும் அநேக மூலங்கள் உண்டு ஆனால், ஒரு முக்கியமான காரணம் யாதெனில், அதிகமாக உண்ணுதல் அல்லது பசியின்றி உண்ணுதலேயாம். பசியின்றி உண்ணுதலானது கடினமான ஆகாரக் குற்றமாகும். நீர் வாஸ்தவத்தில் பசியாயிருந்து நீர் உண்ணும் ஒவ்வொரு கவளமும் இனிப்பாயிருந்து, ஜீரண ரஸங்கள் தாராளமாய்ப் பெருகி, உமது இரைப்பையும் குடல்களும் முழுதும் சுத்தமாய் இருக்கும்பக்ஷத்தில், நீர் ஆரோக்கிய முள்ளவரே ஆவீர். உமது வாழ்நாள் சந்தோஷமாகவிருக்கும். பசியின்றி ஆகாரத்தை உண்டு உமது குடல்களிலும் இரைப்பையிலும் ஜீரணமாகாதபடி தங்கிப்போயிருக்குமாகில், உமது தேகம் நீல நிறமடைந்து துக்கமுள்ளவராகக் காணப்படுவீர்; நீர் மந்தம் பிடித்தவர்போல் காணப்படுவீர். அதனால் பூலோகமே பைத்தியம் பிடித்திருப்பதாகக் காணப்படும். உமக்கேற்படும் நரம்புத் தளர்ச்சிக்கும் இதுவே காரணமாகும்.

பசியின்றி ஒருபோதும் உண்ணாதே.

இதையே ஒரு விதியாகக் கொண்டு தினம் அனுபவத்தில் அதனைக் கையாண்டு வருவாயாகில் உமது வாழ்நாள் நீடித்திருக்கும். நாம் பற்களைச் சரியாக உபயோகப்படுத்தாதிருப்பதினாலேயே பலவாறான கஷ்டத்திற்குள்ளாகி இருக்கின்றோம். பசியில்லாமலும், ஆகாரத்தைச் செவ்வையாய் மெல்லாமலும், இன்பமில்லாமலும் உண்பதால் நாம் அநேக வியாதிகளுக்கு ஆளாகவேண்டியிருக்கிறது.

(3) அசுத்தமான காற்று.

கடைசியாக கெட்ட காற்று. இதன் விஷக்குணத்தைப்பற்றி இங்கு விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இது யாவருக்கும் தெரிந்த விஷயமே.

முடிவு.

வாசகர்காள்! ஆகாரம், தேகாப்பியாசம் ஆகிய இவற்றைக்குறித்த விதிகளை மட்டும்

ஒரு பிரதானமாக அனுசரித்து வரும்பக்ஷத்தில் விஷம், ரோகம் முதலியன ஒன்றும் அணுகாது. அதற்குப் பகரமாய் நல்ல ஆரோக்கியமும், நல்ல பலமும், கெட்டிக் காரத்தனமும் உண்டாகும்.

இது விஷயமாய், அமெரிக்கா தேசத்து மருந்தில்லாது வைத்தியம் செய்பவரும், ஆகார நிபுணருமாகிய டாக்டர் ஜி. டப்ளியு. ரெம்ஸ்பர்க். டி. வி. என். டி., என்பவர் சொல்லியிருப்பதை இங்கு எடுத்துரைத்து இந்த வியாஸத்தை முடிக்கலாம்.

"எப்போது சாப்பாட்டு நேரம் வருமோ வென்று அநேகர் ஆவலுடன் எதிர் பார்க்கின்றார்கள்; எதைக்கண்டாலும் சாப்பிடுவதில் சுகம் இருப்பதாக நினைக்கின்றார்கள்; அதனால் அவர்களுக்கு கஷ்டம் இருக்கிறதென்று அவர்கள் உணர்வதில்லை. ஆரோக்கிய விதிகளையும் ஆகார நியமங்களையும் மீறி நடந்தால் ஆயுள் முழுதும் அவர்கள் கஷ்டமடையும்படி நேரிடும். அநேகருக்கு விஷயம் சரியானபடி தெரியாதாகையால் ஆகார முறைகளைக் கையாளுவதை அனுவசியம் என்று எண்ணுகின்றார்கள். அவர்கள் புத்தியீனர்களாகும். ஆகார முறைகளுக்குள்ள சரியான வழியைத் தெரிந்துகொள்வது கஷ்டம் என்று மற்றுஞ் சிலர் நினைக்கின்றார்கள். இவர்கள் புத்தியீனர்களாய் இருப்பதுடன் சோம்பேரிகளுமாவர்."

ருஷ்யா தேச முன்னேற்ற முறை.

ருஷ்யா தேசமானது பொருள் வளமும், தொழில் வளமும், விவசாய வசதியும், ஐக்கியப் பான்மையும், ஜனக் கட்டுப்பாடும், சமத்துவ நிலையும் மிகுந்திலங்கும் அரியதோர் நாடாகும். அந்நாட்டில் அரசாங்கத்தார் வாழ்வின் முறை வேறு, குடிகளின் வாழ்வின் முறை வேறு என்றில்லாமல் எல்லோருமோர் இனம், எல்லோருமொரு குலம்; எல்லோரும் தன்னாட்டு மன்னர் என்பதற்கொப்ப கவலையற்று வாழ்ந்து வருகின்கின்றனரென்பது உண்மையே. ஏனெனின், அந்நாடு குடியரசியலை யுடையதாகையால் ஜனக் கட்டுப்பாட்டின்படியும், பொதுவாக்குப்படியுமே சர்வகாரியாதிகளும் ஆங்கு நடைபெற்று வருகிறது. ஆகவே, ஆங்குள்ளோர் விவசாயம், தொழில், வியாபாரம், வித்தை, ஆராய்ச்சி, முதலியவற்றிலெல்லாம் மிக மிக முன்னேற்ற மடைந்தவர்களாகவே விளங்குகின்றனர். எவனும் ஏழையாகயில்லாமலும், எவனும் அதிகப் பணக்காரனுகயில்லாமலும் யாவரும் சமத்துவமாய் வாழ்வதற்குள்ள தக்க ஏற்பாடுகளும், நிர்வாகங்களும் நடைபெற்று வருகின்றது. அப்படிப்பட்ட நாட்டிலும் உலகப் பொருளாதார நெருக்கடியின் காரணத்தினாலும், வியாபார-விவசாய விலைவாசி மந்தத்தினாலும் பணக் கஷ்டமும், வேலையில்லாத் தொல்லையும் சில காலமாய் ஏற்பட்டு வந்தது. அதனைக் கண்ட ஜனத்தலைவர்கள், குடியரசியல் முறைப்படி ஜனங்களின் கஷ்டநஷ்டங்களைப் போக்கிப் பொருளாதார - விவசாய - வியாபார - சமூகாசார - கல்வியாதார அனுகூலங்கள் செய்வதற்காகவேண்டி சென்ற மூன்றாண்டுகட்கு முன் ஒரு "சீர்திருத்தத் திட்டம்" தயார் செய்து அதன்படி அமுல் நடத்திவருவதன் காரணமாய் இதுபோழ்து அந்நாட்டில் வேலையில்லாத் தொல்லையொழிந்து வருகின்றது; வியாபாரம் பெருகி வருகிறது; விவசாயப் பொருள்கட்கு நல்லவிலை ஏற்பட்டு வருகின்றது; கல்வி-யாசாரம் முதலியனவும் ஆங்கு மேன்மையுற்று வருகின்றது; பிரயாணச் சாதனம், சுகாதாரச் சௌகரியங்கள் முதலியனவும் ஆங்கு மேன்மையுற்று வருகின்றன. இவ்விஷயங்களை விளக்கும் புள்ளிக் குறிப்பொன்றை கீழே எடுத்தெழுதுகின்றோம்.

வேலையில்லாத் தொல்லை ஒழிந்தது

கூட்டுறவு விவசாய முறையினாலும், தொழில்நிலை புனர்த்தாரணத் திட்டத்தாலும் ருஷ்யாதேசத்தாரின் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பேய் ஓடித் தொலைந்து விட்டது. கி. பி. 1928-ம் ஆண்டில் அங்கு பதினேரு இலக்ஷம் பேர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தில் அகப்பட்டு உழன்றுக்

கொண்டிருந்தார்கள். பிறகு, ஏற்பட்ட சீர்திருத்தத்தின் பயனுக, கி. பி. 1931-ம் ஆண்டில் ஆங்கு ஒருவரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாயிருக்கவில்லை. வேலையில்லாதாருக்குமட்டும் வேலை கிடைத்துவிட்டதென்றில்லாமல், சென்ற மகாயுத்தத்துக்கு முன்னிருந்த அந்நாட்டுத் தொழிலாளர்களின் தொகையைக் காட்டினும் இப்போது நூற்றுக்கு 30 விகிதம் அபரிமிதமாகப் பெருகி இருக்கின்றது. அங்கு தொழிலாளர்கட்கு வேலை செய்வதற்கான கால நிர்யணமும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, தொழிலாளிகள் அங்கு தினம் 7-மணி நேரம் மட்டுமே வேலை செய்வார்கள். இந்த நிர்ணயம் சாதாரண தொழிலாளிகட்கே யாம். சுரங்கங்கள், இரசாயனக் காரியாலயங்கள் முதலிய இடங்களில் வேலை செய்யும் தொழிலாளிகளின் தினசரி கால நிர்ணயம் தினம் 6-மணியாம்.

பொருளாதாரம்

ருஷ்யாவில் பொருளாதாரநிலை இப்போது திருப்பியான நிலையடைந் திருக்கின்றது. பணங் கொள்வினை கொடுப்பினைச் செய்வோரின் தொகையும் சென்ற இரண்டு வருடங்களைக் காட்டினும் இப்போது நூற்றுக்கு 25 விகிதம் அதிகமாக இருக்கின்றது. தவிற ருஷ்யாவில் அரசாங்கப் பாதுகாப்புத் தொகையும் இப்போது அபிவிருத்தியடைந்து பெருகியிருக்கின்றது. சென்ற 1928-ம் ஆண்டின் தொகை 77 கோடி தானிருந்தது. ஆனல் இப்போது இருநூற்று இருபது கோடிக்கு உயர்ந்து போயிருக்கின்றது. உலகத்தின்கண் கடன் தொல்லையை விட்டும் முற்றும் விடுபட்டு நன்னிலையில் இருக்கும் பாதுகாப்புத் தொகை இதுவேயாம். இப் பெருந்தொகையினின்று சிலபாகம் சுகாதார விடுதிகட்கும், ஆஸ்பத்திரிகட்கும், கல்விச் சாலைகட்கும் அளிக்கப்பட்டு வருகின்றனது.

பிரயாணப் போக்குவரத்து சாதனம்

ஐரோப்பா மகா யுத்தத்துக்குமுன் ருஷ்யா தேசத்தில் பிரயாணத்துக்கான ரயில்வே போக்குவரத்து சௌகரியங்கள் மிக மிகக் குறைவாகவே இருந்தது. அக் காலத்தில் 58541 கிலோமீட்டர் தூரமான ரயில்பாதை தான் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருந்தது. ஆனல் 1931-ம் வருஷத்துக்குள் 77000 கிலோமீட்டர் தூரம்வரை அபிவிருத்தியடைந்துவிட்டது. (ஒரு கிலோமீட்டர் எனின் ஐந்து பர்லாங்கு தூரமாகும்) மேலும் மேலும் ருஷ்யாவில் ரயில்வே வசதிகள் அபிவிருத்தியாகிக் கொண்டே வருகின்றது. தவிர முன்னர் ரயில்வே மூலமாக 3 கோடி 20 லக்ஷம் பிரயாணிகள் ஆண்டுதோறும் யாத்திரை சென்றுர்கள். பிறகு 1931-ல் 72 கோடி யாத்திரீகர்கள் போய் வந்தனர். இப்போது இன்னும் பெருகியுள்ளது.

கல்வி அபிவிருத்தி வேலை

பொதுவாக ருஷ்யாவில் கல்விநிலை பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கின்றது. கல்வியைப் பரத்திவைப்பதில் விசேஷகரமாய் தொண்டுபுரியும் சபைகளில் 'சோவியத் யூனியன் ருஷ்யா' என்னும் சபையே குறிப்பிடத் தக்கதாகும். 1903-ல் நூற்றுக்கு 73 ருஷ்ய ஜனங்கள் கல்வியறிவில்லா மூடர்களாக இருந்து வந்தனர். ஆனல் இப்போது அதற்கு எதிரிடையான தொகையினர் கல்வி யறிவுள்ளவர்களாய் இருக்கின்றனர். 1931-ம்வருடத்தில் கணக்கெடுக்கப்பட்டதில் தொழில் கற்பிக்கும் பாடசாலைகளில் மட்டும் ஏழு லக்ஷம் மாணவர்கள் இருந்தனர். இன்னும் சர்வகலாசாலைகளில் 2லக்ஷத்து 15 ஆயிரம் மாணவர்களும், பிரைமரி (ஆரம்ப) கலாசாலை, மிடில் (மத்திய) கலாசாலை இவைகளில் ஒரு கோடி 90 லக்ஷம் மாணவர்களுமிருந்தனர். இப்போது இவைகளில் நான்கு கோடி. எழுபது இலக்ஷம் மாணவர்கள் கல்விப் பயின்று வருகின்றுர்கள்.

குடிமக்களின் சுகாதாரம்

ருஷ்யாவின் குடியரசாங்கத்தினர் குடி ஜனங்களுடைய சுகாதார சௌகரிய விஷயங்களில் அதிகம் கவனஞ்செலுத்தி வருவதின் பயனுய், மக்கள் அதிக நலமும் சீராரோக்கியமும், நீடித்த ஆயுளும் பெற்றிருந்து வருகின்றனர். முன்னர் ஆயிரத்துக்கு 128 பேர்கள் விகிதம் ஆண்டுதோறும் மாண்டுவந்த ருஷ்யாவில்,இதுகாலை ஆயிரத்துக்கு 18 பேர்களேதான் மரணமடைந்து வருகின்றனர். ஆங்காங்கு எண்ணற்ற வைத்தியசாலைகளும், சுகாதாரவசதி செய்தளிக்கும் காரியாலயங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பொருள் உற்பத்திகளும், செலவுகளும்

ருஷ்யாவில் பலவிதமான தொழில்கள் நடைபெறுகிறதற்கேற்ப ஏராளமான சரக்குகளும் தயாராகி அவைகள் சரியானவிதமாக செலவாகியும் வருகின்றன. அங்நாட்டில், நிலக்கரி எடுத்தல், மண்ணெண்ணெ எடுத்தல், இரும்பு முதலிய உலோகங்கள் தோண்டி எடுத்தல், தங்கமெடுத்தல் ஆகிய தொழில்களால் அரசாங்கத்துக்கு ஏராளமான வரும்படி வருகிறது. தவிர தொழிற்சாலைகளில் வண்டிகள், எண்ணெயினுல் இயங்கும் மெஷீன்கள், மின்சார மெஷீன்கள், விவசாயத்துக்குதவும் மெஷீகள் முதலியனவெல்லாமும் இலக்ஷலக்ஷ டன் கணக்காக தயார் செய்யப்படுகின்றன.

1931-ம் வருஷம் எடுக்கப்பட்ட வரவு செலவு பட்ஜட்படி 310 கோடி நாணயங்கள் பெருமான வரும்படி வந்துள்ளதாய்த் தெரிகிறது. அதில் நூற்றுக்கு 70 பங்கு விவசாயம், கைத்தொழில், ரயில் போக்குவரத்து ஆகியவற்ருல் வந்திருக்கிறது. செலவினங்கள் குறைவே யாகும். மொத்த வரும்படியில் கல்விக்காக 100 க்கு 21 பங்கும், இராணுவத்துக்காக 100 க்கு 6 பங்கும் செலவிடப்படுகின்றன.

நான்காவது வருட திட்டநிலை

மேலே சொல்லப்பட்டுள்ள கணக்கு விபரங்கள் மூன்றுவருட திட்டம்போட்டு அதன்படி அமுல் நடத்திப் பார்த்து அதன்பயனுய் ஏற்பட்ட பலாபலன்களாகும். அம் மூன்று வருடங்கட்குப் பின் நான்காவது வருட திட்டத்தின்படி முன்னதையும் பின்னதையும் ஒத்திட்டுப் பார்த்தால் மேற்கூறிய விஷயங்களிலெல்லாம் ருஷியா தேசத்தினர் அநேக மடங்கு உயர்வும், முன்னேற்றமும், அபிவிருத்தியும் அடைந்திருப்பது தெரிய வருகிறது.

நான்காம் வருடத்திட்டப்படி அரசாங்கத் தொழில் இலாக்காவின் மூலமாய்மட்டும் பொருளாதாரம் நூற்றுக்கு 36 விகிதம் அபிவிருத்தி யடைந்துள்ளது. இவ்வாறே சுரங்கத்தொழில், உற்பத்தித் தொழில், நிலக்கரி எடுக்குந் தொழில் முதலியவற்றிலுங் கூட நூற்றுக்கு 20 பங்குக்கு மேற்பட்டு 44 பங்கு வரை அபிவிருத்தி யடைந்திருக்கின்றது. (இப்புள்ளிக்குறிப்புகள் விரிவஞ்சி ஈங்கு விவரிக்கப்படவில்லை.)

தொழிலாளிகளின் சம்பள உயர்வு.

ருஷ்யாவின் பொருளாதாரம், விவசாயம், தொழில், கொள்வினை கொடுப்பினை முதலிய துறைகளெல்லாம் அபிவிருத்தியும் மேன்மையும் அடைந்திருப்பதற்கொப்ப, ருஷ்யத் தொழிலாளிகளின் சம்பளம்-கூலி முதலியனவும் அததன் தராதரப்படி உயர்த்தப்பட்டிருக்கின்றன. 1931-ல் பெரும் பெரும் காரியாலயங்களில் 5477000 வேலைக்காரர்கட்கு மேல் தொழில் புரியவில்லை. ஆனல் அதன்பின் 1932-ல் அத்தொகை 6218000-க்கு அபிவிருத்தியடைந்து விட்டது. அத்துடன் அத்தொழிலாளிகளின் கூலி-சம்பளம் முதலியனவும் 1931-ம் ஆண்டின் நிலையைக்காட்டினும் 1932-ல் நூற்றுக்கு 11 விகிதம் உயர்த்தப்பட்டு விட்டது. இதேவிதமாய் விவசாயிகளிடமிருந்து செலவினங்களிலும் அனுகூலமும் இலேசும் செய்தளிக்கப்பட்டது.

சுதேசப்பற்று.

ருஷ்யாதேச ஜனங்களிடம் சுதேசாபிமானம் பூர்ணமாய்க் காணப்படுகின்றது. குடியரசியலிடமும் பிரஜாபிமானம் நிறைந்து காணப்படுகின்றது. எனவே நாட்டாரெல்லோரும் சுதேசியத்தையே கைகொண்டு சுதேசப் பொருட்களையே வாங்கி தன் தேயத்தைமுன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற அக்கரையுடையவர்களாய்க் காணப்படுகின்றனர். சுருங்கக்கூறுமிடத்து ருஷ்யா தேசமானது மற்றெல்லாதேசங்களை விடச் சகலதுறைகளிலும் சிறந்து முன்னேற்றமடைந்து விளங்குகிறதென்று கூறி முடிக்கலாம்.

சிங்கை சந்தா நேயர்கட்கு!

அங்குள்ள நமது சந்தா நேயர்களில் 2045, 2046, 945, 972, 1494, 1766, 929, 2328 நெ. சந்தாதார்கள் தங்கள் சந்தாக்களை நமது ஏஜண்டு ஜனுப் மு. முஹம்மது ஷரீப் (439 நார்த் பிரிட்ஜ்ரோடு) அவர்களிடம் கொடுத்திருக்கிருர்கள் இதுபோல் இதர சந்தாதார்களும் அவர்களிடம் கொடுத்துவிடும்படி கோருகிறோம்.

இஸ்லாத்தின் விவேகார்த்த போதனைகள்

நந்தீனால் இஸ்லாம் பரிசுத்தமும் சத்தியமும் மிக்க சன்மார்க்கமென்பதற்கு அதன் விவேகம் மிளிரும் நற்போதனைகளும் ஓர் அத்தாக்ஷியாகும். அத்தகைய சத்திய இஸ்லாத்தின் விவேகார்த்துவநற்போதங்கள் ஒரு சாரார்க்கென்று குறிப்பிடப்பட்டில்லாமல், எளியோரும் வலியோரும், அரசனும், ஆண்டியும், ஆணும்பெண்ணும் யாவரும் ஒரேவிதமாய் அனுஷ்டித்து இகபர ஆன்மார்த்த நற்பயன் பெறுதற்குரியனவாய் அமைந்திருக்கின்றன. மேலும், ஓர் அடியான் இஸ்லாத்தின் தத்துவார்த்த போதனைகளையேற்று அதன்படி ஒழுகிவருவானாகில் நிச்சயமாய் அன்னவன் இகத்தில் முன்னேற்ற சீர்த்திருத்தமும், பரத்தில் விமோசனமும் பெற்றுய்வானென்பதிலய்யமில்லை. ஆகவே, இஸ்லாத்தின் போதனைகளை தங்களான்மக் கடனென ஏற்று ஒழுகிவந்த பண்டையப் பெரியார்கள் இறைவனடியார்களாகவும், பக்த சிரேஷ்டர்களாகவும் மகான்களாகவும் விளங்கி வந்ததே இஸ்லாத்தின் சிறப்புகளை இனிது நன் கெடுத்துவிளக்குகின்றது. அங்ஙனம் இஸ்லாத்தின் போதனைகளை சிரமேற்கொண்டு ஒழுகி விசிராந்தியும், ஆன்மார்த்த நலனும் பெற்றுத்திகழ்ந்த சிலபலமகான்களின் சீரிய வாழ்க்கைச் சம்பவங்களை ஈண்டெழுத்தோதுவாம்:—

உள்ளதைக்கொண்டே விருந்தினரை உபசரித்தல்.

'விருந்தோம்பல்' இஸ்லாத்தின் சிறந்த போதனைகளி லொன்றாகும். விருந்தளித்து உபசரிப்பது தனவந்தரால்தான் முடியும்; ஏழையால் இனிது முடியாதெனக் கருதல் கூடாது. தனவந்தன் தன் பொருட்சக்திக்கேற்ப விருந்தோம்பினால், ஏழையாயிருப்போரும் தன் இல்லத்தில் ஆஜராயிருக்கும்சர்வசாதாரணப்பண்டத்தைக்கொண்டே விருந்தோம்பல் அதனினும் சிறப்புடையதாகும். உதாரணமாக:—

ஹஜ்ரத் ஸல்மான் பார்ஸீ (ரலி.) அவர்களது இல்லத்துக்கு ஒரு மனிதர் விருந்தினராகவந்தார். அந்தச்சமயத்தில் ஹஜ்ரத்தவர்களில்லத்தில் சிறிது ரொட்டியும், உப்புந் தவிர்த்து நல்ல பண்டம் ஏதும் தயாராயில்லை. எனவே ஹஜ்ரத்தவர்கள் அந்த ரொட்டியையும் தொட்டுத்தின்பதற்காக சிறிது உப்பையும் அந்த விருந்தினர் முன்னிலையில் படைத்து உண்ணுமாறு உபசரிக்கலானார்கள். வந்த விருந்தினர்ருசிவிரும்புவராயிருந்தமையால், ஹஸ்ரத் ஸல்மான் (ரலி.) அவர்களை நோக்கி தொட்டுத்தின்பதற்கு இந்த உப்புடன் 'ஸஅத்தர்' இருந்தால் நல்லதாயிருக்குமே என்று கூறினார். (ஸஅத்தர் என்பது ஏழை ஜனங்கள் ரொட்டியைத் தொட்டுத் தின்பதற்காக உபயோகிக்கும் ஒருவிதக் கீரை.)

விருந்தினரின் ஆவலைப் பூர்த்திச் செய்வதற்காக ஹஜ்ரத் ஸல்மான் (ரலி) அவர்களிடம் ஒரு செப்புக்காசுங் கிடையாது. ஆனால் 'ஆப்தாபா' எனும் பெயருள்ள போர்வைமட்டும் ஒன்றிருந்தது. அவ்வுத்தமப் பெரியார், விருந்தினரைச் சந்தோஷப்படுத்துவதைக் காட்டினும் அப்போர்வையை பெரிதென பாவிக்கவில்லையாதலின் உடனே அந்தப் போர்வையை கடைவீதிக்குக் கொண்டு சென்று அதை சில காசுக்கு அடமானம் வைத்து அதைக்கொண்டு 'கீரைப்பதார்த்தம்' வாங்கி வந்து மேற்படி விருந்தினர்க்கு அளித்து உபசரித்து சந்தோஷப் படுத்தினார்கள். ரொட்டியைக் கீரையுடன் புசித்துவிட்டபின் அவ்விருந்தினர் "அல்ஹம்துலில்லாஹ், கிடைத்ததைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளும்படியான தன்மையை எனக்களித்த அல்லாஹ்வைப்போற்றுகின்றேன்" என்று கூறி ஷுகூர் செய்தார். இதைக் கேட்ட ஹஜ்ரத் ஸல்மான் அவர்கள், வியப்படைந்து அவ்விருந்தினரை நோக்கி "அன்பீர்! தாங்கள் கிடைத்ததைக் கொண்டு போதுமாக்கிக்கொள்ளும் கினாஅத் காரராயிருந்திருப்பீர்களாயின், என் ஒரே போர்வையையான் அடமானம் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிராதன்றோ?" என்று அவ்வெளிய அறிவுள்ள விருந்தி

னர்க்கு இனிய முறையில் உபதேசித்தார்கள். இதனாலறியப்படுவது யாதெனில், உள்ள தைக் கொண்டேனும் விருந்தினரை உபசரித்து மகிழ்விக்க வேண்டும்; ஆவலுடன் அவரொரு பொருளை வேண்டுவாராயின் அதனை அளித்து விடுவதோடு அதனாலான இழிய குணத்தை இனிய முறையில் அவருக்கு எடுத்தோத வேண்டும்; இன்னமும், விருந்தினராய் வருவோரின் ஒழுக்க இலக்ஷணம் யாதெனில் விருந்தளிப்போருக்கு எத்தகைய சிரமத்தையும் கொடுக்காமல் கிடைக்கப் பெற்றதைக் கொண்டு போதுமாக்கி 'கினாஅத்' செய்து கொள்ள வேண்டும் என்பதே. ஏனெனின் போதுமென்றமனமே பொன் செய்யும்மருந்தாம்.

தாம் விரும்பும் பொருளை இறைவன் பாதையில் அழித்தல்.

சாதாரணமாய், அபரிமிதமாயுள்ள பொருளை தானதருமஞ் செய்வதினும், தனக்கு மிகவும் பிரியமாயிருக்கும் அரும்பொருளை ஆண்டவன் பாதையில் செலவிட்டு தானம் புரிவதுதான் மகா சிரேஷ்டமான தானமாகும். உதாரணம்:—

மகிதலம் புகழும் மதீனமா நகரில் வாழ்ந்து வந்த அன்ஸாரிகளில் ஹஜ்ரத் அபூதல்ஹா (ரலி.) அவர்களே அதிக செல்வவந்தராகவும், தோட்டந் துறவுகளுடையவராகவு மிருந்து வந்தார்கள். அவர்கள் தம் சொத்து, பொருள், நிலம் முதலியன வெல்லாவற்றினும், 'பீர்ஹா' என்னுந் தோட்டத்தைத் தான் மிகவும் பிரியமாய் விசுவாசம் பாராட்டி வந்தார்கள். அத்தகைய 'பீர்ஹா வனம்' மஸ்ஜிதெ நபவீக்கு எதிரில் அமைந்திருந்ததால் லோக தயாளர் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களும் அந்த தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள தெள்ளிய ஊற்றுஜலத்தைப் பருகி வருபவர்களா யிருந்தார்கள்.

அஃதங்ஙன மிருக்க, லன்தனாலுல் பிர்ர ஹத்தா துன்பிகூ மிம்மா துஹிப்பூன் (அதாவது, நீங்கள் பிரியம் வைத்திருப்பதை இறைவன் பாதையில் செலவழித்து விடாதவரை நீங்கள் நலவைப்பெற்றுக்கொள்ளமாட்டீர்கள்) என்ற திருவேத வாக்கியம் இறங்கவே, இதனை யுணர்ந்த அபூதல்ஹா (ரலி.) அவர்கள் நபிகட்பெருந்தகையார் றஸூலுல்லாஹி (ஸல்.) அவர்கட்டிருச்சமுகம் வந்து, "யாறஸூலல்லாஹ்! ஆண்டவன் தன் திருமறையில், நீங்கள் பிரியம் வைத்திருப்பதை எதுகாறும் செலவழித்து விடமாட்டீர்களோ அதுகாறும் நீங்கள் நலவைப்பெற் றுய்ய மாட்டீர்களென்று கட்டளையிட்டுவிட்டான். ஆகவே, யான் எனது பொருள், சொத்து ஸ்வதந்திரம் யாவற்றினும் அதிகமாய் விசுவாசிப்பது அந்தத் தோட்டமேயாகும். எனவே யான் பொதுநலனை யுன்னி ஆண்டவன் பெயரால் அந்தத் தோட்டத்தை தானஞ் செய்துவிட்டு அதற்குரிய பிரதிபலனைப் பரத்தில் அவ்விறைவனிடம் பெற்றுக் கொள்ள நாடுகிறேன். ஆதலின், அத்தோட்டத்தைத் தாங்கள் எந்தவழியில் உபயோகித்துக்குக் கொள்ள நாடுகின்றீர்களோ அவ்வழியில் உபயோகிக்க தங்கட்கு பூரண அதிகாரமளித்து விட்டேன்" என்று உறுதி மொழிக் கூறிவிட்டார்கள்.

இதனைக்கேட்டு எம்பெருமானர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஹஸ்ரத் தல்ஹா (ரலி.) அவர்களை நோக்கி, 'நண்பீர்! அதைத் தாங்கள் என் பொறுப்பில் தானமளித்து விடுவதைக்காட்டினும், உங்கள் சுற்றத்தினர்களில் மிகமிக ஏழைகளாயிருப்பவர்கட்கு தான மளித்து விடுங்கள்' என்று இதோபதேசம் புரிந்தார்கள். உடனே ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்கள் அவ்வாறே அதனைத்தங்கள் இனத்தினருக்கும் சிறிய தந்தையின் புதல்வர்கட்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

இதனல் விளங்கப்படுவது யாதெனில், நமக்கு மிகவும் விசுவாசப் பொருளாயிருப்பதை ஆண்டவன் பெயரால் தானமளித்து தியாகம் புரிந்து விடவேண்டு மென்பதும், அன்னியர்கட்கு தானமளிப்பதைக் காட்டினும் தன்னின பந்துமித்திரர்களில் பரம ஏழைகளாயிருப்பவர்களைப் பார்த்து அவர்களுக்கு முதலில் அளித்துவிடவேண்டு மென்பதும், ஆண்டவனது கட்டளையை சர்வ சொத்து சுதந்திரத்தைக் காட்டினும் மேலாகப் பாவித்து நடக்க வேண்டு மென்பது மாகும்.

ஜீவனோபாய உழைப்பும் வணக்கமே யாம்.

இதர அன்னிய மதங்களில், இல்லற தருமத்தை விடுத்து துறவறம் பூண்டுச் சென்று விடுவதையும் வணக்கமெனக் கூறப்பட்டுளது.

ஆனல் இஸ்லாம் மதம் அவ்வித முரண்தன்மையைக் கண்டித்திருப்பதோடு, இல்லறத்தைப் பாதுகாத்து குடும்ப சம்ரக்ஷணைக்காக உழைப்பதும் வணக்கத்தில் சேர்க்கப்பட்டதேயாமென கூறி, மாபெரும் ஆன்மானுகூலம் புரிந்துளது. அடியார்கள் இறைவனை வணங்குவது அத்தியாவசியக் கடமையாகும். ஆனல் வணங்குவதற்கு உடல் நலமும் மன நிம்மதியும் அத்தியாவசியமாய் வேண்டற்பாலனவாகும். ஜீவனேபாய வசதியினுல் உடல் நலமும் மன நிம்மதியும் உண்டாகக் கூடியதா யிருப்பதால் அஃது வணக்கத்திற் சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கேற்ற சில வரலாறுகள் கூறுவாம்.

(1) ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஓரிடத்தில் ஒரு மனிதன் இருப்பதைக் கண்டு ‘நீவிர் என்ன தொழில் செய்துகொண்டிருக்கின்றீர்?’ என்று கேட்டார்கள். அதற்கவன் ‘யான் தொழில் செய்பவனல்ல. ஆண்டவனுக்கு இபாதத்து (தவம்) செய்துகொண்டிருக்கின்றேன்’ என்று பதில் கூறினன். ‘சரி! அப்படியானல் உனக்கு உணவு உடை சாதனங்கள் எவ்வாறு கிடைக்கின்றன?’ என்று மீண்டும் ஹஸ்ரத் அவர்கள் வினவினுர்கள். அதற்கவன், ‘எனக்கொரு சகோதரனிருக்கின்றுன் அவன்தான் எனக்கு உணவு உடை முதலியன கொடுத்துதவி வருகின்ருன்’ என்று பதில் புகன்ருன். எனவே ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அவனை நோக்கி, ‘ஏ மனிதனே! உன்னைவிட உன் சகோதரனல்லவோ பெரிய ஆபிதாக (வணக்கசாலியாக) விளங்குகின்ருர். நீயோ உண்ணவும் உடுக்கவும் சுயமுயற்சி எடுத்துக்கொள்ளாமல் பிறரின் உதவியை வேண்டுகின்ருய்; உன் சகோதிரனே தானே ஜீவனேபாயம் புரிந்து சம்பாதித்து தானுண்டுடுத்தி, தன் குடும்பத்தையும் சம்ரக்ஷிப்பதல்லாமல், உன்போன்ற நிர்க்கதியினர்க்கும் கொடுத்துபகாரம் புரிவதனல் அவன்தான் ஆண்டவனுக்கு மிகவும் விருப்பமானவன், என்றுகூறிச் சென்ருர்கள்.

(2) ஹஸ்ரத் இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்கள் சமுகத்திற்குச் சில மனிதர்கள் வந்து, “ஹஸ்ரத்! உங்களிடம் யாங்கள் ஓர் ஐய வினவுக்கு விடை வேண்டுகின்ரேம். அதாவது, ஒருவன் ஆண்டவனை சதா வணங்குவதற்காகவென்று மஸ்ஜிதின் மூலையில் குந்திக் கொண்டு, எனக்கு ஆண்டவன் ‘ரிஸ்க்’ அளிப்பான் என்று மட்டும் கூறிக்கொண்டு சும்மாவிருக்கின்ருன். அப்படிப்பட்டவன் விஷயமாய் தாங்கள் என்ன கூறுகின்றீர்கள்?” என்று வினவினுர்கள். அதற்கு இமாம் ஹன்பல் (ரஹ்) அவர்கள் கூறிய விடையாவது:— “அந்த மனிதன் ஒன்றுமறியாத மூடனவன்; அவன் ஷரீஅத் இன்னதென்பதை யறியான்; கையைக் கட்டிக் கொண்டு மூலையில் உட்கார்ந்து கிடப்பது அறிவீனர்களுடையவும் சோம்பேறிகளுடையவும் நடத்தையாகும். அல்லாஹ் உடைய கட்டளைகளை ஏற்று இபாதத்துச் செய்து வருவதோடு, உலக வியவகாரப்படி உணவுடையின் அவசியத்துக்காகப் பாடுபட்டுழைத்து ஜீவனேபாயம் புரிவதும் அத்தியாவசியமான கடமையாகும். எனவே மனிதர் புரியும் ஜீவனேபாய உழைப்பும் வணக்கத்துக்குடைந்தையானதாகவும், மனதை நிம்மதியுடன் ஆண்டவன்பால் செலுத்துவதற்கு உதவியளிக்கக் கூடியதாயுமிருப்பதால் அவ்வித உழைப்பும் ஆண்டவனது வணக்க முறைகளில் சேர்க்கப்பட்டதே யாகும்” என்பதாம்.

தாகித்தோர்க்கு ஜலம் புகட்டலின் பலன்.

யாராயினும் தாகத்தினல் அவஸ்தையுறுங்கால் ஜலம் புகட்டி அவரது தாகத்தைத் தீர்த்து வைப்பது புண்ணியமான காரியங்களில் மிக மிகச் சிறந்ததாகும். பிறரது தாகத்தைத் தணியச் செய்துபகாரம் புரிவது இஸ்லாத்தின் (வாஜிபான) கட்டளைகளிலொன்ருகும். மாந்தர்கட்கு ஜலம்புகட்டி தாகந் தீர்த்து வைப்பது போலவே, எளிய ஜீவப் பிராணிகட்கு ஜலம்புகட்டி யுபகாரம் புரிவதும் அத்தியாவசியமாகும். உண்மையான ஜீவகாருண்ய மென்பதும் இதுவேயாம். நமது லோகதயாளர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள், பிற உயிர்கட்பால் எத்துணை காருண்ணிய வள்ளலாயிருந்து தாகசாந்தி புரிவதை போதிப்பவர்களா யிருந்தார்களென்பதற்குறிய ஒரு உண்மை வரலாற்றினைக் கூறுவாம்:—

நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாய் புகாரீ என்னும் ஹதீது கிரந்தத்தில் ஹஜ்ரத் அபூஹுரைரா

(ரலி.) அவர்கள் மூலியமாய் ரிவாயத்துச் செய்யப்பட்டிருப்பதாவது:-"ஒருமுறை ஒரு மனிதர் வழிநடந்து சென்று கொண்டிருக்குங்கால் வழி நடையின் சிரமத்தினால் அவர் அதிகம் சோர்வடைந்து, தாகம் மேலிட்டு நாவறண்டு கிணற்றைத் தேடிச் சென்று ஒரு நன்னீரூற்றுள்ள கிணற்றையடைந்து அதனுள்ளிறங்கி திருப்தியாய் ஜலம் பருகி தாகந் தீர்ந்து மேலேறி வெளியே வந்தபோது, கிணற்றங்கரையில் ஒரு நாய் மிகுந்த தாகத்தினால் உடலொடுங்கி, நாவைத் தொங்கவிட்டுக் கொண்டு தண்ணீர் குடிக்க ஆவலாய் இருப்பதாகக் காணப்பட்டது. அங்கு சிந்திய தண்ணீரால் உண்டாயிருந்த சேற்றில் நாக்கை விட்டு சேற்று நீரைநக்கி நக்கிப்பருகிக்கொண்டிருந்ததைக் கண்டு அவர் யோசிக்கலானார் ஹா! சற்றுநேரத்துக்குமுன் கொடிய தாகத்தினால்சோர்வடைந்து நாவறண்டு தாம் அவஸ்தைப்பட்டதைப் போன்று தானே இந்த எளிய நாயின் நிலைமையுமிருக்கும்? என்று கருதி உடனே கிணற்றில் இறங்கி தன் தோற்பாத உறை (மோஜா) வினால் ஜலம் அள்ளி வந்து அந்த நாய்க்குப் புகட்டி அதன் தாகத்தைத் தீர்த்து வைத்தார். எனவே, அல்லாஹு தஆலா அந்த மனிதர்மீது சந்தோஷப்பட்டு அவரது அந்த முயற்சிக்காக நல்லருள் பாலித்தான்'' என்று நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்கள் கூறி முடித்தபோது, ஸஹாபாக்கள் நபி பெருமானார் (ஸல்.) அவர்களை நோக்கி, "யாரஸூலெல்லாஹ்! நாய்போன்ற ஜீவப்பிராணிகட்கு ஜலம் புகட்டுவதினாலு மாதவாபு (புண்ணியம்) உண்டாகின்றது?'' என்று வினவினார்கள். அதற்கு லோக தயாளர் (ஸல்.) அவர்கள் "ஆம்! அதில் சந்தேகமென்ன? அந்தப் பிராணிக்கும் உயிரும் உடலும் உண்டல்லவா? அதனை ஒவ்வொருவரும் சந்தோஷப்படுத்தி வைப்பதிலும் புண்ணியம் உண்டு'' என்று திருவுளம் பற்றி யருளினார்கள்.

நேயர்காள்! இங்கு சிறிது கவனத்தைச் செலுத்துங்கள்! கேவலம் அசுத்தமான பிராணி யென்று நாம் ஒதுக்கி விரட்டியோட்டும் நாய்க்கு ஜலம் புகட்டி தாகம் தீர்த்து வைப்பதில் இத்துணை புண்ணிய பலன் உண்டெனின், எல்லாப் படைப்புகளிலும் சிரேஷ்டமான மனுஷ்யர்கட்குத் தாகந் தீர்த்து வைப்பதின் மகாத்மியத்தை ஓர்ந்தொழுகுங்கள்.

பிறர் விருந்தை யோப்புக் கொள்ளல்.

நாம் பிறர்க்கு விருந்தளித் துபசரிப்பது நம்மீது அறக்கடமையாயிருப்பது போன்றே யாரேனு மொருவர்—நம்மினும் மிகத் தாழ்வாகக் கருதப்படும் ஏழையாக யிருப்பினுஞ் சரியே அவரோர் அற்பப் பொருளை வைத்து விருந்துக்கு அழைப்பாராகில் அதை நாம் மனச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்வது ஒழுக்கக் கடமையாகும். இதற்குதாரணமாக இமாம் ஹசன் (ரலி.) அவர்களின் வரலாறொன்றைக் கூறுவாம்:—

நபிகள் பெருமானார் (ஸல்.) அவர்களுடைய பேரப் பிள்ளையாகிய ஹஜ்ரத் இமாம் ஹஸன் (ரலி.) அவர்கள் ஒரு முறை தங்கள் அசுவத்தின்மீதேறி ஓரிடத்துக்குப் போய்க்கொண்டிருக்குங்கால் வழியில் ஓரிடத்தில் சில ஏழை ஜனங்கள் உட்கார்ந்து காய்ந்துபோன ரொட்டியைத் தின்று கொண்டிருந்தார்கள். மன்னர்க்கு மன்னவரெனத்தகும் இமாம் ஹஸன் (ரலி) அவர்கள் அவ்வழியே வருவதைக் கண்ணுற்ற அந்த ஏழை ஜனங்கள் அளப்பரிய விசுவாசத்துடன் இமாம் ஹஸன் (ரலி) அவர்களை யணுகி, "எங்கள் நாதரே! ஏழைகளின் உணவில் தாங்களும் உணவு கொண்டு செல்லக் கோறுகிறோம்; தாங்கள் எங்களுடைய விருந்தினராய் அமையும் பாக்கியத்தையாங்கள் வேண்டுகின்றோம்'' என்று விண்ணப்பித்துக் கொண்டனர். பெருந்தன்மையே பூஷணமாய்ப் பூண்டுள்ள இமாம் ஹஸன்(ரலி)அவர்கள், அவ்வெளிய மக்களின் இஷ்டத்தை நிராகரித்துவிடாமல், அதற்குச்சம்மதித்து, தாங்கள் செல்லும் அவசரகாரியத்தையும் சிறிது தாமதப்படுத்திக் கொண்டு குதிரையைவிட்டிறங்கி, அவ்வேழை ஜனங்களுடன் சமமாகத் தரையில் உட்கார்ந்து மிகப் பிரியத்தோடு அந்தக் காய்ந்த ரொட்டியைத்தின்று அன்னோரது மனங்களை சந்தோஷப்படுத்தி வைத்தார்கள்.

மேலும், "அகப்பெருமைக் கொள்ளும் செருக்காளனை ஆண்டவன் விசுவாசிக்கவே மாட்டான்.'' என்றுள்ள குர்ஆன் ஆயத்தின் படிநாம் ஏழை-பணக்காரன், எளியோன்-வலியோன், தாழ்ந்தோன்-உயர்ந்தோன் என்

பனபோன்ற வேறுபாடான பெருமை கொள்ளலாகாது. எல்லோரும் ஆண்டவன் முன் சமத்துவ மானவர்களேயாவோம்'' என்று இமாம் ஹஸன் (ரலி)அவர்கள் அந்த ஏழை ஜனங்கட்கு இதோப தேசம் புரிந்து விட்டு, "செய்நன்றி மறவாமை'' என்னும் நியதிப்படி, அவர்களை நோக்கி, 'நான் இன்று உங்களுடைய விருந்தினனாக அமர்ந்ததைப்போல் நாளையதினம் நீங்களெல்லோரும் என்னுடைய இல்லத்துக்குவந்து, எனது விருந்தினர்களாக அமரவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்' என்று கோரிக்கொண்டார்கள். அதன்படியே மறுநாளன்று பற்பல வகையான உயர்தர உணவுகளைத்தயார் செய்து அந்த ஏழைஜனங்களுக்கு வயிறுற உணவளித்து உபசரித்தார்கள். இங்ஙனம் தங்களுக்கு, நபிப்பேரர் இல்லத்து விருந்தினராயமரும் பாக்கியம் கிடைத்தமைக்கு அவ்வேழைமக்கள் உளம் பூரித்து நாயனைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

இச்சம்பவத்தால் நாம் தெரிந்துகொள்ள வேண்டியதுயாதெனில், இஸ்லாத்தின் சமத்துவ போதனைப்படி, ஏழை வீட்டு விருந்தைப்பாயினும் இழிவென நிராகரித்து விடாமல், மனமுவந்து ஒப்புக்கொள்ளல் வேண்டும்; இன்னும் ஒருவர் நமக்கொரு சிறு உபகாரம் செய்த போதிலும் அந்நன்றியை மறந்து விடாமல், பதிலுக்கு பதிலாய் அதைவிட பன்மடங்கு மேலானமுறையில் செய்நன்றி புரிதல் வேண்டும்; இன்னும் ஏழைஜனங்களை எப்போதும் நம்மாலான வரை ஆதரித்து, அன்புடன் விசிவாசித்தல் வேண்டும் என்பனவாம்.

அவசரமாய்ச் செய்ய வேண்டிய காரியங்கள்.

'அவசரக்காரியம் ஆகாதகாரியம், என்பது ஒரு சாதாரண பழமொழியே யாயினும் அம்மொழியும் சில சமயங்களில் அனுஷ்டிக்கத்தகாத வைகளாகின்றது. ஏனெனின் சில காரியங்களை அவசரமாகவும் அவசியமாகவும் தாமிதமின்றி செய்து முடிப்பதுதான் கண்ணியமாகவும் புண்ணியமாகவும் இருக்கின்றது. இதற்கு உதாரணம்:—

ஹஜ்ரத் ஹாதம அஸம் (ரஹ்.) அவர்கள் உபதேசித் திருப்பதாவது:—"ஆத்திரப்பட்டுச் செய்யுங்காரியம் ஷைத்தானின் காரியங்களே யாயினும் பின்வரும் ஐந்து காரியங்களை அத்தியாவசியமாய் மிகமிக அவசரமாகவே செய்தாக வேண்டும். அவை:—

(1) விருந்தினர்க்கு உணவு ஊட்டல்.

(2) மய்யித்தை அடக்கஞ் செய்தல்.

(3) வாங்கின கடனைத்திருப்பிக்கோடுத்தல்.

(4) பெண் பிள்ளையை மணமுடித்து வைத்தல்.

(5) பாபங்கட்கு (தவ்பா) மன்னிப்புக் கோறல் ஆகியவைகளாகும்.

இன்னும், நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் அவசரமாய்ச் செய்யத் தக்க காரியங்களை யொட்டி தங்கள் மருகர் ஹஜ்ரத் அலீ (ரலி.) அவர்கட்கு உபதேசித்திருப்பதாவது:—அலியே! தாங்கள் மூன்று விஷயங்களில் காலதாமஞ் செய்யவேண்டாம். அவை;

(1) நேரம் வந்ததும் பரலான தோழுகை நிறைவேற்றல்.

(2) ஜனுஸா வந்திருக்கும்போது தோழுதல்

(4) விதவையை மணந்து கோள்பவன் கிடைத்துள்ளபோது விவாகம் முடித்துவிடல் ஆகியவைகளாம்.

இன்னும் "விதவையானவள் மறுகணவனை மணந்துகொள்வதை இழிவு என யாரேனும் எண்ணுவாராயின் அவரது ஈமான் ஸலாமத்தாக இருக்கமாட்டாது'' என்று நமது வள்ளல் றஸூல் (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கின்றார்கள்.

சுகமும் சௌகரியமும் வணக்கத்துக்கு அவசியமே.

"சுகவாழ்வையும், சௌக்கியா சௌக்கியங்களையும் ஒரே அடியாய் விட்டு உலகத்தையே உதறித்தள்ளி துறவற வாழ்வுகொள்ளல் தான் ஞானமார்க்கம்'' என்று ஒரு சிலர் செப்பித்திரிவது அறியாமையினுல் எழுங்கூற்றேயாகும். ஏனெனின், ஆண்டவனை வணங்குவதற்கு சரீரசக்தியும், தேக சுகமும், உலக சாதன சௌகரியங்களும், மனதின் நிம்மதியும் மிக மிக அத்தியாவசியமாகும். இறைவனுடைய வணக்கத்திலும், தியானத்திலும் ஒரே அடியாய் ஆழ்ந்து சிரமத்துக்குள்ளாய் விடாமல் இடையிடையே சிரமபரிகார சுகம் பெறுதல் அவசியமாகும்.

நமது றஸூல் (ஸல்.) அவர்கள் ஓரோர் சமயம் 'முஷாஹதா' என்னும் ஆன்மார்த்த தியானத்தில் ஆழ்ந்துவிடுவார்களானல், அவர்களது மனித தேகமானது ஒரு பெரிய சுமக்கொணு சுமையைச் சுமந்ததைப் போன்று சோர்வடைந்துவிடும். அப்போது அவர்கள் தங்களது உத்தம பத்தினி ஹஜ்ரத் ஆயிஷா நாயகி (ரலி.) அவர்களை அழைத்து "ஆயிஷாவே! என்னேடு சிறிது நேரம் முகமலர்ந்து பேசுவாயாக;" என்று கூறி சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிஆன்ம சிரம பரிகாரம் (ராஹத்தெரூஹ்) பெறுவார்கள். மேலும் எம்பிரான் (ஸல்.) அவர்கள் சில சமயம் தொழுகையில் அதிகம் ஈடுபட்டிருந்து சோர்வடைந்து விடுங்கால், ஹஜ்ரத் பிலால் (ரலி.) யை அழைத்து 'பிலாலே! எனக்கு சிறிது ராஹத்து அளிப்பீராக' என்று கோறுவார்கள். பிறகு சிறிது நறுமணத்தை முகர்ந்து ராஹத்தும் சந்துஷ்டியும் அடைவார்கள்.

"என்பால் உலகத்தின் மூன்று வஸ்துக்கள் விசுவாசமாய் இருக்கின்றன. (1) நறுமணம் (2) பெண்மணி (3) தொழுகையில் உண்டாகும் கண் குளிர்ச்சி" என்று நபிகள் பெருமானர் (ஸல்.) அவர்கள் திருவுளமாயிருக்கின்ருர்கள்.

ஹஜ்ரத் அலீ (ரலி.) கூறியிருப்பதாவது:— "சுகத்தையும் சௌகரியத்தையும் மனதை விட்டு ஒரே அடியாய் ஒழித்துப் போடாதீர்கள். இல்லையேல் மனக்கண் குருடாய்விடும்" என்பதாகும்.

எதிலும் நிதானமும், ஒப்வும், அனுகூல சிந்தனையும் வேண்டும். இவ்வாறெல்லாம் இஸ்லாத்தின் போதனை ஒவ்வொன்றும் ஆழ்ந்த கருத்தும் உயரிய தத்துவமும் நிரம்பப் பெற்றதாகுமென்பதில் ஐயமில்லை. ஆகவே, இஸ்லாத்தின் போதனைகளையும் அதன் தத்துவ விவேகங்களையும் உணர்ந்தொழிகி உய்வோமாக!

எம்பிரான் (ஸல்) அவர்களின் வாழ்க்கை.

சற்குணசீலர் உத்தமதயாளர் எம்பிரான் (ஸல்.) அவர்கள், மானிடர் யாவரிலும் படைப்பாலும் குணத்தாலும் மிகச் சிறந்தவர்களாகவும், உயர்பதவி யுடையவர்களாகவுமிருந்து வந்தார்கள். சுருங்கக் கூறப்படின், மானிடர்களில் எவ்வளவு மேன்மை நிறைபூர்ணமானகுணம் முதலிய சற்குணங்கள்காணப்படுகின்றனவோ அவையாவற்றும் ஒருங்கே எம்பிரான் (ஸல்) அவர்கள்பால் திகழ்ந்திலங்கிக் கொண்டிருந்ததென தைரியமாய்க்கூறலாம். நமது சற்குண சீலர் உலகதயாளர் (ஸல்) அவர்களைத்தவிரயுள்ள நபிமார்களெல்லாம் இதர மானிடர்களைவிட அந்தரங்க வெளிரங்கக் குணங்களில் சிறந்து விளங்கிஞர்களென்பது வெள்ளிடை. ஆனல், நமது சர்வரேஆலம் (ஸல்.) அவர்கள் இதர நபிமார்களைவிட தனிப்பட்ட சிறப்பினையுடையவர்களாய்த் திகழ்ந்து வந்ததோடில்லாது இதர நபிமார்களில் எத்துனை சற்குணங்கள் காணப்பட்டனவோ அவை யாவற்றும் அதைவிடபதிமடங்கு அதிகமாய் நாயகம் (ஸல்) அவர்கள்பால் காணப்பட்டு வந்தது. எனவே உலகதயாளர் (ஸல்) அவர்களில், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் வலுப்பமான தோற்றமும், ஈஸா (அலை) அவர்களின் சற்குணத் தன்மையும், தாவூத் (அலை) அவர்களின் வீரியத் தத்துவமும், சுலைமான் (அலை) அவர்களின் அறிவு பூராயமும், ஈசுப் (அலை) அவர்களின் அழகும், அய்யூப் (அலை) அவர்களின் பொருமையும் இன்னும் இதர நபிமார்களில் காணப்பட்ட விசேஷ குணங்களும் தங்கள்பால் நிறைபூர்ணமான முறையில் சிறந்து காணப்பட்டது. ஆகவே அவர்கள்பால் சிறந்து விளங்கிய சற்குணம், தயாளம் முதலியவைகளைக்கண்டு இஸ்லாத்தின் விரோதிகளுங்கூட அவர்களைப் போற்றிப்புகழ்ந்து கொண்டிருந்தார்களென்பது உலகறிந்த விஷயமேயாகும்.

தந்தையின் வாடையும், தாயின் பராமரிப்பும், உபாத்தியாயரின்சீர்திருத்தமும்பெருத ஒருவரிடத்தில், அவரைச் சேர்ந்தோர்களெல்லாம் விக்ரஹ ஆராதனை யுடையவர்களாகயிருக்கும் நிலைமையில், ஏகத்துவக் கொள்கை

மிளிர்ந்து காணப்படுவது பெரும்ஆச்சரியகர மானகாரியமல்லவா? ஏகத்துவத்தூதர்(ஸல்) அவர்கள் ஒருக்காலும் எந்த விக்ரஹத்திற்கு முன்பும் தங்கள் தலையை சாய்த்ததே கிடையாது. தங்களுக்கு நபிப்பட்டம் கிடைத்து மானிடர்களை சன்மார்க்கத்தின் பக்கல் அழைப்பதற்கு முன்பே, தங்களில் காணப்பட்ட அமானத், உண்மை இவைகளைக் கண்டு யாவரும் மெச்சிப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். தங்களுக் கேற்பட்டிருந்த நாணத்தால் யாருடைய முகத்தையும் கண் கொண்டு பார்க்காதவர்களா யிருந்தார்கள். தங்களுடைய ஒவ்வொரு செயலும் சொல்லும் ஞாயமுடையதாகவும் ஒழுங்கு ரீதியுடையதாகவும் இருந்து, தங்களுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் ஏகத்துவம் அறிவு இவைகள் மிளிர்ந்து கொண்டிருந்தன. சக்திஅற்றோர், ஏழை மிஸ்கின் முதலியோர் மீது கிருபையாளராகவும், விரோதி சிநேகிதன் என்னும் பாகுபாடின்றி யாவர்களுடனும்சற்குணத்தோடுநடந்துகொள்பவர்களாயுமிருந்தார்கள். அல்லாஹ் தஆலாவே அவர்களுடைய சற்குணத்தை மெச்சி, "தாங்கள் பெரும் வலுப்பமான சற்குண முடையவர்களாயிருக்கிறீர்கள்" எனக்கூறி யிருக்கிறான். எம்பெருமானார் (ஸல்.) அவர்களை, அல்லாஹ் தஆலா இவ்வுலகின்கண் எல்லா நபிமார்களைவிட சிரேஷ்டமானவர்களாக ஆக்கி, சகலமார்க்கத்தைப் பார்க்கினும் சிரேஷ்டமானமார்க்கத்தைப்பிரசாரஞ்செய்வதற்காக அனுப்பிவைத்திருந்தது போல், எந்த நபிமார்களுக்கும் ஏற்பட்டிராதவிதமாக விரோதிகளும் தங்களுக் கேற்பட்டிருந்தார்கள். அதாவது, மக்க்த்துக் குப்பார்கள் நோவினை செய்வதற்காக ஏற்பட்டுள்ள காரியங்களை கொஞ்சமேனும்விட்டுவிடாமல் யாவற்றையும் அனுஷ்டித்துக் காட்டிவிட்டார்கள். சகோதரவாஞ்சை, பந்தத்துவம் முதலியவைகளை ஒருபக்கல் ஒதுக்கி வைத்துவிட்டு கஷ்டம் கொடுப்பதென்னும் வேலையிலீடுபட்டு உயிர்வதை செய்து விடவேண்டு மென்றுங் கூட சதியோசனை புரியமுற்பட்டுவிட்டார்கள். ஆனால் மதியில்லா மக்களால் இழைக்கப்பட்டு வந்த தவறுகள் யாவற்றையும் சற்குண சீலர் பெருமானார் (ஸல்.) அவர்கள் பொருமையோடு சகித்துக்கொண்டு தங்கள் காரியத்திலேயே கண்ணுயிருந்தார்களே யன்றி அச்சதியர்கள் விஷயமாய் எவ்வித வார்த்தையையும் உபயோகித்தார்களில்லை

"உஹத்" யுத்தத்தில் சத்தியத்திருத்தூதர்(ஸல்.)அவர்களது சிறப்புத்தங்கிய பற்கள் ஷஹீதாய் கன்னத்தில் இரத்தம் வடிந்து கொண்டிருப்பதைத் தாங்கள் துடைத்தவர்களாக, என்னுடைய இரத்தத்தினின்று ஒரு துளி பூமியின்கண் விழுந்து விடுமாகில், அல்லாஹ் தஆலா அவர்கள் (குப்பார்கள்) மீது வேதனை இறக்கிவிடுவான். எனக்கூறியதை சங்கைவான்களான சஹாபாக்கள் கேட்டு மனம்சகியாதவர்களாய்,அல்லாவின் ரசூலே! ஹஸ்ரத்நூஹ் (அலை.) அவர்கள் தங்களுக்கு மாறுசெய்தவர்கள் விஷயமாய் சாபமிட்டது போல், இது சமயமும் இன்னோர் மீது சாபமிடுங்கள் எனக்கூறினார்கள். இதனைக் கேட்டு சத்தியத்தூதர் தயாளசீலர் (ஸல்.) அவர்கள், நான் சாபமிடுவதற்காக அனுப்பப்படவில்லை; நான் கிருபையாளராக யிருக்கும் நிலைமையில் மக்களை சன்மார்க்கத்தின் பக்கல்அழைப்பதற்காகவே வந்திருக்கிறேன் எனக்கூறிவிட்டு "யா அல்லாஹ்" தெரியாத இந்தஜனங்களுக்கு நேர்வழியைக் காண்பித்துக் கொடுப்பாயாக" என பிரார்த்தனை புரிந்தார்கள். எவ்வாறுன ஆச்சரியமுடைய சந்தர்ப்பமாக யிருக்கிறது பாருங்கள்? அருமை பொருந்திய கன்னத்தில் இரத்தம் வடிந்து கொண்டிருக்கும் நிலைமையில் இரு உலகின் கிருபையாளரவர்கள், சதியர்கள் விஷயமாய் பிரார்த்தனை புரிந்து கொண்டிருக்கிறார்கள். என்னே தயாளம்!என்னே காருண்யம்!! என்னே கிருபை !!!

"அரமானது சந்தனக் கட்டையை அறுத்துத் துண்டந்துண்டமாக ஆக்கிவிட்டபோதிலும் சந்தனக் கட்டையானது அரத்தை வாசனையுடையதாகச் செய்யாமலிருந்து விடுவதில்லை" என்னும் பழமொழியையும், ஒருவன் உனது ஒரு கன்னத்தில் அடி கொடுப்பானுகில் மறு கன்னத்தையும் அவனுக்குமுன்னுலாக்கிவிடுவாயாக; எவனுகிலும் உமது மேல் வேஷ்டியைப் பிடுங்கிக் கொள்ள நாடுவானுகில் அவனுக்கு சட்டையையுங் கழற்றிக் கொடுத்து விடுவாயாக, என ஹஸ்ரத் ஈஸா (அலை.) அவர்கள் கூறிய சற்குண செயலும் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் விஷயமாய் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். ஹஸ்ரத் ஈஸா (அலை.) கூறியுள்ள சற்குணத்தை அக்

காலை அனுஷ்டித்துக் காட்டியவர்கள் யாருங் கிடையாது. ஆனால் எம்பெருமானார் (ஸல்.) சதியர்கள் விஷயமாய் எவ்வித வார்த்தையையும் உபயோகித்தார்களில்லை.

அவர்களின் வாழ்நாளில் இவைபோலொற்ற எத்துணையோ முன் மாதிரியான சம்பவங்கள் சிறந்து விளங்கிக் கொண்டிருந்தது. தாங்கள் சதாவும் தங்களுக்குச் செய்த கெடுதிகளுக்கு நன்மையைக் கொண்டே பகரஞ் செய்து வந்திருக்கிறார்கள். அவைகளிலொன்றை நேயர்களின் பார்வைக்குத் தருகிறேன். அதாவது, ஒரு யஹூதியானவர் மதீனாவுக்கு வந்து, கடைசி நபி விஷயமாக முந்திய வேதங்களில் கூறப்பட்டிருக்கும் அடையாளங்களெல்லாம் முஹம்மது (ஸல்.) அவர்களில் பிரத்தியக்ஷமாய்க் காணப்படுகிறது; ஆனால் கடைசி நபிக்குள்ள அந்தரங்கமான குணமொன்று அவ்வேதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது, அவர்களிடத்தில் எவ்வளவு தூரம் கடுமைசெய்தபோதிலும் அவர்கள் பொருமையையே கையாளுவார்கள் என்பதே. ஆகவே அதையும் பரிசோதித்து விடவேண்டுமென்று எண்ணினார். எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஏற்கனவே அந்த எஹூதியினிடம் ஐந்து தீனார்கடன் வாங்கிக் கொண்டு அதற்காக இன்னதேதியில் இவ்வளவு பேரீச்சம் பழம் தருவதாகக் கூறியிருந்தார்கள். அந்த எஹூதியானவர் தவணைக்கு மூன்று தினங்களுக்கு முன்பே பொருமையைப்பரீக்ஷைசெய்வதற்காக ரொம்பக்கடுமையாக பேரீச்சம் பழத்தைக்கேட்டு சட்டையைப் பிடித்திழுத்து உங்களிடம் கொடுப்பதெல்லாம் இப்படித்தான் போகிறது; எனக்கு அவசியம் பழம் தேவையிருக்கிறது தாமதமின்றிக் கொடுத்துவிடவேண்டுமென்று வற்புறுத்தினார். அதுசமயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கிருந்தார்களாதலால் அந்த எஹூதியின் அறியாமையைக்கண்டு கண்கள் சிவந்தவர்களாக கோபத்திலாகி "அல்லா உடைய ரசூலே! அனுமதி அளிப்பீர்களாகில் இந்த மடையனுடைய சிரசைப் பறக்க விட்டுவிடுகிறேன்" எனக் கூறினார்கள். சற்குண சீலர் (ஸல்) அவர்கள் இதனைக் கேட்டு குஞ்சிறிப்புடையவர்களாய் "ஏ உமரே! இந்த சமயத்தில் தவணையில் மூன்றுநாள் குறைவாகயிருந்தபோதிலும் கடனை நிறைவேற்றிவிடும்படி என்னிடமும், மானுஷ்யத் தன்மையோடு கடனைக் கேழ்க்கும்படி எஹூதியினிடமும் கூறவேண்டியது உங்களுக்கு அவசியமாகயிருந்தது. ஆகவே அவருடன் சென்று அவருக்கேற்பட்டுள்ள பேரீச்சம் பழத்தைக் கொடுப்பதுடன் நீங்கள் அவரைப் பயப்படுத்தியதற்காக 20 சேர் அதிகமாகச் சேர்த்துக்கொடுங்கள்" எனக்கூறினார்கள். இதனைக்கண்ட எஹூதியானவர், 'கடைசி நபிக்குள்ள யாவற்று அடையாளங்களும் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் தன்மையில் வெளிரங்கமாகச் சிறந்து விளங்கி வருவதைப் பார்த்து வந்திருப்பதுடன் பொருமை சம்பந்தமான ஒரு அடையாளத்தையும் பரிக்ஷிக்கவேண்டுமெனக் கருதியிருந்தேன். இதுபொழுது அதனையும் பரீக்ஷித்துவிட்டேனாகையால் என் மனம் திருப்தி அடைந்துவிட்டது. ஆதலால் நான் முஸ்லிமாய்விட்டேன், எனக்கூறி சந்தோஷ ஆரவாரஞ் செய்துகொண்டு தம்மிடமுள்ள ஐசுவரியங்களை எல்லாம் முஸ்லிம்களில் தேவையுற்றோருக்குக் கொடுத்துவிட்டார். ஆஹா பார்த்தீர்களா ? என்ன பொருமை! இச்சம்பவத்தால், எம்பெருமானார் (ஸல்) அவர்களினது சற்குணத்தால் தான் இஸ்லாத்தின் தத்துவங்கள் விரோதிகளின் மனதிலும் பதிந்து இப்பூவுலகின்கண் சிறப்புற்று விளங்கிற்றென்பதை நன்கு தெரிந்துகொள்கிறோம். உண்மை இவ்வாறிருக்க பொறுமை குணத்தையே பூஷணமாகக் கொண்ட ஒரு சிலர் பிதற்றித் திரியும் பொய்க்கூற்றுக்களை உலகம் எவ்வளவு தூரம் நம்பப்போகிறதென்பது அன்னோருக்குத் தெரியாதுபோனமைக்கு நாம் வருந்தவேண்டியிருக்கிறது. அல்லாஹ்தான் அவர்களுக்கு நேர்வழி காண்பிக்க வேண்டும்.

மூன்றும் வால்யூம்

நம் அரும் மாசிகையாகிய "ஹிபாஜத்துல் இஸ்லா"த்தின் மூன்றும் வால்யத்தின் சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கிறது அது ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும் வேண்டுவோர் தாமிதமின்றிப் பெற்றுக்கொள்வார்களாக.

பாதுஷாவும் பகீராய் விடுகின்றார்.

பலக் தேசய அதிபரின் மரணத்திற்குப் பின் ஹஸ்ரத் இப்ராஹீம் பின் அத்ஹம் அவர்கள் அத்தேசய சிம்மாஸனத்திற்கு அதிபதியானார்கள். அவர்கள் அரசாக்ஷி புரிவதில், குடிமக்கள் மீது அன்பு பூண்டொழுகிய விஷயமும், நெறிநீதி தவறாது அரசுபுரிந்து வந்ததும் உலகத்தையே பிரமிக்கச் செய்துகொண்டிருந்தது. ஆண்டவன் அவர்களுக்கு அதிகாரஞ் செய்யும் தோரணையின் விதத்தை தக்க முறையில் அளித்திருந்தான்போலும். பலக் தேசத்திலுள்ள மந்திரி பிரதானிகளென்ன தலைவர் முதல் சாமான்யர்வரையிலுள்ள சகலரும் அவர்களின் அதிகாரத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறவர்களா யிருந்தார்கள். ஆகவே பலக் வாசிகள் யாவரும் ஹஸ்ரத் அவர்கள்மீது அளவற்ற பிரீதி கொண்டவர்களாய் இருந்தார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் கீர்த்திவாய்ந்த மாபெரும் சக்கரவர்த்தியாக யிருந்தும், அவர்களது சுபாவத்திலேயே ஏழ்மைத்தனம், தாழ்மை, அடக்க ஒழுக்கங்கள் முதலிய சற்குணங்கள் சிறந்து விளங்கிக்கொண்டிருந்தது. அதிகாரத்தோரணை என்னும் பெரும்புயற்காற்று அதிவிரைவாக வீசிக்கொண்டிருக்கும்பொழுதும், ஹஸ்ரத் அவர்கள் முழுதும் சன்மார்க்கப் பந்தப்படியே நடந்துவந்தார்களாதலின் உலமாக்கள், மகான்கள், கல்விமான்கள், ஏழைகள் முதலியவர்கள்மீதும் அதிக அன்பு பூண்டிருந்தார்கள். மேலும் மார்க்க நிபுணர்கள், ஏழைகள், புத்திமான்கள் முதலியவர்களுடனேயே சதா சினேகஞ் செய்து அவர்களுடன்கூடி பழகிவருவதை அதிகம் விரும்புகிறவர்களா யிருந்தார்கள்.

இந்நிலைமையில் ஹஸ்ரத் இப்றாஹிம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த இராஜ கிரீடத்திற்குப் பகரமாய் வலித்தனத்தின்கிரீடத்தை அளிக்கவேண்டுமெனவும், தனது பிரீதி என்னும் கியாதிவாய்ந்தபோர்வையை அவர்களுக்கு நன்கொடையாக அளிக்கவேண்டுமெனவும் ஆண்டவன் நாடியிருந்தான்போலும். ஆகவே, ஹஸ்ரத் அவர்கள் ஆரம்பமாக அல்லாஹ் தஆலாவின் பக்கல் தங்கள் முழு கவனத்தையும் செலுத்தியதற்குள்ள முந்திய காரணமாவது, ஒருநாளன்று ஹஸ்ரத் அவர்கள் இராஜமாளிகையின் மேல் மெத்தைமீது படுத்து நித்திரை செய்துகொண்டிருக்குங்கால் ஒரு மனிதன் இராஜமாளிகையிலுள்ள மெத்தையின் பல பாகங்களிலும் ஏதோ தேடுவதுபோல் அங்கு மிங்கும் அலைந்து திரிவதைப் பார்த்து நீர் யார்? எதைத் தேடிக்கொண்டு அலைகிறாய்? என அதிகாரத் தோரணையில் கேழ்ப்பதுபோலவும் அதற்கு அம்மனிதர், எஜமான் அவர்களே! என் ஒட்டகம் காணாமற் போய்விட்டது அதனைத் தேடிக்கொண்டு அலைவதாக கூறுவதுபோலவும், அதற்குத் தாங்கள் ஒட்டகத்தை மேல்மெத்தையில் தேடுவது எவ்வளவு தூரம் விவேகத்தனமாகுமென்று கூறுவதுபோலவும், அதற்கு அம்மனிதன் தாங்கள் அழகிய மஹாலின் வளம்பொருந்திய மெத்தையில் சுவண்டியான விறிப்பில் படுத்துக்கொண்டு ஆண்டவனைத் தேடிக்கொண்டிருப்பது எவ்வளவு தூரம் விவேகத்தன்மையாகும்? இந்நிலைமையில் ஆண்டவனைத் தேடுவதைவிட நான் இவ்விடத்தில் ஒட்டகத்தைத் தேடுவது மூடத்தனமல்லவென்று கூறுவதுபோலவும் சொர்ப்பனங்கண்டு பதறி விழித்தார்கள். இவ்வாறு அம்மனிதன் உபயோகித்த வார்த்தை என்னும் அம்பானது ஹஸ்ரத் அவர்களின் ஹிருதயத்தில் பதிந்துவிட்டதன்பயனாய், தன் உணர்வற்றவர்களாய் இரவு முழுதையும் அதே சிந்தனையில் போக்கினார்கள். பொழுது விடிந்தவுடன் புதியதோர் உலகம் தோன்றுவதுபோல் காணப்பட்டது. ஹஸ்ரத் அவர்கள் அத்தோற்றங்கள் பக்கல் மனதைத் திருப்பாது இரவு கண்ட காக்ஷியின் பக்கலே முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்தார்கள். அக்காக்ஷியானது மூளையிலிருந்து ஹிருதயம்வரை ஆழ்ந்து பதிந்து விட்டதால் வேறு விஷயத்தில் மனம் செல்வதற்கு ஹேதுவில்லாதிருந்தது. என்றாலும், ஹஸ்ரத் அவர்கள் மன ஆறுதலுக்காக தர்பார் நடத்த ஆரம்பித்தார்க

ளாதலின் மந்திரி பிரதானிகள் யாவரும் அவரவர்களுக்காகக் குறிப்பிடப்பட்டிருந்த இடத்திற்கு வந்து உட்கார்ந்தார்கள். இந்நிலைமையில் ஒரு பரதேசியானவர் பரக்கோலத்துடன் யாதொரு அச்சமுமின்றி தர்பாருக்குள் வந்து நுழைந்தார். அவருடைய நிலைமையை கவனிக்கப் புகின், அங்கேயே தங்குவதற்கு நாடுவதுபோல் தோன்றிற்று. உடனே ஹஸ்ரத் அவர்கள் ஆச்சரியமுற்றவர்களாய், நீங்கள் யார்? எதற்காக இவ்விடம் வந்திருக்கிறீர்கள் எனக் கேட்டார்கள். அதற்கு அவ் வழிப்போக்கர், "நான் வழிப் பிரயாணியாகையால் இந்த சத்திரத்தில் தங்குவதற்காக வந்திருக்கிறேன்" எனக் கூறினார். அதற்கு ஹஸ்ரத் அவர்கள், இது சத்திரமல்ல; எமது வீடாயிருக்கும் எனக் கூறினார்கள். இதனைக் கேட்டு அவ் வழிப்போக்கர், நல்லது இதற்குமுன் இதில் யாரிருந்தது? எனக் கேட்டார். அதற்கு, என் தந்தையிருந்தார், என ஹஜ்ரத் அவர்கள் கூறினார்கள். அதற்குமுன் யாரிருந்தது என பிரயாணி கேட்டார். அதற்கு, அவருடைய தகப்பனார் இருந்தாரென ஹஸ்ரத் கூறினார்கள். பிறகு அதற்குமுன் யாரிருந்ததென அந்த முஸாபிர் கேட்டார். அதற்கு அவருடைய தந்தையிருந்தாரென ஹஸ்ரத் அவர்கள் கூறினார்கள். இவ்வாறே முஸாபிர் கேட்பதும் ஹஸ்ரத் அவர்கள் அதற்கு ஜவாப் சொல்வதுமாக யிருந்து முடிவில் முஸாபிரானவர், எந்த இடத்திற்கு, ஒருவர் சென்றபின் மற்றவர் வந்துகொண் டிருக்கின்ருரோ அந்த இடம் சத்திர மன்றி வேறு என்னவாகும்? என கேட்டுவிட்டு தர்பாரினின்று வெளிவந்து எங்கேயோசென்று மறைந்து விட்டார்.

நினையாப் புறத்தாலுள்ள அம்புப் பெட்டிலிருந்து வெளிவந்த இரண்டாவது அம்பாகிய இச்சம்பவமும் ஹஸ்ரத் அவர்களின் ஹிருதயத்தைப் பெரிதும் புண்படுத்தி விட்டது. எனவே இந்நிகட்சிக்குப் பின் ஹஸ்ரத் அவர்கள், தர்பார் நடத்துவதையும்விட்டு மனதைத் திருப்பிக் கொண்டார்களாயினும் அமைதி சமாதானம் குடிகொண்டிருந்த மனதில் வெருட்சி ஏற்படலாயிற்று; இராஜமாளிகையில் காணப்பட்ட அலங்காரத் தோற்றங்க ளெல்லாம் வெறுப்பாகத் தோன்ற ஆரம்பித்தது. இதனுல் சுல்த்தான் அவர்கள் பட்டணத்தை விட்டு வெளியேறிச் சென்று வேட்டையாடியும், திறந்த வெட்ட வெளி மைதானத்திலுள்ள புதிய காற்றை சுவாசித்து புத்துணர்ச்சி பெற்றும் வர வேண்டுமெனக் கருதினுர்கள்.

உடனே வேலையாட்கள் சகிதம் இராஜ வைபவத்தோடு கானகத்தின் பக்கல் புறப்பட்டுச் சென்ருர்கள். அங்கு வெகு தூரத்தில் ஓர்மான் நிற்பதைக் கண்டு சுல்த்தான் அவர்கள், அதைத் துடர்ந்து சென்ருர்களாதலின் வேலைக்காரர்களை விட்டு வெகுதூரத்திலாய் விட்டார்கள். இந்நிலைமையில் சுல்த்தான் அவர்களுக்கு ஆண்டவனது காட்சிகளின் தோற்றங்கள் பல புலப்பட ஆரம்பித்ததும், சுல்த்தான் அவர்களது மனம் தடுமாற்றமடைய ஆரம்பித்தது. சுல்த்தான் அவர்கள் அந்தமானின் சமீபம் சென்றவுடன் அந்த மானனது சுல்த்தான் அவர்களை நோக்கி "ஏ இப்ருஹீமே! நீர் என்னை வேட்டையாடக் கருதுகின்றீர்" நான் உமது வேட்டைக்காகத்தான் அனுப்பப்பட்டிருக்கிறேன்" எனக் கூறியது.இதனைக்கேட்டு சுல்த்தான் அவர்கள் பிரமித்து அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்கள். பிறகு கையிலிருந்த வாளானது "ஏ இப்ருஹீமே! உம்மை ஆண்டவன் உலகத்தின் ஆசாபாஸங்களை அனுபவிக்கிறதற்காகப் படைக்க வில்லை! உம்மைப் படைத்ததின் நோக்கம் வேருகும் என்னும் ஓசையைக்கிளப்பியது. இதுவன்றி அம்பு, மோதிரம் செருப்பு முதலியவைகளினின்றும் இவ்வாருன சப்தம் வெளிவந்ததுடன் கானகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவும் இவ்வாறேகூற முற்பட்டது. எனவே இவைகளெல்லாம் சுல்த்தான் அவர்களின் மனதைக் குழப்பத்திலாக்கி வைத்துவிட்டது இந்நிலைமையில் சுல்த்தான் அவர்களுக்கு முன், உலகமானது தன் முழு சிங்காரிப்புடனும்,அல்லாஹ தஆலாவின் அபாரசக்தியின் தோற்றங்களானது தன் முழு ஜொலிப்புடனும் வெளியாயிற்று. ஹஸ்ரத் அவர்களோ தங்கள் குதிரையின் மீது வீற்றிருந்த வண்ணமே ஆழ்ந்த சிந்தனையிலாய் இது பொழுது என்ன செய்வதென யோசித்து ஆண்டவனது பாதையைத் தெரிந்துகொண்டு மானிடனை ஆண்டவன் இவ்வுலகின்கண் படைத்தனுப்பிய நோக்கத்தை நிறைவேற்லாமென்ருலோ, பலக் தேசத்தின் இராஜ்ய

பரிபாலனம், பொன்னுசை சிம்மாசனத்தின் கீர்த்தி திரவியத்தின் மீதுள்ள கவர்ச்சி, மாளிகை தோட்டம் பூங்காவனம் இவைக ளின் மீதுள்ள பற்று முதலானவைகள் மனதை விட்டு அகன்று விடுவதற்கில்லை. இதுவன்றி இளங்கண்ணியாகிய சக்ரவர்த் தினி தம்மைச் சிங்காரித்துக் கொண்டு வந்து பாதையில் நின்று ஹஸ்ரத்அவர்கள் வெளிப் புறப்படுவதைத் தடைசெய்து கொண்டிருப் பதுபோல் தோன்றியதானது, உலக வாழ்க்கையின் பிரதான நோக்கத்தை ஞாபகமூட்டிக்கொண் டிருந்தது. இவை யாவற்றையும்விட பால்குடிமறவா சிறுபால கன் இவ்வுலகினைப் பார்த்து சிலகால்அழுது கொண்டும் சிலகால்சிரித்துக்கொண்டு மிருப் பதைவிட்டு எப்படிப் பிரிவதென்னும் நோவி னை ஒருபக்கல் மனதை வாட்டமுற்பட்டு விட் டது. மனக்கவர்ச்சியைக் கொடுக்க வல்ல இவ்வாறான ஆயிரக்கணக்கான தடைகளை விட்டு மனதைத் திருப்பிக்கொள்வதோ மா பெரும் கஷ்ட சாத்தியமான காரியமாகத் தோன்றிற்று. என்றாலும்,ஹஸ்ரத் அவர்கள் இவ்வளவு இடுக்கண்களையும் அகற்றிவிட்டு குதிரையை விட்டிறங்கி உலக சம்பந்தங்க ளென்னும் சங்கிலியை முறித்தெறிந்துவிட் டார்கள். பிறகுஹஸ்ரத் இப்ராஹீம் அவர் கள் அந்த இடத்தைவிட்டு கால்நடையாகச் செல்லுங்கால் சற்று தூரத்தில் ஆடுமேய்க் கும் ஒருவன் நிற்பதைக் கண்டு அவனைச் சமீபத்தி லழைத்து தங்களது விலைமதிக் கொண்ணாத விலையுயர்ந்த உடுப்புகளை அவ னிடம் கொடுத்துவிட்டு, அவனது பழைய கந்தலான கிழிந்த உடைகளைத் தாங்கள் வாங்கி அணிந்துகொண்டு உள்ரங்க வெளி ரங்கக் கோலங்கள் யாவற்றையும் உலக சம்பந்தத்தைவிட்டு நீக்கிக்கொண்டு ஆண் டவனது நாட்டத்திலேயே பராக்காய்விட் டார்கள். இதனைத்தான் உறுதியான எண்ண மென்றழைக்கப்படும். ஆண்டவன் ஒரு மனிதனைத் தனக்குகப்புள்ள அடியானாகச் செய்துகொள்ள நாடுவானாகில், அவ்வடி யானில் தக்க மன உறுதியைக் கொடுத்து விடுகிறான். மனோ உறுதி என்பது ஒரு சிரேஷ்ட பிரதான வஸ்துவாகும். அதன் பயனாய் மாபெரும் பருவதங்களின் அஸ்தி வாரத்தையுங்கூட உடைத்துத் தூளாக்கி விடுவதற்கும், கடல் அலைகளைத் தடைசெய்து விடுவதற்கும் முற்பட்டு விடுவதுடன் இவை களைவிட கஷ்டமாக யிருக்கக்கூடிய மனோ விருப்பங்களையும் அடக்கி ஜெயித்து விடு கிறோம். இதனை மெய்ப்பிப்பதற்கு ஹஸ்ரத் அவர்களது சம்பவமே போதிய சான்றாகத் திகழ்கின்றது.

நாம் இரண்டு ரக்கஅத் தொழுகையை நிறைவேற்றியோ, அன்றி நபில் நோம்பு நோற்றோ அல்லது ஏதோ சில காசுகளை ஆண்டவனது பாதையில் செலவழித்தோ விடுவோமாகில், ஏதோ பெரிய வணக்கம் புரிந்து தியாகஞ்செய்துவிட்டதாக நமது மனதில் தோன்றுகிறது. அங்கு பார்த் தாலோ மாபெரும் ராஜாங்கமொன்று ஆண்டவனது விருப்பத்திற்காக தியாகஞ் செய்யப்பட்டிருக்கிறது; இவ்விடத்தில் ஒரு முழ ஒட்டுத்திண்ணைகூட கையிழக்கப்பட வில்லை. அங்குமட்டிலடங்கா மாடமாளிகை களின் எண்ணம் மனதைவிட்டகற்றப்பட் டிருக்கிறது. இங்கு ஒரு சிறிய பைகூட செல விடப்படவில்லை. அங்குமட்டிலடங்கா ஐசு வரியங்கள் அலக்ஷியஞ் செய்யப்பட்டிருக் கிறது. இங்கு நாம் அற்ப கெவர்தியையுங் கூட இழந்துவிடுவதற்கு சம்மதியாதவர்களா யிருக்கிறோம். அங்கு இராஜ வைபவ மகிமை கள் நாசப்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு அல்லா றசூலுடைய பிரீதிக்காக ஒரு தொப்பி அல்லது நமது பழக்கத்திலிருக்கும் ஒரு உடுப்புகூட மாற்றிக்கொள்வது பெரும் கஷ்டமாகத் தோன்றுகிறது. அங்கு இராஜ உடுப்புகள் ஆடு மேய்க்கும் ஒருவனிடம் மாற் றிக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வுலகினை வெறுத்துத்தள்ளியவர்களின் சரித்திரங்களைக்குறிப்பிடுங்கால், ஹஸ்ரத் இப் றாஹீம் அவர்களின் சரித்திரங்களைப்போல் வேறெங்கும் காணக்கிடைப்பதரிது. எனவே ஹஸ்ரத் அவர்களின் சம்பவமானது உல கத்தை வெறுத்துத்தள்ளியதைவிட ஒரு படி மேலாகவே யிருக்கிறதெனக் கூறலாம். மானிடன் சகல காரியங்களிலும் ஆண்ட வனின் ஞாபகத்தை மனதிற்கொண்டு ஐசு வரியங்களைச் சம்பாதிக்கலாம்; பெண்டீர் பிள்ளைகளுடன் கூடி வாழலாம்; ஆனால் சகல சுகபோகங்களும் இருக்கும்போது அவை களை வெறுத்துத் தள்ளுவது ஒரு பெரும் காரியமல்லவா? ஆகவே ஹஸ்ரத் அவர்கள் உலகத்தை வெறுத்துத்தள்ளினார்கள் என்று

மட்டுங்கூருமல் ஆண்டவனைத் தவிர யுள்ள யாவற்றையும் வெறுத்துத்தள்ளி விட்டார்களெனக் கூறலாம்.

முடிவாக ஹஸ்ரத் அவர்கள் உடுப்பை மாற்றிக்கொண்டு சற்று தூரஞ் சென்று ஒரு பொதும்பில் வாசஞ்செய்ய நாடி அதிலிருந்தார்கள். அதற்குப்பின் அங்கிருந்து சிறப்புத்தங்கிய மக்கமா நகருக்குச்சென்று ஹஸ்ரத் புலேல்பின் இயால் (ரலி) அவர்களிடம் உபதேசம் பெற்ருர்கள். பிறகு ஹஸ்ரத் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களினது சகவாசத்திலிருந்து அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டார்கள். இப்புதிய வாழ்க்கையில் ஹஸ்ரத் இப்ருஹீம் அவர்கள் காட்டிலிருந்து விறகு வெட்டித் தலையில் சுமந்து வந்து "நல்லதை நலவுக்குப் பகரமாக யார் விலைகொடுத்து வாங்குகிறதென" தெருத்தெருவாய் சத்தமிட்டுக்கொண்டு செல்வார்கள். அதாவது, விறகுக்குப் பகரம் கிடைப்பதில் சரி பகுதியை ஆண்டவனது பாதையில் தானஞ்செய்துவிட்டுப் பாதியைக்கொண்டு தங்களுடைய காலக்ஷேபத்தை முடித்துக்கொள்வார்கள். சிலகாலம் ஒரு தோட்டத்தில் காவல்புரிந்து அதில் கிடைக்கும் சம்பளத்தைப்பெற்று ஜீவனஞ்செய்து வந்தார்கள். அதுகாலை ஹஸ்ரத் அவர்கள் ஆண்டவனை மிகவே பயந்து நடந்துவந்தார்கள். இந்நிலைமையில் ஒரு நாளன்று தோட்டத்தின் எஜமான், ஹஸ்ரத் அவர்களை நோக்கி, ஒரு இனிய மாதுளம் பழத்தைப் பறித்துக்கொண்டு வரும்படி உத்தரவிட்டான். உடனே ஹஸ்ரத் அவர்கள் சென்று ஒரு பழத்தைப் பறித்துவந்தார்கள். அது புளிப்புடையதாகக் காணப்பட்டதால், அதனைப் பார்த்துஎஜமானுனன் கோபித்து, இத்தனை காலமாய் நீர் இத்தோட்டத்திலிருந்து கொண்டிருக்கும் நிலைமையில், இன்னமரத்தின்பழம் சுவையுடையதாக யிருக்கும் என்பதையுங்கூடத் தெரிந்துகொள்ளாதிருப்பது பெரும் ஆச்சரியமாகவே யிருக்கிறதெனக் கூறினுர். உடனே ஹஸ்ரத் அவர்கள், யான் கனி வர்க்கங்களைக் காவல்புரிவதற்காக நியமிக்கப்பட்டிருக்கிறேனே யன்றி அவைகளின் சுவையைத் தெரிந்துகொள்வதற்கு நியமிக்கப்படவில்லை எனக்கூறினுர்கள். இதனை எஜமானுனவன் கேட்டு, இவர் இப்ருஹீம் பின் அத்ஹம் போன்றிருக்கிருர்; இக்காலத்தில் அவர்களைத் தவிரயாரும் இவ்வளவு பேணுதலுடையவர்களாகயிருக்கவில்லை' என்று கூறினுன்.

இது ஒரு பக்கல் கிடக்க, ஹஸ்ரத் அவர்கள் பலக் தேயத்தின் அதிகாரத்தை வெறுத்து வந்ததுமுதல் அவ்வூர் வாசிகள் சதாவும் ஹஸ்ரத் அவர்களின் ஞாபகத்திலேயே இருந்து வந்ததுடன் அநேகர் அவர்களைத் தேடிக்கொண்டு பல யிடங்களுக்கும் அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள். இந்நிலைமையில் ஒருநாளன்று தாங்கள் "பக்தாத்" பட்டணத்தின் கடற்கரையில் உட்கார்ந்து சட்டையின் கிழித்தலுக்கு ஒட்டுப்போட்டுத் தைத்துக்கொண்டிருக்கும்போது பலக் வாசிகள் ஹஸ்ரத் அவர்களைத் தேடிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தார்கள். உடனே அன்னோர் ஹஸ்ரத் அவர்களை நோக்கி, தாங்கள் தேசத்திற்கு வந்து இராஜிய பரிபாலனம் நடத்த வேண்டுமெனக் கேட்டு ரொம்பவும் வற்புறுத்தினுர்கள். ஹஸ்ரத் அவர்கள் தங்கள் கையிலிருந்த ஊசியைக் கடலில் எறிந்துவிட்டு இந்த ஊசியைக் கடலிலிருந்து எடுத்து வருவீர்களானுல் நான் உங்களுடன் வருவதற்குத் தயாராகயிருக்கிறேன் எனக் கூறினுர்கள். அதற்கு அங்கு வந்திருந்தோர் யாவரும் சம்மதித்து பெரும் பிரயாசையோடு கூடியவரை தெண்டித்துப் பார்த்தும் காரிய சித்திபெற்ருர்களில்லை. ஆனுல் ஹஸ்ரத் அவர்கள் கடலை நோக்கி சமுத்திரத்திலுள்ள மச்சங்களே! என் ஊசியை எடுத்து என்னிடம் கொண்டு வாருங்கள் எனக் கூறியவுடனே, அநேக மச்சங்கள் பல ஊசிகளை வாயில் கொண்டு வந்தன. ஹஸ்ரத் அவர்கள் தங்கள் ஊசியைப் பார்த்து எடுத்துக்கொண்டு திரும்பச் சென்றுவிடும்படி சமிக்கைசெய்துவிட்டு பலக் வாசிகளை நோக்கி, எனக்கு இராஜியபரிபாலனஞ் செய்யவேணுமென்னும் விருப்பம் கொஞ்சமும் கிடையாது. ஆதலின், நீங்கள் சென்று நோக்கப்படி யாரையாகிலும் பாதுஷாவாகஏற்பாடு செய்து வைத்துக்கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டார்கள்.

ஹஸ்ரத் அவர்கள் அதிகாரத்தை வெறுத்து சுயபதியை விட்டுப் புறப்பட்டு வருங்காலை இராஜகுமாரரை பாற்குடித்துக்கொண்டிருக்கும் நிலைமையில் விட்டு வந்தார்களாதலின், அவர் வாலிபப் பருவத்தை அடைந்தவுடன் தந்தையின் வரலாறுகளை

விசாரித்தபோது, மக்கமாநகரி லிருப்பதாகத்தெரிந்து கொண்டார். உடனே அவர் பெரும் இராஜ வைபவத்தோடு தம் தாயாரையும், ஹஜ்ஜு செய்வதற்காக நானூயிரம் பேர்களையும் அழைத்துக்கொண்டு மக்கமா நகருக்கு வந்து சேர்ந்தார். ஹஸ்ரத் அவர்கள் புத்திரரைக்கண்டு அவர் மீதிலேற்பட்ட பிரீதியால் கழுத்தைக்கட்டி அணைத்தார்கள். உடனே ஏ இப்ருஹீமே! என்னை விடவேறொருவரைப் பிரீதி கொண்டிருக்கும் நிலைமையில் என்மீது பிரீதி கொண்டிருப்பதாகக் கூறுவது எப்படி? என்றொரு சப்தம் வந்தது. உடனே ஹஸ்ரத் அவர்கள் வானத்தை நோக்கி 'என் ஆண்டவா! நீயே என் குற்றத்தை மன்னிப்பாயாக' வெனப்பிரார்த்தித்தார்கள். உடனே இராஜ குமாரர் தந்தையின் மீதுள்ள அன்பின்மேலிட்டால் மதி மயங்கி உயிர் இழந்து விட்டார்.

காஜா கமாலுத்தீனும், பா. தா. வும்

(M. V. அப்துல்ஜப்பார் வரைவது)

லாகூர் வாசியும், லண்டன் வோக்கிங் மிஷ்ஷன் ஸ்தாபகரும், தா. இ. (தத்துவ இஸ்லாம்) வின் மாஜி ஆசிரியருமான காஜா கமாலுத்தீன் சாஹிப் 27-12-32-ல் தாருல் பகாயடைந்தார் என்பது யாவருமறிந்ததே. அவரிடம் போற்றற்குரிய குணவிசேஷங்கள் பலவிருந்தன வென்றாலும் அவருடைய கொள்கைகளைக்குறித்து இவண்விவரிப்பாம். அவர், தாம் நபி என்றும் ரசூலென்றும் வாதாடிச் சென்ற வழிகேடரான மிர்ஜா குலாம் அஹ்மத் காதியானியின் அத்தியந்த அருமை சிஷ்யரும், அவருடைய கொள்கைகளை ஏகதேசத்தில் ஒப்புக்கொண்டு அதனைப் பின்பற்றி நடந்து பிரசாரம்செய்து வந்தவருமாகும். காஜா சாஹிப் மிர்ஜாவினுடைய நுபுவ்வத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்று ஒருசிலர் செப்பினும் அவருடைய நூற்களை செவ்வனே ஆராய்ச்சி செய்தவர்கள் இவ்வாறு ஒருக்காலும் பொய்மொழி கூறத் துணியமாட்டார்கள். ஆகவே அவ்வாறு பிதற்றித்திரிவோர், அவருடைய நூற்களை தக்க முறையில் ஆராய்ச்சி செய்யவில்லை என்று நிச்சயமாய்க் கூறலாம். அவரால் இயற்றப்பெற்றுள்ள ஸஹீபயே ஆசிபிய்யா, கிருஷ்ண அவ்தார் (கிருஷ்ண அவதாரம்) என்னும் நூற்களில், "மிர்ஜாசாஹிப், ஜனங்களுக்கு நன்மாராயம் கூறவும், அச்சமூட்டவும் இறைவனுல் அனுப்பப்பட்டார்" என பற்பல இடங்களில் வரைந்திருக்கிறுர். இதனுல் நபி என்ன? மாபெரும் ரசூலென அவரை மதித்திருந்தார் எனப் புலனுகவில்லையா?

காஜா சாஹிப் பின்னும் இக்கெட்ட கொள்கையின்மீதே தன் வாழ்நாளைக் கடத்திச் சென்றுவிட்டார். இந்தக் காரணத்தினுலேயே அவரைப் பலரும் குறைகூறி கண்டித்து வந்ததோடு அவரால் இயற்றப்பெற்றுள்ள நூற்களுக்குத் தக்க மறுப்புகளும் எழுதி வெளியிட்டார்கள்; அவருடைய மிஷ்ஷனுக்கு உபகாரம் புரிவதில் அநேகக் குதர்க்கங்கள் ஏற்பட்டது. தம் கொள்கை விஷயமாய் காஜா சாஹிப் பலவாருய்ப் பிதற்றி வந்தாலும் தன் குருநாதரான மிர்ஜாவின் கொள்கைகளை ஏகதேசத்தில் பின்பற்றினவராகவேயிருந்து வந்தார். இதனைக் குறித்து பா. தா. 6-1-33-ல் வெளியான தா. இ. வில் வரைவதாவது:—

> லாஹூரிலுள்ள அமெரிக்கன் மிஷ்ஷனரிக் கலாசாலையில் கல்வி பயின்று வந்தகால், காஜா கமாலுத்தீன் பைபிளில் இனியில்லாத் தேர்ச்சி பெற்றுத் தாமொரு கிறிஸ்தவ மிஷ்ஷனரியாகும் தறுவாயிலிருந்தார். இதற்கு மற்றொரு காரணம், அவருக்கெழுந்த சந்தேகங்களை யெல்லாம் எந்த மௌலானு, மௌலவியாலும் நிவாரணம் செய்ய முடியாமற் போனதேயாகும். இப்படிப்பட்டவர் அந்த நரகப் படுகுழியுள் வீழ்ந்து மாண்டு போகாவண்ணம் காலம் சென்ற மிர்ஸா குலாம் அஹ்மதென்பாரே கரையேற்றிவிட்டார் என்பதே.

மற்றெல்லா மௌலவிகளின் போதனைகளெதுவும் காஜாவுக்குப் பிடிக்காமல் மிர்ஸாவின் போதனையைக் கொண்டே அவர் (காஜா) கரைசேர்ந்ததாக பா. தா. வரைகின்றார். இதனல்தான் மிர்ஸாவின் குருட்டு நம்பிக்கைகள் யாவற்றையும் காஜா அப்படியே ஒப்புக்கொண்டார் போலும். மேலும் தன்னுடைய சிஷ்யர்களிடம் மிர்ஜாவை ஒப்புக்கொள்ளும்படி பைஅத் நாமாவில் கையெழுத்தும் வாங்கினர் போலும். ஆகவே அவர் (காஜா) மிர்ஸாவின் உம்மத்துகளில் பிரதானமானவரென யாவருக்கும் எளிதில் புலனகும். இதைத்தான் பா. தா. வும் குறிப்பிடுகிறார்.

தவிர பா. தா. 1916-ம் வருடம் வரை நாஸ்தீகக் கொள்கையில் ஈடுபட்டிருந்ததாகவும் (வழிகேடரான மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியின் பிரதான சிஷ்யரான) காஜா கமாலுத்தீன்தான் இவரை (பா. தா. வை) கரை சேர்த்ததாகவும் குறிப்பிடுகிறார். நாஸ்திகம் என்பது சகல சிருஷ்டிகளையும் படைத்துக்காக்கும் இறைவனே கிடையாதென்று மறுப்பதாகும். இக்கொள்கையோ வெளில் கடும் குபிராகுமென்பது யாவருமறிந்ததே. எனவே இவர் 1916-ம் வருடம் வரை குப்ரியத்திலிருந்ததாக லஜ்ஜையில்லாது வரைகின்றார். அதற்குப்பின் நந்தீனுல் இஸ்லாத்தில் பற்றுக்கோடுடையவராய் மாறி பரிசுத்த இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டாரென்றால், அதுசமயம் அவருடைய நிகாஹைப் புதுப்பிக்கவேண்டிய அவசிய மேற்பட்டிருக்கும். அவ்வாறு தாம் செய்ததாக லஜ்ஜையில்லாது வெளியிடுவாரா? ஆனல் "குபிர்" விஷயம் அவரிடத்தில் ஒரு பொருட்டாகயில்லாதிருப்பதால், எடுத்ததற்கெல்லாம் உலமாக்கள் குபிர் பத்வா கொடுக்க முற்பட்டு விடுகிறார்களெனக் கூறி குபிரை இலேசாகக் கண்டு அதனை பரிகசிக்க முற்பட்டுவிடுகிறார். இவர், நாஸ்திகம், குபிரை உண்டாக்கிவிடமாட்டாதென ருசுபிக்க முன் வரட்டும் பார்ப்போம். அவ்வாறின்றி தாம் கூறியவைகளுக்கு எவ்வித நொண்டிக் காரணங்கூறி சப்பை வைத்துக் கட்டியபோதிலும் உலகம் அதனை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ள மாட்டாதென்பதை இவர் நன்குணர்வாராக.

மேலும் காஜாவுடன் தாம் லண்டன் சென்று வேலை செய்துவந்ததை இப்போது போற்றிப் புகழ்ந்து கூறுகின்றார். ஆனல் இவர் லண்டனிலிருந்து திரும்பிவந்த சமயத்தில், ஒக்கிங் மிஷன்காரர்களின் நடப்புகள் தமக்குப்பிடிக்காத காரணத்தினலும், காஜாவுக்கும் தமக்கும் சில விஷயங்களில் அபிப்பிராய பேதமேற்பட்ட காரணத்தினலுமே தாம் லண்டனைவிட்டுப் புறப்பட்டு வந்துவிட்டதாக அறிவித்தார். மேலும் அஹ்மதியக் கொள்கைகள் தமக்குச் சரியாகத் தோன்றவில்லையாகையால், ஒக்கிங் மிஷ்னிலிருந்து தமக்கு மாதா மாதம் கிடைத்துவந்த 200 ரூபாய் சம்பளத்தையும் உதறித்தள்ளிவிட்டதாக பதின்முறை எழுதிவந்த பா. தா. இற்றைக்கு அஹ்மதியாக்களின் மூலமாகவே தான், தான் இஸ்லாத்தைத் தழுவியதாகவும், அத்தலைவர்களான முஹம்மது அலி M. A. L. LB. யாலும், காஜா கமாலுத்தீனலும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட நூல்களே உலகத்தின் அஸ்திவாரத்தை இஸ்லாத்தின் பக்கல் சாரும்படி செய்துவிட்டது என்றும் வாயாரப்புகழ்ந்துபோற்றுகின்றார். சிலகால் தாம் அஹ்மதியுமல்ல காதியானியுமல்ல வென்று உறுதிகூறி அறுதிமானஞ் செய்வதும், மற்றொரு சமயம் அவர்களின் கொள்கைகள்தான் சரியானதென்றும் அவர்களாலேயே தான் உலகத்தில் பிரசார வேலை நடந்து வருகிறதென்றும் நயவஞ்சகத்தனமாய்வரைந்துவருவதும் இவருடைய ஜன்மத்தொழிலாக யிருந்துவருகிறது. ஒன்றுமறியா இளைஞர்களை வழிகெடுப்பதற்கு இவர் கையாளும் முறை இதுவேயாகும். எனவே சோதரர்கள் இவ்வாறான தீய பிரசாரத்தில் சிக்குண்டுழலாமல் ஈமானைக் காப்பாற்றிக்கொள்வார்களாக.

சிலோன் சந்தா நேயர்கட்கு!

சிலோனுக்கு வி. பி. செய்வதில் பல கஷ்டங்களும், சந்தாதார்களுக்கு வீண் செலவும் ஏற்படுவதால், அவ்விடத்திலுள்ள நமது சந்தாதார்கள் தங்கள் சந்தாவை கொளும்பிலுள்ள நமது ஏஜண்டு ஜனப் A. M. K. ஆலிம் சாஹிப் (220, 2-ம் கராஸ்ஸ்டீட்) இடம் செலுத்திவிடும்படி கோருகிறோம்.

ஞான தூதனும், பெரிய நாயகமும்

தூத்துக்குடியிலிருந்து ரெவரெண்டு பெரிய நாயகம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு மாதமொருமுறை வெளிவரும் 'ஞான தூதன்' என்னும் கத்தோலிக் மாத சஞ்சிகையின் 1933-ம் வருடம் ஜனவரிமீ இதழின் 31-ம் பக்கத்தில் மகமதிய மதம் என்னும் உபதலைப்பின்கீழ் ஒரு வியாசம் வரையப்பட்டிருந்தது. அதனைக் கண்ணுறும் எந்த முஸ்லிமும் ஆவேசங் கொள்ளாதிருக்க முடியாது. அதுவிஷயமாய் நமது ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சித்து தூத்துக்குடி பிரபல வர்த்தகர் ஆலீ ஜனுப் கான்பஹதூர் சி. கா. மு. ஷாஹுல்ஹமீது மரைக்காயர் அவர்களுக்கு எழுதிய கடிதப் போக்குவரத்தின் விபரம் பின்வருமாறு :—

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சோசைட்டி
25-2-33.

ஆலீ ஜனுப் கான்பஹதூர்

சி. கா. மு. ஷாஹுல்ஹமீது மரைக்காயர் அவர்கள் சமுகத்திற்கு, சென்னை அஞ்சுமன் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தார்களும், முத்தியால்பேட்டை வாசிகளும் எழுதிக் கொண்டது

உபய கைரியத் விருப்பம்

அவ்விடம் தூத்துக்குடியிலிருந்து ரெவரெண்டு பெரியநாயகம் என்பவரை ஆசிரியராகக் கொண்டு மாத மொருமுறை வெளிவரும் "ஞான தூதன்" என்னும் கத்தோலிக் மாத சஞ்சிகையின் 1933-ம் வருட ஜனவரிமீ இதழின் 31-ம் பக்கத்தில் மகமதிய மதம் என்னும் மகுடத்தின்கீழ், முஸ்லிம்களாகிய நாம், நமது உயிரினும் சிரேஷ்டமாகக் கருதிவரும் உலக தயாளர், சற்குண சீலர் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் விஷயமாய் அநேக தகாத அண்டப்புளுகுகளும், அவர்களது மாட்சிமை தங்கிய பதவிக்கு பங்கம் உண்டாகக்கூடிய விதமான ஆபாசங்களும் நிறைந்த கட்டுரை ஒன்று வெளிவந்திருக்கிறது. அதனைக்கண்ணுறும் எந்த சாதாரண முஸ்லிமும் சகித்துக்கொண்டு ஆவேசமடையாமலிருக்க முடியாதென்பது திண்ணம். எனவே அதுவிஷயமாய் நமது தமிழ் முஸ்லிம்களுக்கிடையே பெருங்கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதுடன் இங்குள்ள முஸ்லிம்கள் யாவரும் பெரும் ஆத்திரத்தோடு அதற்கான தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளத் தயாராக யிருக்கின்றார்கள். ஆகவே இது விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவித்து தங்கள்போலொற்ற முக்கியஸ்தர்கள் ஷெ ஆசிரியர் இழைத்துள்ள தவறுதல் விஷயமாய் அவரிடம் கேட்டு அதற்குள்ள பரிகாரந்தேட வேண்டுமென்று இங்குள்ள யாவரும் முடிவு செய்திருக்கிறார்கள். எனவே தாங்கள் அந்த ஆசிரியரை அழைத்து அவர் செய்த தவறு விஷயமாய்க் கேட்டு, அவர் செய்த தவறுதலை உணர்ந்து பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்குள்ள தக்க ஏற்பாடுகளைச் செய்வீர்களென எதிர்பார்க்கின்றோம். இது நாம் முக்கியமாய் கவனிக்கக்கூடிய விஷயமாகையால் சிரத்தையுடன் ஈடுபட்டுச் செய்யவேண்டியது நம்மீதுள்ள முக்கியக் கடமையாகும். ரொம்ப கவனிக்கும்படி கோருகிறோம். இவ்விடமும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடிவு செய்திருக்கிறோம். ஒருக்கால் அவ்வாசிரியர் தங்களுக்குக் கட்டுப்பட்டு வராவிடில் அவ்விடம் தாங்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்களென எதிர்பார்க்கிறோம். தங்கள் தாக்கலைப்பார்த்து இவ்விடமும் நடவடிக்கையை ஆரம்பித்துக் கொள்கிறோம். அவர் எழுதியுள்ள வியாசத்தின் காப்பி ஒன்று இத்துடன் வருகிறது பார்த்து ஏற்பாடு செய்வீர்களென்று எதிர்பார்க்கின்றோம் மற்றவை தங்கள் அருமை தபால் பார்த்து வஸ்ஸலாம்.

(Sd.) O. S. சதக்தம்பி (மரைக்காயர்)
(கெளர்வகாரியதரிசி)

M. M. மொய்தீன் தம்பி. & Co.
S. மௌலா முஹையித்தீன் (ஆலிம்)

A. S. முஹைறயித்தீன் சதக்கத்துல்லா (ஆலி[ம்]
நா. கு. முஹம்மது இப்ருஹீம் (ஆலிம்)
சே. கு. செய்யித் இப்ருஹீம் (ஹாஜியார்)
மு. க. அஹ்மத் சாலிஹ் (ஆலிம்)
அ. ற. அப்துற்றஹீம் (சாஹிப்)
அ. க. முஹைறயித்தீன் நத்தர் சாஹிப்
பாளையம் ஹபீப் முஹம்மது (ஆலிம்)
பிரபு முஹம்மது முஹியித்தீன் (சாஹிப்)
தா. செ. ஹாஜீஷாஹுல்ஹமீது (மரைக்கா[ர்]
அ. பி. மு. செய்யித் இப்ருஹீம் (சாஹிப்)

இக்கடிதம் கிடைத்தவுடன் ஜனப் மரைக்காயர் அவர்கள் அவ்வுத்தம கைங்கரியத்திலீடுபட்டு உடனே பிஷப்ரோச் அவர்களுக்கு ஒரு லிகிதம் வரைந்தனுப்பினுர்கள் அது வருமாறு:—

தூத்துக்குடி
27-2-33.

மகாகனம் பொருந்திய பிஷப்ரேச் அவர்களுக்குK. M. ஷாஹுல்ஹமீதுமரைக்காயர் எழுதிக்கொண்டதாவது, இவ்வூர் ரெவரண்டு பெரிய நாயகம் என்பரை ஆசிரியராகக் கொண்டு மாதமொருமுறை வெளிவரும் "ஞான தூதன்" என்ற கத்தோலிக்மாத சஞ்சிகையின் 1933-ம்ஸு ஜனவரிமீ இதழின் 31-ம் பக்கத்தில், எங்கள் உயிரினும் சிரேஷ்டமாகக் கருதிவரும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் விடியமாய் அபாண்டமாய் ரொம்பக் குறைவாகவும், பொய்யாகவும் எழுதி யிருப்பது பற்றி மதராஸ் முதல் கொளும்புவரையிலுமுள்ள எனது சமுகத்தாருக்குள் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டிருப்பதால், அது விஷயமாய் நான் தங்களை அவசியம் கண்டு பேசவேண்டுமென்று விரும்புவதால் இன்றையதினம் எத்தனை மணிக்கு சந்திக்கக் கூடு மென்பதைத் தெரியப்படுத்தினுல் வரசித்தமாயிருக்கிறேன்.

தங்கள் பதிலை எதிர்பார்க்கும்
(Sd) S. H. Marakayer

இதற்குக் கிடைத்தபதில் பின்வருமாறு:—

'பிஷப் இல்லம்'
தூத்துக்குடி 28-2-1933.

என தன்பார்ந்த மரைக்காயரவர்கட்கு தங்களை நேரில் சந்தித்து "ஞானதூதன்" பத்திரிகையில் தவறுதலாகப் பிரசுரிக்கப் பட்டிருப்பதுபற்றி தங்களுக்கு சமாதானஞ் சொல்ல மிக்க அவாக்கொண்டிருக்கிறேன். அதனை மொழி பெயர்த்தவர் நமது முஸ்லிம் சோதிரர்கட்கு வருத்தத்தைக் கொடுக்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் வெளியிடவில்லை. தாம் அறியாது முஸ்லிம்களுக்கு வருத்தமேற்படும்படியான விஷயம் நிகழ்ந்துவிட்டமைக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறுர். காலை 9-மணி முதல் 11-30-க்குள்ளும், மாலை 4 முதல் 7 வரையிலும் தங்களைச் சந்திக்க சௌகரியமிருக்கிறது. நமக்குள் ஏற்பட்டிருக்கும் அன்னியோன்யம் மிக்க பலமுள்ளதாகும். நமக்குள் எவ்வித விரோதப்பான்மையும் ஏற்படக்கூடாதென்பது எனது விருப்பம்.

ஆண்டவன் அருள் பாலிப்பானக.
(Sd.) Francis T. Roche.
Bishop og Tuticorin.

பிறகு இருவர்களும் கலந்து பேசிக்கொண்டார்கள். அது சம்மந்தமாய் கனம் மரைக்காயர் அவர்கள் நன்றி செலுத்தி லார்டு பிஷப்புக்கு வரைந்தனுப்பிய நிருபம் வருமாறு :—

'மரைக்காயர் மஹால்'
தூத்துக்குடி, மார்ச், 1

என தரும்பெரும்லார்ட் பிஷப்அவர்களுக்கு,

நேற்று நாமிருவரும் சந்தித்துப் பேசிய விஷயங்களை என் சமுகத்தினர்க்குத் தெரிவித்திருக்கிறது மன்றி, தங்களது 28-2-33 நிருபத்தின் நகலையும் அவர்களுக்கு அனுப்பியுள்ளேன். தூஷணைப் பிரசுர விஷயமாய், 'ஞானதூதன்' பத்திராசிரியர் விசனப்படுவதால் அப்பத்திரிகையின் மறு மலரில் அதை விளம்பரஞ் செய்யும்படிக்கு அவரைத் தூண்டுவீர்களென்று நம்புகின்றேன். மேலும் தாங்கள் அப்பிரசுர நகலை எனக்கு அனுப்ப ஏற்பாடு செய்யின் பேருதவி செய்ததாகும்.

இவ்விஷயத்தில் தாங்கள் மேற்கொண்ட யதார்த்த சிரத்தைக்கும், என் சமுகத்தினர் மீது தாங்கள் தெரிவித்த மனப்பூர்வமான சினேகபாவத்தின் பேறுருதி மொழிகட்கும் நன்றி செலுத்தக் கடவேனுகவும். தங்கள் மேன்மையான விவேகத்தை உபயோகித்து காரியாதிகளை நடத்தியிராவிடில் பிரமாத கிளர்ச்சிக் கிடந்தந்திருக்குமென்று கூறலாம்.

இங்ஙனம்,
(Sd) S. H. Marakayer.

இதற்குப்பின் கனம் மரைக்காயரவர்கள் நமக்குத் தெரிவித்திருப்பதாவது :—

தூத்துக்குடி, மார்ச், 1

சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்க கௌரவ காரியதரிசி ஜனப் O. S. சதக்தம்பி மரைக்காயர் அவர்கட்கு, சி. கா. மு. ஷாஹுல் ஹமீது மரைக்காயர் அஸ்ஸலாமு அலைக்கும். தாங்களும் மற்றும் சங்க அங்கத்தினர்களும் முத்தியால்பேட்டையிலுள்ள நமது சகோதிரர்களும் கையொப்பமிட்டு எனக்கனுப்பியிருந்த நிருபத்தை வாசித்ததுடன் அதினுள் அடக்கமாயிருந்த அச்சுப்பிரதியையும் கவனத்துடன் பார்வையிட்டேன். தாங்களெல்லோரும் இது விஷயமாய் சிரத்தைக்கொண்டு நடவடிக்கை நடத்த உத்தேசித்திருப்பதைக் கண்டு நன்றி பாராட்டுகின்றேன். நான் இவ்வூர்வாசியாகயிருந்தும் ‘ஞானதூதன்’ பத்திரிகையில் வெளிவந்திருக்கும் விஷயமாய் தங்கள் நிருபம் வரும்வரை நான் யாதொன்றும் கேள்விப்படவேயில்லை. மேலும் இவ்வூர் முஸ்லிம் சோதிரர்களும் அதில் பிரசுரிக்கப்பட்டிருப்பது தெரிந்து என் பார்வைக்குக் கொண்டுவரவுமில்லை. அவ்வாறு ஏற்பட்டிருக்குமாகில் உங்கள் தபாலுக்கு முன்பே அதற்குள்ள தக்க பரிகாரந் தேடியிருப்பேன். இப்போது உங்களுடைய கடிதம் அதனைப் பூர்த்தி செய்துவிட்டது.

அவர் அப்பிரசுரத்தில் வெளியிட்டுள்ள விஷயத்தை வாசிக்கும் எந்த முஸ்லிமும் எக்காரணத்தைக் கொண்டும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. ஆகையால் அது விஷயத்தில் நானும் உங்கள் எல்லோரையும் விட அதிக வருத்தங்கொண்டு இவ்வூர் கத்தோலிக் சபையாரின் தலைமை அர்ச்சகரான லார்டு பிஷப் ரோச் அவர்களைக்கண்டு கொள்ள வேண்டுமென 27-2-33 ல் எழுதிய லிகிதத்திற்கு பிஷப் எழுதிய பதிலும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

நானும் பிஷப்பும் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தகால், நிகழ்வுற்ற சம்பவத்தைக் குறித்து அவர் வெகுவாக விசனித்து நமது சோதிரர்கட்கும் அவர்களுக்கும் எப்போதும் பரஸ்பர சிநேக மிருந்துகொண்டு வருவதை எடுத்துக் கூறி இனியும் யாதொருவிதமான மனஸ்தாபமும் ஏற்படக்கூடாதென தாம் விரும்புவதாகக் கூறினார். அதோடு அடுத்து வரும் “ஞான தூதன்” மாசிகையில் பத்திராதிபரின் வருத்தத்தைத் தெரிவித்து வெளியிடுவதோடு எங்களுக்கிடையே நடைபெற்ற விஷயங்களைப் பத்திரிகைகளில் பிரசுரித்து விடுவதற்கு அனுமதியுமளித்தார். ஷெ பிஷப் ....அதுவிஷயத்தில் உண்மையாகவே தமது வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார் என்பதில் எனக்கு கொஞ்சமும் சந்தேகமில்லை. இதுவிஷயத்தை நான் தங்களுக்கு தெரியப்படுத்திக் கொண்டேன். இதற்கு தங்களுடைய பதிலை எதிர்பார்க்கிறேன்.

(Sd.) S. H. Marakayer.

(கனம் மரைக்காயரவர்கள் எடுத்துக் கொண்ட இப்பிரயாசைக்கு நாம் மிக மிக நன்றி செலுத்துகின்றோம். ஒருவரைப்பற்றி புகழ்ந்தோ இகழ்ந்தோ எழுதுங்கால் அவருடைய சரித்திரத்தை நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும் அவ்வாறின்றி தன் மனதில் தோன்றியபடி வரையத்துணிவது பெருந் தவறாகும். தான் இழைத்த தவறுக்கு மன்னிப்புத்தேடிக்கொள்வது ஒருவாறு அதற்குப் பரிகாரமாகக் கருதப்படினும் அனாவசியமாகவும் அறியாமலும் முஸ்லிம்களின் ஹிருதயங்களைப் புண்படுத்தியதற்குப் பரிகாரமாகாது எனவே “ஞான தூதன்” ஆசிரியர் தாம் ஏற்றுக்கொண்டபடி அடுத்துவரும் மாசிகையில், தாம் இழைத்த தவறுக்காக வருந்தி முஸ்லிம்களிடம் மன்னிப்புக்கேட்டும், தம்மால் வெளியிடப்பட்டுள்ள கட்டுரையை வாபஸ் வாங்கிக்கொள்வதாக அறிக்கை வெளியிட்டும் பகிரங்கப்படுத்தும்வரை முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள மனக்கொதிப்பு அடங்காதென்பது திண்ணம். ஆகவே அவ்வாசிரியர் கூடியசீக்கிரம் அவ்வாறுசெய்ய முற்படுவாராக ப-ர்)

நிரூபசாரம்

தென்னிந்திய மலாயா பிரயாணிகளுக்கு ஓர் வேண்டுகோள்.

சிங்கப்பூர், பினங், மலாயா, முதலிய நாடுகளுக்குப் பிரயாணஞ்செய்ய நாடுவோர் கவனிக்கவேண்டியது யாதெனில், ஸ்ட்ரைட்ஸ் செட்டில்மெண்டு கெவர்ன்மெண்டார் 25-12-32 முதல் அன்னிய அரசாங்கப் பிரயாணிகளுக்கு தலா 1-க்கு தலைவரியாக ரிங்கி 5=ஐந்துவீதம் வசூல் செய்வதென தீர்மானித்த புதிய உத்திரவு அமுலுக்கு வந்துவிட்டபடியால், காரைக்கால் பாண்டிச்சேரி முதலிய ஊர்களில் டிக்கட்டுப் பெற்று அவ்வூர்களில் கப்பல் ஏறுகிறவர்கள் பிரிட்டிஷ் குடிகளாயிருப்பினும் மேல்கண்ட ரிங்கி ஐந்தும் வாங்க உத்திரவிடப்பட்டு முன் கப்பல்களில் வந்த—காரைக்காலில் கப்பலேறிய பிரிட்டிஷ் குடிகளிடமும் ரிங்கி ஐந்து வசூலிக்கப்பட்டிருப்பதால், இனிமேல் பிரிட்டிஷ் இலாக்கா வாசிகள் சிறிய சௌகரியத்தைக் கருதி பிரஞ்சு துறைமுகங்களில் கப்பலேறி ஐந்து ரிங்கியை நஷ்டமாக்கிக்கொள்ளாமலிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுஜன ஊழியன்,
மு. முஹம்மது ஷரீப்,
439, நார்த் பிரிட்ஜ் ரோடு,
சிங்கப்பூர்.

இரங்கூன் தர்காப் பள்ளிவாசல்.

டிரஸ்டிகளின் நியமனம்.

4-2-33-ல் தர்காப் பள்ளிவாசல் டிரஸ்டி அண்டு அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டித் தேர்தல் பொது ஜமாஅத் கூட்டம்:—

சென்ற பிப்ரவரிமாதம் 4-ந்தேதி சனிக்கிழமை மாலை 9 மணிக்கு தர்காப் பள்ளியில் ஏற்கனவே விளம்பரம் செய்திருந்தபடி முத்தவல்லிகள் அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி அங்கத்தினர்கள் தேர்தலுக்காக சோலிய முஸ்லிம் ஜமாஅத்தார்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ஜனாப் ஷேக் இஸ்மாயில் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஏராளமான ஜமாஅத்தார்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

கன்வீனர் ஜனாப் மு. ம. முஹம்மது சாலிஹ் அவர்கள் கன்வீனர்கள் சார்பாக ஜமாஅத்தார்களுக்கு நன்றி செலுத்திவிட்டு வந்திருந்த விளம்பரங்கள், மனுக்கள் ஆகியவற்றுடன் அபேக்ஷகர்களில் மனுக்களை வாபஸ் வாங்கிக்கொள்வதாக வந்திருந்த நிருபங்களையும் சமர்ப்பித்து, ஸ்தானங்கள் யாவற்றிற்கும் போட்டியில்லாமலிருப்பதைத் தெரிவித்தார்.

முத்தவல்லி ஸ்தானத்துக்குரிய பின்வரும் ஐந்து அபேக்ஷகர்களும், அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டிக்குரிய 15 அபேக்ஷகர்களும் போட்டியில்லாமல் முறையே முத்தவல்லிகளாகவும் அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி அங்கத்தினர்களாகவும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாக தலைவர் தெரிவித்தார்.
அவர்கள் நாமங்களாவன:—

முத்தவல்லிகள்.

1. ஜனாப் நா. ந. அல்லாப்பிச்சை அவர்கள் (பொதுத் தொகுதி.)
2. ,, கதீப் முகம்மது உஸ்மான் சாஹிப் அவர்கள் (பொதுத் தொகுதி.)
3. ,, ஹாஜி. கொ. செ. முஹம்மது மொஹிதீன் அவர்கள் (பொதுத் தொகுதி.)
4. ,, கு. சி. ஆ. முஹம்மது சுல்தான் அம்பலம் அவர்கள் சோதுகுடி பெரிய பட்டரை.
5. ,, அ. மு. அப்துல் கரீம்கனி எம். எல். ஸி. அவர்கள் சோதுகுடி நெசவுப் பட்ரை.

அப்பாயிண்ட்மேண்ட் கமிட்டி.

பொதுத் தொகுதி.

1. ஜனாப் அ.மு. முஹம்மது ஷரீப்அவர்கள்.
2. ,, ச. கான் முஹம்மத் ராவுத்தர்.
3. ,, ம. பிச்சை ராவுத்தர் அவர்கள்

4. ஜனுப் ப. கெ. பக்கீர் ராவுத்தர் அவர்கள்.
5. ,, சே. கா. ஷேக் முஹம்மது ராவுத்தர் அவர்கள்.
6. ,, அ. அஹ்மது இப்ராஹிம் ராவுத்தர் அவர்கள்.
7. ,, தி. பி. அப்துல் ராவுத்தர் அவர்கள்.
8. ,, க. நல்லப்பிள்ளை அவர்கள்.
9. ,, ம. செ. துல்கர்னேன் அவர்கள்.

அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி
சோதுகுடி பெரிய பட்ரை.

10. ஜனுப் கொ. ம. கச்சி ராவுத்தர் அவர்கள்.
11. ,, க. ந. மீராப் பிள்ளை அம்பலம் அவர்கள்.
12. ,, வெ. மு. காசிம் ராவுத்தர் அவர்கள்.

அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டி
சோதுகுடி நேசவுப் பட்ரை.

13. ஜனுப் பூ. க. சிக்கந்தர் அவர்கள்.
14. ,, லெ. செ. முஹம்மது ராவுத்தர் அவர்கள்.
15. ,, மொ. கா. பக்கீர் மொஹிதீன் அவர்கள்.

மேற்கண்ட அனைவர்களுடைய தேர்தலை கூடியிருந்த ஜமாஅத்தார்கள் ஏக மனதாய் அங்கீகரித்தனர். முடிவுரை கூறி, பாத்திஹா ஓதப்பட்டு ஜனுப் கு. சி. ஆ. முஹம்மது சுல்தான் அம்பலம் அவர்களால் சிற்றுண்டி வழங்கப்பட்டு வந்தனேபசாரங் கூறி சுமார் 10-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

வ. ந. ஷேக் இஸ்மாயில்,
தலைவர்.

ஹைகோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட கன்வீனர்கள்.

மௌலவி கா. மு. சுல்தான் அஹ்மத் சாஹிப் (கதீப்தர்கா பள்ளி).
மு. முஹம்மது சாலிஹ ராவுத்தர்.
நொ. ம. மீராப்பிள்ளை ராவுத்தர்.

கம்பம்

இஷா அத்துல் இஸ்லாம் சங்கம் :—இச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் இஸ்லாமியப் பிரசாரம் பாராட்டத் தக்கனவேயாகும். அநேகர் மனமுவப்போடு அச் சங்கத்தின் மூலம் நந்தூய்மைவாய்ந்த இஸ்லாம் மதத்தைத் தழுவி வருகின்றார்கள். சமீபத்தில் நாரணத்தேவன் பட்டியிலுள்ள கிறிஸ்தவரொருவர் தம் குடும்பத்துடன் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொண்டார். அல்லாஹ்தஆலா அன்னோர்கட்கு மேன்பதவி அளிப்பானாக.

என ஹாஜி அல்லாபிச்சை ருவுத்தர் பொக்கிஷதார். தெரிவிக்கிறார்.

கூத்தானல்லூர்

அஞ்சுமன் குத்தாமுல் இஸ்லாம் (சன்மார்க்கத் தொண்டர் சபை) :—இச்சங்கத்தாரின் 1932-ம் வருஷத்திய வரவு செலவு நடவடிக்கைகளடங்கிய ரிபோர்ட்டும் சட்ட திட்டங்களும் வரப்பெற்றோம். சபையின் நோக்கங்கள் மிக மிக போற்றத்தக்கனவாகவே யிருப்பதுடன் உத்தியோகஸ்தர்களின் அந்தஸ்து, அவர்கள் ஆற்றவேண்டிய தொண்டின் விபரமும் தக்க முறையில் விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. தவிர சங்கம் தோன்றிய இச்சொற்ப காலத்திற்குள் அங்கத்தினர்கள் சேர்ந்துள்ளதையும், கூட்டங்கள் நடை பெற்றிருப்பதையும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருப்பதையும், இலவச வாசகசாலை அமைக்கப்பட்டிருப்பதையும் இன்னும் பற்பல தரும கைங்கரியங்களில் ஈடுபட்டுத் தொண்டாற்றி வந்திருப்பதையும், சிக்கனமான வரவு செலவில் தக்க வேலைகள் நடைபெற்றிருப்பதையும் பார்த்து சந்தோஷமடைகிறோம் இச்சபை மார்க்க பக்தியில் தலைசிறந்து விளங்கும் ஆலீ ஜனுப் அல்ஹாஜ் அ. ம. அப்துல்லா சாஹிப் அவர்களின் தலைமையின்கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாலும், ஆலீ ஜனுப் ஹாஜி ஜ. மு. முஹம்மது இஸ்மாயீல் ருவுத்தர் அவர்கள் இதன் விசேஷப் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்து வாலிபர்களுக்கு ஊக்கத்தை அளித்திருப்பதாலும், ஜனுப் அல்ஹாஜ் கதீப் சா. முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்கள் மிக ஊக்கத்தோடு உழைத்து வருவதாலும், கௌரவ காரியதரிசி ஜனுப் லெ. அ. முஹம்மது யாசீன் முதலிய அங்கத்தினர்கள் சங்கத்தின் நோக்கங்களை தக்க முறையில் நடத்தவேண்டுமென கங்கணங் கட்டிக் கொண்டிருப்பதாலும் இவ்வாறான தக்க முறையில் நடைபெற்று வருகிறதெனக் கருதுகின்றோம்.

நன்றி பாராட்டுதல்

நமது சங்கத்தின்மீது பேரன்புபூண்டு சதா நம்அரும் மாசிகையின் அபிவிர்த்தியை நாடி உழைத்துவரும் பொதுநலப்பிரியர் ஆலீ ஜனுப் கோ. அ. பகீர் முஹம்மது சாஹிப் அவர்கள் நம் ஹிபாஜத்தின் அபிவிர்த்தியை நாடி பினங், ஈப்போ சென்றிருந்தக்கால் பாக்கி சந்தாக்களை வசூலித்தும் அநேக புதுச் சந்தாக்களை சேர்த்தனுப்பியும் உதவிபுரிந்திருக்கின்றார்கள். அவ்விடம் சென்றக்கால் ஆலீ ஜனுப் அல்ஹாஜ் முஹம்மது நூருத்தீன் அவர்களும், ஜனுப் N. K. முஹம்மது கவ்ஸ் சாஹிப் அவர்களின் ஏஜண்டுகளும், ஜனுப் V. O ஹஸன் முஹம்மது அவர்களும் இவ்வுத்தம சேவையிலீடுபட்டு தக்க உதவிபுரிந்திருக்கிறார்கள். அல்லாஹுத ஆலா இன்னவர்களின் முயற்சிக்கு தக்க பயனளிப்பானாகவும். இன்னவர்களுக்கு எங்களின் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்திக்கொள்கிறோம்.

மானேஜர்,

காலண்டர்கள் வரவு.

K. M. முஹம்மது கவ்ஸ் & Co:-சென்னை, நாகை, பினங், சிங்கப்பூர், ரெங்கூன் முதலிய இடங்களில் பிரபல்ய வியாபாரம் செய்பவர்களும் கமிஷன் ஏஜண்டுமாகிய மெஸர்ஸ் K. M. முஹம்மது கவ்ஸ் & கம்பெனியாரிடமிருந்து 1933-ம் வருஷத்திற்குள்ள காலண்டரொன்று வரப்பெற்றோம். அது கண்களைக் கவரத்தக்கனவாகவும் அதன் மத்தியில் மதீனா முனவ்வராவின் அழகிய தோற்றம் அமைக்கப்பெற்றதாகவும் தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதாகவும் பிராஞ்சு ஆபீஸ்களின் நாமங்கள் வரையப்பெற்றனவாகவும் திகழ்கின்றது.

S. A. அல்லாப்பிச்சை & Co. :—சிங்கப்பூர் பீச்சுரோட் பிரபல வியாபாரியும் எஸ்டேட் சப்ளை செய்பவர்களுமாகிய மெஸர்ஸ் S. A. அல்லாப்பிச்சை & Co. அவர்களிடமிருந்து அழகிய காலண்டரொன்று வரப்பெற்றோம். அதன் மத்தியில் சிங்கை கம்பங்காளானில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிவாசலின் போட்டோ கண்களையும் ஹிருதயங்களையும் கவரத்தக்கவிதமாய் பொறிக்கப்பட்டிருக்கிறது. அப்பள்ளியின் தோற்றத்தைக் கண்ணுறும் எவரும் ஆச்சரியப்படாதிருக்க முடியாது.

M. பீர் முஹம்மது A. ஜமால் முஹம்மத் & Co:—கிள்ளான் பிரபல்ய வர்த்தகர்களாகிய மெஸர்ஸ் M. பீர் முஹம்மது A. ஜமால் முஹம்மது & Co. அவர்களின் காலண்டரொன்று வரப்பெற்றோம். அதன் மத்தியில் சிலாங்கூர் சுல்த்தான் அவர்களின் அரண்மனையின் தோற்றம் மிக்க அழகிய முறையில் அதற்குச் சமீபத்திலுள்ள விருக்ஷங்களுள்பட தக்க முறையில் பொறிக்கப்பட்டும் அவர்களுக்குள்ள பிராஞ்சு ஆபீஸ்களாகிய பினங்கு, சிரம்பான்போர்ட்டு சுவிட்டன்ஹாம் ரெங்கம் காப்பார் நாகப்பட்டணம், முஜகிரி இவைகள் வரையப்பெற்றனவாகவும் தினம் ஒரு ஷீட் கிழிக்கக்கூடியதுமாகவும் திகழ்கின்றது.

இஷா அத்துல் ஹஸனுத்

பீதர்ஜமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலையின் ஸ்தாபகரும், ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப, ஷை கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானு மௌலவீ அல்ஹாஜ் அப்துல் காதிர்பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனுல் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்து பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைக் கண்ட, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானு மௌலவீ அல் ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னுட்டில் மிருதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின், அளவற்ற பிரயோசனமேற்படுமெனக் கருதியதாலும், அதனைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில் நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன்மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும், அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே இஃது நம்மவர்களுக்குத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர்பார்க்கின்ருேம்.

கிரயம் ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :— மானேஜர்,
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்.

F. M. S.& S. S. ஏஜெண்டு,
மெஸர்ஸ். K. A. பகீர் முஹம்மது சாஹிப் & Co.,
27, ரம்பா ஸ்டீட், கிள்ளான்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.